தமிழீழ ஆவணக் காப்பகம்



# எரிமலை

ஒகஸ்ட் – செப்டெம்பர் 1997

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# அக்கறைப் பூக்கள்

எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,
வாசகனின் வணக்கம்.

தொடர்ந்து எரிமலை இதழை வாசித்து, அதனை சேமித்து வரும் நேசனாகிய நான் விமர்சனம் எழுத விழைந்தாலும் இந்திய சகோதரர்களின் கருத்துக்களுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டி பின் நின்றுகொள்வேன். ஏனெனில் எமக்கு இங்கு விரைவான, உண்மையான செய்திகள் கிடைப்பதோடு நாமும் ஏதாவது வழிகளில் போராட்டங்களில் பங்கு கொள்ள வழிகளும் நிறைய உண்டு. ஆனால் அங்கு அவர்களுக்கு தவறான செய்திகள் கிடைப்பதற்கான சந்தர்ப்பங்கள் ஏராளம். எரிமலை மூலம் செய்திகள் தாமதமாகக் கிடைத்தாலும், உண்மையை உணர்ந்து திண்மையுடன் எழுதும் வன்மையான கடிதம் மூலம் போராட்டத்திற்கு உரமும் அவர்களுக்கு ஊக்கமும் கிடைக்கும் என்று நம்புகின்றேன்.

எரிமலையின் பணிக்கு எனது வாழ்த்துக்கள்.

அன்புடன்
கோ.ஸ்ரீசங்கர்
சுவிஸ்.

★★★

அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய எரிமலை ஆசிரியர் குழுவிற்கு,
வணக்கம்.

தங்களின் எரிமலை இதழை தவறாது படித்து வரும் வாசகர்களில் நானும் ஒருவன். பிரான்ஸ் நாட்டுக்கு நான் வந்த நாள்முதல் எரிமலை சஞ்சிகையைப் படித்து வருகிறேன். பிரான்சிற்கு நான் அண்மையில்தான் வந்திருந்தேன். புகலிட வாழ்வில் இப்படி ஓர் சஞ்சிகை விடுதலை உணர்வுடனும் தேசப்பற்றுடனும் தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கி வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும் தங்களது சஞ்சிகையின் வடிவமைப்பு ஆக்கங்கள் அனைத்தும் மிகவும் தரம் உள்ளதாக இருப்பதையிட்டு சந்தோஷமடைகிறேன். எரிமலையின் பணி மேன்மேலும் தொடர எனது வாழ்த்துக்கள்.

நன்றி.

இப்படிக்கு
எரிமலை வாசக அன்பன்
நெல்லையூர் க.மோகன்

★★★

அன்பின் இனிய எரிமலை ஆசிரியர் குழுவிற்கு,
வணக்கங்கள்.

மே மற்றும் ஜூன் 97 எரிமலை இதழ்கள் கிடைக்கப் பெற்றோம். நன்றி.

சொந்த நாட்டிலேயே அகதிகளைப் போல் இந்திய சிறைக்கோட்டத்தில் வாழ்ந்துவரும் எங்களுக்கு, ஈழத்தின் உண்மையான போர் நிலவரங்களை தெரிந்து கொள்ள 'எரிமலை' யின் வரவு பேருதவியாய் உள்ளது.

சந்திரிகாவின் சிங்கள இனவெறி அரசு உண்மையான போர்ச் செய்திகளை சிங்களப் படை வீரர்களின் கொடுமையான, கீழ்த்தரமான, செயல்களை ஏதுமறியா அப்பாவித் தமிழ் மக்களின் இன்னல்களை, வீரஞ்செறிந்த விடுதலைப் புலிகளின் வெற்றிகளை மறைத்து, தணிக்கை செய்து வருகிறது. இந்நிலையில் "எரிமலை" செய்திகளைக் கொண்டே எம் மக்களிடம் கருத்துரை (பிரச்சாரம்) செய்து வருகிறோம்.

சிங்கள இனவெறி அரசுக்கு ஆதரவாக அமெரிக்க வல்லதிகார அரசும், பாகிஸ்தானிய அரசும், இஸ்ரேலிய படையும் ஈழ நிலத்தில் தமிழினத்தை அழிக்க களமிறங்கிய நிலையில் இந்திய நரியரசும் துணைபோகிறது. இதைக் கண்டும் எந்தமிழர் உள்ளத்தில் சினத்தீ எழவில்லையே என உள்ளம் குமைகிறது.

"மானத்தோடு தமிழன் வாழ்ந்தான் என்ற ஒரு வரலாறு வேண்டும்! இல்லையேல்....

வீரத்தோடு போரிட்டு வீழ்ந்தான் என்ற வரலாறு வேண்டும்!" என்ற புலித் தலைவர் பிரபாகரனின் கூற்றை மெய்ப்பிப்போம்.

'எரிமலை' இதழ்களை தொடர்ந்து அனுப்பி உதவுக. நன்றி!

வாழ்க விடுதலைப்புலிகள்! வெல்லட்டும் தமிழீழம்!

அன்புடன்
தமிழ் வேங்கை
விழுப்புரம், தமிழ்நாடு
இந்தியா.

★★★

"தமிழன் என்று சொல்லடா
தலைநிமிர்ந்து நில்லடா"

அன்பிற்கினிய எரிமலை ஆசிரியர் குழுவிற்கு,

என்றும் அன்புடன் எஸ். தர்மராஜ் எழுதும் மடல். நானும் எனது தோழர்களும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டுள்ளோம். மேலும் எங்களுக்கு "உலகத் தமிழர்" இதழ் வந்து கொண்டு இருக்கிறது. மேலும் நான் எனது சென்னை நண்பர்கள் மூலம் எரிமலை மாத இதழை படிக்க நேர்ந்தது. அந்த சஞ்சிகையை படித்துப் பார்த்த பிறகு நல்ல பல தகவல்களை அறிந்துகொண்டேன். நான் அதை நேரடியாகப் பெற விரும்புகின்றேன். எனவே தயவுசெய்து ஒவ்வொரு மாதமும் தவறாது எரிமலையை எனது விலாசத்திற்கு அனுப்பி வைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடன் உள்ள தோழர்கள் அனைவரும் "எரிமலை" படிப்பதற்காக மிகுந்த ஆவலாக இருப்பதால் தயவு செய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நமது போராட்டத்தில் ஈடுபடும் விடுதலைப்புலிகள் மற்றும் பெண் புலிகள் அனைவரும் வெற்றிபெற வாழ்த்துகிறோம்.

எம் தலைவர் திரு.வே பிரபாகரன் முயற்சி என்றென்றும் சிறக்க எமது நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

"வாழ்க தமிழ்
வெல்லட்டும் தமிழீழம்"

எஸ். தர்மராஜ்
பீகாவில் பட்டி
தமிழ்நாடு.

★★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உள்ளே...




திலீபனும் பின்வந்த
பத்து ஆண்டுகளும்
– பக்கம் 04





சந்திரிகாவும் – பிரபாகரனும்
பாதை திறப்புப் போரும்
– பக்கம் 08





கடலிலே காவியம்
படைப்போம்
– பக்கம் 12





தரைப்பாதையின்
போரியல் நோக்கம்
– பக்கம் 22





உதைக்கும்
காலுக்கு முத்தம்
– பக்கம் 26





ஜெனிவாவில்
தமிழர் குரல்
– பக்கம் 33

★ சிங்களக் கட்சிகளின் சுயரூபம்
– பக்கம் 07

★ பாரிய சவால்களை
எதிர்கொள்ளும்
இராணுவ விநியோகம்
– பக்கம் 15

★ புலிகள் உயிர்த்தெழுகின்றனரா?
– பக்கம் 17

★ 'ஜயசிக்குறுய்'
யதார்த்தங்களும்
கற்பனைகளும்
– பக்கம் 18

★ மீளமுடியாத நெருக்கடி
– பக்கம் 21

★ 'ஒரே நாடு – ஒரே தேசியம்'
அவசியமற்ற தீர்வு?
– பக்கம் 24

★ தூது
– பக்கம் 30

★ புலம்பெயர்தலும் வாழ்வும்
– பக்கம் 35

★ அழகான நியாயங்கள்
– பக்கம் 38

★ பொருந்தாத நிலைப்பாடுகள்
– பக்கம் 41

★ முற்றுகை
– பக்கம் 44




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# தியாகி திலீபன் ஒரு இலட்சிய நெருப்பு

எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைப் படைத்திருக்கிறது வீரகாவியங்களைப் படைத்திருக்கிறது; அர்ப்பணிப்புகளைச் செய்திருக்கிறது. இவை எல்லாம் எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய வீரசாதனைகள். ஆனால் எனது அன்பான தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது; வியக்கத்தக்கது; எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது. சாத்வீகப் போராட்டக் களத்தில் தன்னைப் பலிகொடுத்து ஈடு இணையற்ற ஒரு மகத்தான தியாகத்தைத் திலீபன் புரிந்தான். அவனது மரணம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி தமிழீழப் போராட்ட வரலாற்றில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி, தமிழீழ தேசிய ஆன்மாவை தட்டி எழுப்பிய நிகழ்ச்சி; பாரத நாட்டைத் தலைகுனிய வைத்த நிகழ்ச்சி; உலகத்தின் மனச்சாட்சியைச் சீண்டிவிட்ட நிகழ்ச்சி. திலீபன் யாருக்காக இறந்தான்? எதற்காக இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தமென்ன? அவனது இறப்பு ஏன் ஒரு மகத்தான நிகழ்ச்சியாக அமைந்தது? திலீபன் உங்களுக்காக இறந்தான்; உங்கள் உரிமைக்காக இறந்தான். உங்கள் மண்ணுக்காக இறந்தான், உங்கள் பாதுகாப்பிற்காக இறந்தான். சுதந்திரத்திற்காக; உங்கள் கௌரவத்திற்காக இறந்தான். தான் நேசித்த மக்களுக்காக தான் நேசித்த மண்ணுக்காக, ஒருவன் எத்தகைய உயர்ந்த உன்னத தியாகத்தைச் செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்தான் அவன் செய்திருக்கிறான். ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன் ஆனால் உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம். நான் திலீபனை ஆழமாக நேசித்தேன். உறுதி வாய்ந்த ஒரு இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன் மீது அளவுகடந்த பாசம் எனக்குண்டு. அவன் துடிதுடித்துச் செத்துக்கொண்டிருக்கும் பொழுதெல்லாம் என் ஆன்மா கலங்கும் ஆனால் நான் திலீபனை ஒரு சாதாரண மனிதப் பிறவியாகப் பார்க்கவில்லை. தன்னை எரித்துக் கொண்டிருக்கும் ஒரு இலட்சிய நெருப்பாகவே நான் அவனைக் கண்டேன். அதில் நான் பெருமை கொண்டேன் இலட்சிய உறுதியின் உச்சக்கட்டமாக திலீபன் தன்னை அழித்துக் கொண்டான் அவன் உண்மையில் சாகவில்லை. காலத்தால் சாகாத வரலாற்றுப் புருஷனாக அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

(சாகும்வரை உண்ணாவிரதமிருந்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட தியாகி திலீபனின் மறைவு குறித்து தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் தமிழீழ மக்களுக்கு விடுத்த செய்தியின் ஒரு பகுதி இது.)



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

★

பதினைந்தாம் ஆண்டு

ஓகஸ்ட் 1997

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

*C/O T.C.C-France,*

*341, Rue des Pyrenees,*

*75020 Paris.*

*Tel: 01 - 43 58 11 42*

# தமிழீழம் - சிறீலங்கா: இருவேறு நாடுகள்

"நாங்கள் நிச்சயமாக தமிழீழம் காண்போம். நான் அதை வானில் இருந்து பார்ப்பேன்.

*திலீபன் (15.09.87)*

தமிழர்களின் விடிவுக்கான அரசியல் போராட்டப் பாதையில் தடைக்கற்களை இட்டு, சிங்கள இனவாத அடக்குமுறையையும் அதன் மேலாண்மையையும் பாதுகாக்க பாரதம் முற்பட்டபோது, தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைப் பாதுகாப்பதற்கான இலட்சிய யாத்திரையில் உடலால் வீழ்ந்த திலீபனின் பத்தாண்டு நினைவஞ்சலிகள் உலகம் பூராவும் நினைக்கப்பட்டு வருகின்றன.

போராளி என்பவன் எளிமையும், இனிமையும் கொண்ட கொள்கைப் பற்றாளன் என்ற சமூகப்பார்வைக்கு இலக்கணமாக வாழ்ந்து தமிழர் வரலாற்றில் உயிர்த்த திலீபனின் அரசியல் இலட்சியம் – தமிழீழம் – இன்று இப்பூமிப் பந்திலே ஆழமாகப் பதிந்துள்ளது.

இவ் அரசியல் நிதர்சனத்தை நிராகரிக்க முயலும் சமாதான முன்னெடுப்புக்களும் தீர்வுப்பொதிகளும் நேர்மையானவையாக இருக்கமுடியாது. தனது தீர்வுப்பொதி பற்றியும் 'சமாதானத்திற்கான போர்' என்ற இன அழிவுப் போர் பற்றியும் உலகம் பூராவும் பிரச்சார நாடகம் நடாத்தும் சந்திரிகா அரசு தமது இனவாத அதிகார ஸ்தானத்தைக் காப்பாற்ற 'ஒரு நாடு – ஒரு மக்கள்' என்ற சிங்கள இனவாத 'துட்டகைமுனு பாணி' அரசியலை ஆரம்பித்துள்ளார். இவரது இம் முன்னெடுப்பை வழிபற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட சிங்கள பௌத்த இனவாத அமைப்புக்கள், சிங்கள ஆணைக்குழு தயாரித்த அறிக்கையை சிங்கள மக்கள் முன்வைத்து தமது இனவாத வெறியூட்டலை மேற்கொண்டு வருகின்றனர். பலம்மிக்க பௌத்த மதவாத பீடங்கள் தமிழர்களுக்கு என எதுவித நியாயபூர்வமான அடிப்படை உரிமைகளை வழங்காத – தமிழர்களின் அடிப்படைக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாத – தீர்வுப் பொதியை, சிங்களத்துக்கு வந்த ஆபத்து என விபரிக்கின்றனர்.

தமிழர்களும் சிங்களவர்களும் இரு வேறுபட்ட இனங்கள். அவர்களுக்கென வேறுபட்ட அடையாளப்படுத்தப்பட்ட பாரம்பரிய தாயகங்களும் சமூகக் கலாச்சரப் பண்பாட்டு வாழ்முறையும் உண்டு. தமிழர்களின் பாதுகாப்பு என்பது அவர்களது அடையாளம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, சர்வதேச சமூகத்தினால் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட தேசிய இனங்களுக்கான உரிமைகளும் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படுவதிலேயே தங்கியுள்ளது. இரு மக்கள் சமூகங்களிற்கிடையிலான சமாதான வாழ்வை, ஒரு மக்கள் சமூகம் மற்றைய மக்கள் சமூகத்திற்கு வழங்கும் சலுகைகள் என்ற பதத்தினூடாக பார்க்கும் சிங்கள அரசு இன்று அப்பட்டமாக, சிறீலங்கா என்பது ஒரு இனத்துக்கு மட்டும் உரித்துடைய பிரதேசம் என பிரகடனப்படுத்துகின்றது. மாறாக, தமிழர்கள், தமிழீழம் தமிழர்களுக்குரிய தனித்துவமான தேசம் என்பதை பிரகடனப்படுத்துவதே எம்முன் உள்ள ஒரு நேர்மையான தீர்வுக்கான வழிமுறையாகும்.

திலீபன் அன்று யாழ் கோட்டை முன் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க உரையில் குறிப்பிட்டதைப் போல், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் இன்று சிங்களவர் கொடி கைமாறிய வரலாறு மாற்றப்பட்டு புலிக்கொடி பட்டொழி வீசிப்பறக்கும் காலமே தமிழர்களின் அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றப்பட்ட உண்மையான சமாதானம் நிலவும் காலகட்டமாகும்.

அந் நிதர்சனமான வார்த்தைகளை மனதில் பதித்து தமிழீழம் என்ற எமது தேசத்தை சிங்கள இனவாத அடக்குமுறைகளிடமிருந்து பாதுகாக்க உழைப்பதே அந்த உன்னதமான மாவீரன் லெப். கேணல். திலீபனுக்கு தமிழர்கள் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# திலீபனும் பின்வந்த பத்தாண்டுகளும்

ஈழத்தமிழ் மக்கள் உலகத்தை மறுபடியும் ஆரம்பப் புள்ளியிலிருந்து புதிதாக வாசித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. தியாகி திலீபனின் மகத்தான ஈகம், அதைத் தொடர்ந்த குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் தியாகங்களையடுத்து தமிழீழ மக்கள் கடந்து வந்த பத்தாண்டுகால அநுபவங்கள் யாவும் உலகத்தின் நேர்மைத்தனத்தின் மீது பலமான சந்தேகங்களைக் கிளப்புவதாயுள்ளதால் இப்படிப்பட்டதோர் மறுகிரகிப்பு அவசியமாகிறது. இன்றைய இயங்கியல் நிலையில் உள்ள அரசியல், பொருளியல் சார்ந்த ஆதிக்க சக்திகளின் சுரண்டல் வரலாற்றோடு கைகோர்த்து, நீர்வழிப்பட்ட புனைகளாக திசையற்றுப் பயணிப்பதா? அல்லது மாற்று வழியற்று இறுகிப்போய்க் கிடக்கும் அரசியல் மையங்களுக்கு அப்பால் சில புதிய கண்ணிகளை உருவாக்கி, நம்மை நாமே சுதந்திரத்தோடு நிலைநிறுத்திக் கொள்வதா? என்பதே திலீபனுக்குப் பின் வந்துள்ள பத்தாண்டுகள் நம் முன் வைத்துள்ள இரண்டு கடினமான கேள்விகளாகும்.

இதில் முதலாவது கேள்வி தங்கத்தால் செய்துள்ள சப்பாத்துக்களைப் போன்றது. இது ஒரேயொரு அளவில் மட்டும் வார்ப்படமானது. அணிவதானால் அதற்கேற்றவாறு நமது கால்களைத்தான் சீவிக்கொள்ள வேண்டும். இரண்டாவதாக நாமே நமது கால்களுக்கேற்ற சப்பாத்துக்களை தெரிவு செய்வதைப் போன்றது; சுதந்திரமானது. சிறிலங்கா உட்பட பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகளின் ஆட்சிக் கட்டிலில் இருப்போர் தமது அன்றாடம் காட்சி அரசியலுக்காக முதலாவது வகைச் சப்பாத்துக்களையே தெரிந்திருப்பது குழந்தைக்கும் தெரிந்த சங்கதியே. ஆனால் நானூறு வருடங்களாக காலனித்துவ ஆட்சிகளால் திட்டமிட்டு சிதைக்கப்பட்ட மக்கள் இனியாவது அந்த இரண்டாவது வகையான சுதந்திரச் சப்பாத்தை அணிந்து நடக்க அனுமதிக்க முன்வருவது மானிட நேசமுள்ள அனைவரினதும் கடமையாகும். இந்த அடிப்படை உரிமையைத்தான் ஈழத்தமிழினமும் விரும்பியது. அவர்கள் அதை எவ்வளவு தீவிரமாக நேசித்தார்கள் என்பதை உலகத்தால் இதுவரை எட்டப்படாத மகத்தான ஈகத்தால் எடுத்துச் சொல்லியவர் தியாகி திலீபன்.

அதன்பின் அவர் நேசித்த விடுதலை நெருப்பை சுடர்விடச் செய்வதற்காக எண்ணற்ற போராளிகளும், பொதுமக்களும், அல்லும் பகலும், தியாக நெருப்பில் குதிக்க வேண்டியதாகிப்போனது. தம்மை நோக்கி வந்த பயங்கரங்களையெல்லாம் அவர்கள் எஃகு இதயத்துடன் தாங்கிக்கொண்டனர். படியிறங்கிப்போய் எதிரியுடன் சமரசம் செய்ய மறுத்தனர். சுதந்திரத்தில் கால்வாசி, அரைவாசி என்பது கிடையாது என்ற திலீபனின் உறுதியை இன்று வரை உருக்குலைய விடாது காத்தும் நின்றனர். அதன் மூலம் திலீபனின் தியாகத்தை அவர்கள் உயிர்கொடுத்துக் கௌரவப்படுத்தினார்கள். இதுவே கடந்த பத்தாண்டுகளில் திலீபனின் தியாகம் பெற்றுள்ள மகத்தான வெற்றியாகும்.

மேலும் திலீபன் உண்ணா நோன்பைத் தெரிவுசெய்த போது, புதிதாக எதையுமே கேட்கவில்லை. இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த ஐந்து அம்சங்களையும், அமுல்படுத்துமாறு கோரியே தன்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தியாகப் பயணத்தை ஆரம்பித்தார். அதன்படி,

01) பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் உள்ளோர் விடுவிக்கப் படவேண்டும்.

02) சிங்களக் குடியேற்றங்கள் நிறுத் தப்பட வேண்டும்.

03) இடைக்கால அரசு நிறுவும் புனர் வாழ்வு என்ற பெயரில் நடை பெறும் சகல வேலைகளும் நிறுத் தப்பட வேண்டும்.

04) வடக்கு கிழக்கு மாகாணங்களில் பொலீஸ் நிலையங்கள் நிறுவுவது நிறுத்தப்படவேண்டும்.

05) ஊர்காவல் படையினரின் ஆயு தங்கள் திரும்பிப் பெறவேணடும். கிராமங்கள் பாடசாலைகளில் உள்ள இராணுவ நிலையங்கள் மூடப்படவேண்டும் என்பதையே அவர் கோரினார்.

மேற்கண்ட ஐந்து அம்சங்களும், அன்றைய சூழலில் எப்படி மதிப்பீடு செய்யப்பட்டது என்பதும், இன்று அது எவ்வாறாக நோக்கப்படுகின்ற தென்பதும் அவதானிக்கப்பட வேண்டியவையாகும். திலீபன் மரணத்துடன் போராடிக்கொண் டிருந்த ஒன்பதாவது நாள் நடை பெற்ற பேச்சுவார்த்தையில் கூட இந்தியத் தூதுவர் கோரிக்கை களை ஏற்றுக்கொள்ளவில்லை. அவரைப் பொறுத்தவரை மேற் கண்ட ஐந்து அம்சங்களுக்கும் உடன்படுவது பாரதூரமான விடயம். அத்துடன் ஒப்பிட்டால் திலீபனின் தியாகம் அரசியல் இராஜதந்திர ரீதியாக பாரதூர மான பாதிப்புக்களை ஏற்படுத்தி விடப்போவதில்லை என்பதா கவே இருந்தது. உண்மையில் அத் தகைய கணிப்பு சரியானதுதானா என்பதை நோக்க இது பொருத்த மான காலப்பகுதியாகலாம். இது பற்றி விளக்க முற்பட்ட கொழும் பின் ஆங்கிலப் பத்திரிகையொன்று, இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பத்தாண்டு நிறைவு தொடர்பான ஆய்வுரையில், “இலங்கைத் தமிழ் மக் கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுக ளாக வளர்த்து வந்த ‘இந்தியா நம்மை காக்கும்’ என்ற அடிப்டையிலான இந் திய மாயையை விட்டொழிக்கவே இறு தியில் அவ்வொப்பந்தம் பயன்பட டது.” என்று சுட்டிக்காட்டியிருந்தது. திலீபனின் தியாகம் வரலாற்றில் ஏற் படுத்திவிட்ட மகத்தான தாக்கத்தை விளங்கிக்கொள்ள இக்குறிப்புரை சிறந்த உதாரணமாகும்.

பத்தாண்டு நினைவுகளில் நின்று அவரிடம் காணப்பட்ட மேலும் சில அசாதாரண திறமைகளையும் வரிசைப் படுத்த வேண்டியிருக்கிறது. ஏனெனில் அவரது தனிப்பட்ட ஆளுமையை மதிப்பிட இவைகளும் அவசியமான

**மில்லர் பெற்ற உயர்வு ஈடிணையற்றது. மற்றவர்களால் எட்டிப்பிடிக்க முடியாத உயர்வு கொண்டது. ஆனால் அதே உயர்வை அஹிம்சை நெறியெனும் இன்னொரு வழியால் சென்று எட்டிப்பிடித்து, எல்லோரையுமே அதிசயிக்கச் செய்தவர் திலீபன்**



வையே. சிறுவயதிலேயே ஒரு வருடத் தில் படித்து முடிக்கவேண்டிய பாடசா லைப் பாடங்களையெல்லாம் இரண்டு, மூன்று நாட்களில் இரவு பகலாக வாசித்து முடிப்பவராயிருந்திருக்கிறார். பாடசாலை விளையாட்டுத்துறைத் தலைவராகவும், சிறந்த சதுரங்க ஆட் டக்காரராகவும் திகழ்ந்திருக்கிறார். வைத்தியத்துறைக்கான பல்கலைக்கழக அனுமதி கிடைத்தபோதும், அதை ஏற்க மறுத்து விடுதலைப் போராட் டத்தில் குதித்திருக்கிறார். ‘களத்தில்’ என்ற மாதப் பத்திரிகையை நடாத்தி யிருக்கிறார். போரில் பட்ட காயத்தால் குடலிலிருந்து 14 அங்குலங்கள் வெட்டி வீசப்பட்ட பின்னரும்கூட களத்தில் நின்றிருக்கின்றார். விடுதலைப்புலிகளின் உப அமைப்புக்கள் பலவற்றை உரு வாக்குவதில் முன்னோடியாக நின்று செயற்பட்டிருக்கிறார். தன்னம்பிக்கை யும், விடாமுயற்சியும், இருந்தால் எதை யும் சாதிக்கலாம் என்ற தலைவரின் கொள்கையால் வடிவமைக்கப்பட்டி ருக்கிறார். இத்தகைய தகுதிகள் உள்ள வராக இருந்தமையால்தான், நீராகா ரம் அருந்தாது ஈகம் புரிந்த ஆன்மீகத் துறவியாக அவரால் வெளிப்பட முடிந் தது. அஹிம்சையென்றதும் மகாத்மா காந்தியும், அவருடைய பொல்லூன்றிய உருவமுமே அனேகருடைய கண்முன் தோன்றுவது இயல்பு. ஆனால் அஹிம் சையின் உச்சத்தை இத்தனை சிறுவயதி லேயே திலீபன் எட்டிப்பிடித்தாரென் றால் அதற்கு அவருள் கனிந்திருந்த இத்தகைய ஆளுமைகளும், பிர தான காரணமென்றால் அது மிகைக்கூற்றல்ல.

“நான் எனது தாய் நாட்டிற் காக உயிர் துறப்பதை எண்ணும் போது மகிழ்ச்சியும், திருப்தியும் அடைகிறேன். மக்கள் விடுதலை யடையும் காட்சியை என் கண் களால் காணமுடியாது என்பதே என் ஏக்கம்!” என்று கூறிவிட்டு கரும்புலி கப்டன் மில்லர் வெடி குண்டு பொருத்திய வாகனத்தில் ஏறிய போது, அவர் அருகில் திலீபனும் நின்றிருந்தார். அன்று மில்லர் பெற்ற உயர்வு ஈடிணை யற்றது. மற்றவர்களால் எட்டிப் பிடிக்க முடியாத உயர்வு கொண் டது. ஆனால் அதே உயர்வை அஹிம்சை நெறியெனும் இன் னொரு வழியால் சென்று எட் டிப்பிடித்து, எல்லோரையுமே அதிசயிக்கச் செய்தார் திலீபன். இவ்விரு அபார சக்திகளும் வீசிய பேரொளியின் வழியே வரலாற்றைப் பார்த்தால் பத்தாண்டுகாலமாக தமிழீ ழப் போர் வயல் முழுவதுமே தியாகப் பயிரால் நிறைந்திருக்க காணமுடியும். இந்த விசையை உருவாக்கிய பலரில் திலீபன் பெயர் குறிப்பிடக்கூடிய ஒருவ ராவார். இவை இப்படியிருந்தாலும் திலீபனுக்குப் பின்வந்த இந்த பத்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தாண்டு காலத்தில் விடுதலைப்போர் சாதித்தது யாது என்ற கேள்வியும் இப்போது சிலரால் கேட்கப்படுகிறது. மாவோ, லெனின், காந்தி, சேகுவரா என்று உலகறிந்தவர்களையெல்லாம் உருவாக்கியது எது? அவர்கள் நாட்டிற்குரிய சுதந்திரப் போர்களே. தொகுத்துப் பார்த்தால் உலக வரலாறே இப்பேர்ப்பட்ட போர் வயலில் விளைந்த மனிதர்களின் சாதனைகளின் தொடர் கதைகளாகவே இருப்பது தெரியவரும். அடிமைகளாகக் கிடந்த ஈழத்தமிழினத்தில், இப்படிப்பட்ட ஆளுமையுள்ள மாவீரர்கள் உருவாக முடியுமா? என்பது முன்னர் யாருமே நினைத்தும் பார்த்திராத கேள்விதான்; ஆனால் உருவாகியிருக்கிறார்கள். அவ்விதம் அவர்களைக் கடைந்தெடுத்து உருவாக்கியது தமிழீழப்போரே. இதுவே தமிழீழப் போரின் மகத்தான சாதனையாகும். நாளை தேசம் உருவாகும்போது அதன் வரலாறாக இருக்கப்போவதும் இந்த வீரர்களே என்பதை உணர்ந்து கொண்டால் விடுதலைப்போர் சாதித்தது என்ன? என்ற கேள்விக்கு அதுவே விடையாதலும் காணலாம்.

திலீபனுக்குப் பின் விடுதலைப் போராட்டமும் இரண்டாம் கட்ட ஈழப் போர், மூன்றாம்கட்ட ஈழப் போர் என்றவாறு படிப்படியாக விரிவடைந்தே செல்லக் காண்கிறோம். ஜே. ஆர். ஜெயவர்த்தனா காலத்தில் மட்டும் அரசியலமைப்பு 16 தடவைகள் திருத்தம் செய்யப்பட்டது; பயனில்லை. பின் பிரேமதாசா காலத்தில் ஒரு தடவை கூட மாற்றம் செய்யப்படாமல் வேறு வழிகள் கையாளப்பட்டன. அவையும் பயன்தரவில்லை. இப்பொழுது சூரியக்கதிரையும், வெற்றி நிச்சயம் நடவடிக்கையையும் தாண்டி, தமிழீழப் போர் வெகுதூரம் சென்றுவிட்டதால் தீர்வுத்திட்ட அலை மறுபடியும் வீசத் தொடங்கியிருக்கிறது. இவ்விதமாக எண்ணற்ற சக்கரங்கள் தமிழீழப் போரின் பொருட்டு சுழன்று கொண்டிருப்பதைப் பார்த்தால் ஓர் உண்மை தெரியவரும். போரின் முக்கியமான திருப்பமொன்றில் திலீபன் என்ற ஒற்றைச் சக்கரம் தன்னைத் தியாகித்து சுழன்றமையால்தான் தொடர்ந்து எல்லாச் சக்கரங்களுமே ஒன்றன்பின் ஒன்றாக சுழல நேர்ந்திருக்கின்றது என்பதை எவருமே குழப்பமின்றி செம்மையாக விளங்கிக்கொள்ளுதல் முடியும்.

உண்மையில் திலீபன் தொடர்பான இத்தகைய மதிப்பீடுகள் முதலாளித்துவ நாடுகளுக்கோ, சோசலிச நாடுகளுக்கோ உரிய அரசியல் வகைக் குட்பட்டவையல்ல. அவை மூன்றாம் உலக நாடுகளின் மாதிரி அரசியல் எல்லைக்குள்ளேயே நடைபெற்று வருகின்றன. மூன்றாம் உலக நாடுகளுக்குரிய அணிசேராக் கொள்கையின் ஸ்தாபகர்களில் முக்கியமானவர் மார்ஷல் டிட்டோ. அவருக்குப் பின் யுகோசுலவிய நாட்டில் நடைபெற்ற சம்பவங்களின் பின் அந்நாட்டில் வாழ்ந்து



அகதிகளான மக்களில் பலருக்கு இருக்கும் வருத்தம் "மார்ஷல் டிட்டோ அணிசேராக் கொள்கைக்கு மேல் புதிதாக எதையும் கற்றுக்கொள்ளவில்லை!" என்பதாகும். பேரழிவுக்குப்பின் பல பொஸ்னியர்களும், சேர்பியர்களும் கண்டுகொண்ட அனுபவங்களில் இந்த ஆதங்கமும் அடங்கும். மேலும் அந்த நெருக்கடி நிறைந்த காலங்களில் அணிசேரா நாடுகள் வகித்த பாத்திரம் பற்றியும் அவர்களிடம் கேள்விகள் இருக்கின்றன. இதுபோலவே, "தென்னாசிய வட்டகையிலும் அணிசேராக் கொள்கைக்கு மேல் எதுவும் கற்றுக்கொள்ளப் படவில்லை!" என்று பேசப்படும் நிலை உருவாகாது பொறுப்புடன் பணியாற்றுவது அனைத்து நாடுகளுக்கும் உரிய கடமையாகும்.

அண்மையில் கம்போடியப் பிரச்சினையில் ஆசிய நாடுகள் தலையிட்டதும்; நைஜீரியப் பிரச்சினையில் பொதுநலவாய நாடுகள் தலையிட்டதும் சமீபகாலமாக மூன்றாம் உலக நாடுகளின் அரசியலில் ஏற்பட்டு வரும் சிறு சிறு முன்னேற்றங்களாகும். இனி தமிழீழப் பிரச்சினையில் இவற்றின் கடமைகள் என்னவென்பதும் சிந்திக்கப்பட வேண்டியதாகும். மேலும் ஐரோப்பிய ஒன்றிய உருவாக்கத்தின் பின் உலக நாடுகள் குழுக்களாக இணைவதிலேயே கூடிய தீவிரம் காட்டிவருகின்றன. ஒன்றியங்களாக இணையும் நாடுகள் எதிர்கொள்ளும் முதலாவதும்; மாற்றம் செய்யப்படாததுமான உடன்படிக்கை, "ஒருவரின் நாட்டை மற்றவர் எக்காரணம் கொண்டும் ஆக்கிரமிப்பதில்லை" என்பதாகும். மேலும், சிறிய தேசிய இனங்களின் பிரச்சினைகளுக்கு ஆரோக்கியமான தீர்வை எட்டாமல், இணைந்த நாடுகள் என்பது சாத்தியமில்லை என்பதும் உலகளவில் நிதர்சனமாக்கிவிட்டது. இந்த அடிப்படையிலேயே தற்போது தென்னமரிக்க வட்டகையில் உள்ள நாடுகளிலும் இணைவுக்கான முஸ்தீபுகள் ஆரம்பித்துள்ளன. ஒன்றிணைந்தாலன்றி இனிவரும் புதிய உலகை ஆசிய, ஆபிரிக்க நாடுகள் எதிர்கொள்ளல் சாத்தியமில்லை. அதற்கு முதல்படியாக இனத்துவ முரண்பாடுகள் தீர்த்துவைக்கப்பட வேண்டியது அவசியமாகும். எனவேதான் தென்னாசியாவின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு இலங்கையில் அமைதி ஏற்படுவது மிக மிக அவசியமாகின்றது. அமைதியற்ற இலங்கைத் தீவு தமிழ் மக்களுக்கு மட்டுமே பாதகமான என்ற கண்மூடித்தனமான எண்ணம் மிகப் பழையது. புதிய உலகிற்கு முற்றிலும் பொருந்தாதது. ஒரு இனத்தின் வேரை அறுத்து பிராந்திய ஒற்றுமையையோ அல்லது உலக ஒற்றுமையையோ கட்டியெழுப்பிவிட முடியாது. தமிழீழ மக்கள் விடுதலை பெறவேண்டும் என்பது தமிழீழ மக்களின் அவாவாக மட்டும் இருக்காது ஆசிய வட்டகையில் உள்ள ஒவ்வொருவரது உயர்வுக்கும் அது அவசியமாகிறது என்ற உண்மை இனியாவது நியாயபூர்வமாக உணரப்பட வேண்டும். சிறீலங்கா அரசு ஒரு இனத்தை தனிமைப்படுத்தி, பட்டினியின் விழிம்பில் நிறுத்திப் போர் நடத்துவது வெற்றிக்குரியதல்ல; அது தோல்வியை விட மிக மோசமானது. இதைக் கண்டும் மௌனம் சாதிப்பதாலேயே இன்றைய உலகம் சந்தேகத்திற்குரியதாகின்றது. "சிறிய தேசிய இனங்களின் அழிவு உலக அபிவிருத்திக்கு உகந்தது அல்ல" என்ற தெளிவு சகல மட்டங்களிலும் உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டும். ஒடுக்கப்பட்ட இனங்களினால் சந்தேகத்திற்குள்ளாக்கப்பட்டிருக்கும் உலகம் தனக்குரிய கடமையை புரிந்துகொள்ளுமா? ஈழத்தமிழினத்தின் நீதியான கோரிக்கைகளை சீர்தூக்குமா? இவைகள் திலீபனின் பின் வந்த பத்து ஆண்டுகள் உலகத்தின்முன் வைக்கும் முக்கிய கேள்விகளாகும். ★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சிங்களக் கட்சிகளின் சுயரூபம்

கடந்த சில மாதங்களாக சாட்சிகளைப் பதிவு செய்து வந்த சிங்கள ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையை கடந்த செப்டம்பர் 19–ம் திகதி வெளியிட்டது. பௌத்த மதத்தின் காவலர் என பௌத்த சிங்களவர்களால் போற்றப்படும் அநகாரிக தர்மபாலவின் பிறந்த நாள் அன்று இந்த அறிக்கையை வெளியிடுவது எனத் தீர்மானித்ததிலிருந்தே இந்த ஆணைக்குழுவின் சிந்தனை வெளிப்பாட்டை எவரும் உணர்ந்து கொள்ள முடியும். மேலும் இந்த ஆணைக்குழுவை நிறுவியவர்கள், அதில் சாட்சியம் அளித்தவர்கள் யாரெனின், சுருக்கமாகப் பௌத்த சிங்களப் பேரினவாதிகள் எனக் கூறிவிட முடியும். ஆனால் இதனை சற்று விரிவாகவும், ஆழமாகவும் பார்ப்பதானால் இவர்களில் எவருமே சிறீலங்காவின் சாதாரணக் குடிமக்கள் அல்லர். சிறீலங்காவின் ஆட்சியில், அரசியலில், நிர்வாகத்தில் முக்கிய பங்காளிகளாக இருந்தவர்கள், இருக்கின்றவர்கள், இருக்கப்போகின்றவர்கள் என்றே கூறமுடியும். இந்த ஆணைக்குழு பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் சின்னங்களாக விளங்கும், பௌத்த சிங்களப் பேரினவாத அமைப்புகளினால் அமைக்கப்பட்டதாயினும், இதில் சாட்சியம் அளித்தவர்கள் அவற்றின் உறுப்பினர்கள் என்றுமட்டும் சொல்வதற்கில்லை. பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர் பதவியிலிருந்து நீதவான்கள் வரையிலான கல்விமான்களும், அரசியல்வாதிகள், உயரதிகாரிகள், மதவாதிகள் எனப் பலதரப்பட்டவரும் அடங்குகின்றனர். இதனை, இந்த இடைக்கால அறிக்கை வெளியீட்டு விழாவில் பல்லாயிரக்கணக்கான பிக்குகள்மட்டுமல்ல, ஆளும், எதிர்க்கட்சிகள் உட்பட அரசியல் கட்சிகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டதிலிருந்து புரிந்துகொள்ள முடியும். ஒருவகையில் பார்த்தால் விழா ஏற்பாட்டாளர்கள் தமக்கு ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்தோ, எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியிலிருந்தோ வருவதைப்பற்றி கவலையில்லை எனக்கூறினாலும் இந்த அரசியல் கட்சிகள் அவர்களை விடுவதாக இல்லை.

இந்த நிலையானது இந்த ஆணைக்குழுவின் விசாரணையிலும் அவர்களின் சிந்தனைப் போக்கிற்கும் சிங்கள அரசியல்வாதிகள், ஆட்சியாளர்களைப் பொறுத்துள்ள சுய கௌரவம் என்றே கூறலாம். இவ்வாறான சிந்தனை அவர்களின் வாக்கு வங்கிகளின் அடித்தளமாக இருப்பது மட்டுமல்ல, இதுவே அவர்களது முழுமையான சிந்தனைப் போக்காகவும் இருந்துவருவது காரணமாகும்.



சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கையை யானை மீது ஊர்வலமாக எடுத்துச்செல்லும் சிங்கள இனவாதிகள்

இவை ஒருபுறமிருக்க, இந்த ஆணைக்குழுவின் தீர்மானமும் இதுதான். இதனை அதிகளவு சிரமப்படாமல் கூறுவதானால், இந்த ஆணைக்குழுவின் அமைப்பாளர்களில் ஒருவரான கலாநிதி கெட்டியாராச்சி கூறியதைச் சுட்டிக்காட்ட முடியும். “ இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடு என்பது வெறும் புரட்டு. ஏனெனில் இது சிங்களப் பௌத்தர்களின் நாடு. இங்கு சிறுபான்மையினர் அவர்களது அழைப்பிலேயே இருக்கவேண்டும்” என்பதே கெட்டியாராச்சியின் தீர்மானம். அதாவது ஆணைக்குழுவின் முடிவும், பதிலும் இதுவேயாகும்.

இவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்ட இந்த ஆணைக்குழுவானது சந்திரிக்கா குமாரதுங்க முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தை எதிர்ப்பதென்பது ஆச்சரியப்படக்கூடிய ஓர் விடயம் அல்ல. அதேசமயம் இந்த எதிர்ப்பானது புறக்கணிக்கப்படக்கூடிய விடயமாகவும் இருக்க மாட்டாது. இதனை இந்த ஆணைக்குழுவின் அறிக்கை வெளியீட்டு வைபவத்திற்கு சிங்கள அரசியல் கட்சிகள் கொடுத்த முக்கியத்துவத்திலிருந்தே புரிந்துகொள்ள முடியும். ஆனால் இது தமிழ் மக்களினால் எதிர்பார்க்கப்படாதது ஒன்றல்ல. அதாவது, ஆணைக்குழுவின் அறிக்கையும், அதற்கு சிங்கள அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பும் ஏற்கனவே விளங்கிக்கொண்டுள்ள விடயம்தான். ஆனால் சில சக்திகள் – குறிப்பாக வெளிநாடுகள் சில – சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனையை வரவேற்றுள்ளதோடு, இதனை சந்திரிகா அரசு இதயசுத்தியுடன் நிறைவேற்ற முனைவதாகவும் கூறி அதற்கு ஆதரவு நல்கவும் முனைகின்றன. அத்தோடு, அதை நிராகரிப்பவர் எவரையும் கண்டிக்கவும் முற்படுகின்றன. ஆனால் எவருக்காகவும் தமிழ் மக்கள், சிங்கள ஆட்சியாளர்கள் வழங்கும் அடிமைச் சாசனத்தில் கையொப்பமிட முடியாது என்பது உறுதியானது ஆகும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# சந்திரிகாவும் பாதை திற

பேச்சுவார்த்தைகளில் பல ரகங்கள் உண்டு. எதிர் எதிரே நாற்காலிகளில் அமர்ந்திருந்து முகத்திற்கு முகம் பார்த்து கருத்துக்களை, வார்த்தைகளை அள்ளி எறியும் கலந்துரையாடல் உண்டு. முகத்தில் முகம் காட்டிக் கொள்ளாது தொலைவில் இருந்து எழுத்து வடிவில் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வது இன்னொரு வகைப் பேச்சு. இந்த இரண்டாவது வகையில் தான் சந்திரிகா அம்மையாருக்கும் தலைவர் பிரபாகரனுக்கும் மத்தியில் ஒரு கட்டத்தில் பேச்சுவார்த்தை நடந்தது. ஒரு புறத்தில் யாழ்ப்பாணத்தில் புலிகளின் பிரதிநிதிகளும், அரச அதிகாரிகளும் நேருக்கு நேர் கதைத்துக்கொண்டு இருக்கும்போது மறுபுறத்தில் இரு தேசங்களின் தலைவர்களும் சா...தேச செஞ்சிலுவையின் இரகசிய தபால் சேவை மூலம் கடிதங்களில் பேச்சு நடத்தினர். முன்னதைவிட இந்தப் பேச்சுவார்த்தை முக்கியமானது. ஏனென்றால் கடிதம் மூலமாக நிகழ்ந்த கருத்தாலேயே பேச்சுக்களின் தலைவிதியையும் புலிகளது நிலையையும் தீர்மானித்தது எனலாம். இந்தக் கடிதப் பரிமாறல்களில் முக்கியமாகப் பேசப்பட்ட விடயங்களில் ஒன்று, யாழ் பகுதி பாதைதிறப்பு விவகாரம். இந்த விடயத்தில் தான் சந்திரிகா அம்மையார் மிகவும் இறுக்கமான நிலைப்பாட்டைக் கடைப்பிடித்தார். அவரது கடுமையான வார்த்தைப் பிரயோகத்தில் பேரினவாதத்தின் இறுமாப்பு தொனித்தது. பேச்சுக்கள் முன்னேற்றம் காணாமல் குழம்பிப் போனதற்கு அவரது வறட்டுப் பிடிவாதமே முக்கிய காரணமாக அமைந்தது.

முன்னால் ஐக்கிய தேசியக் கட்சி அரசு யாழ்ப்பாண மக்களை ஒரு முற்றுகைக்குள் வைத்திருந்தது. பூநகரி, ஆனையிறவு பாதைகளை மூடி குடாநாட்டைத் துண்டித்து வைத்திருந்தது. கிளாலி நீரேரியால் பயணம் செய்யத் துணிந்தவர்களை ஈவிரக்கம் இன்றிக் கொன்றது. தமிழ் மக்கள் அன்று எதிர்கொண்ட இன்னல்களில் போக்குவரத்து ஒரு பூதாகர விடயமாக உருவெடுத்து இருந்தது. அப்பொழுது சமாதானத் தேவதையாக வேடம் பூண்டு அன்புக்கரம் நீட்டி வந்த சந்திரிகாவிடம் தலைவர் பிரபாகரன் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார். முன்னைய அரசு தமிழர் மீது திணித்திருந்த பொருண்மியப் போக்குவரத்து தடைகளை நீக்கிவிடுமாறு கேட்டிருந்தார். சங்குப்பிட்டிப் பாதைக்கு குறுக்கே நந்தி போலக் குந்தியிருந்த பூநகரி முகாமை அகற்றி வன்னிக்கும் குடாநாட்டிற்கும் ஒரு வழியைத் திறந்து விடுமாறு வேண்டினார். முதலில் தமிழ் மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு ஒரு நிலையான சமாதான சூழலை உருவாக்க வேண்டும் என்பதே தலைவர் பிரபாகரனின் நிலைப்பாடு. இதன் அவசியத்தை விளக்கி அவர் பல கடிதங்களை சந்திரிகாவிற்கு எழுதினார். ஆனால் சந்திரிகாவின் நிலைப்பாடு இவற்றிற்கு முற்றிலும் மாறானது. குடாநாட்டு முற்றுகையைத் தளர்த்தாது தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டிருந்த தடைகளை நீக்காது இராணுவ பொருண்மிய ஆக்கிரமிப்பை நீடிக்கவே அவர் விரும்பினார். அதனால் பாதை திறப்பு விவகாரத்தில் பிடிவாதமாக இருந்தார்.

9–ம் திகதி மார்ச் மாதம் 1995–இல் தலைவர் பிரபாகரனுக்கு சந்திரிகா எழுதிய கடிதத்தில் உங்களது கோரிக்கைகளை நாம் நிறைவுசெய்ய முனைந்தால், பாரதூரமான இராணுவ பின்விளைவுகள் ஏற்படும் என்றும், தேசிய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயங்களில் நாம் விட்டுக் கொடுக்க முடியாது என்றும் குறிப்பிட்டார். இந்த வரிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு சாவு மணி அடிப்பது போல் இருந்தன. 16–ம் திகதி மார்ச் மாதம் 1995–இல் சந்திரிகாவுக்கு தலைவர் பிரபாகரன் எழுதிய பதில் கடிதத்தில் "யாழ்ப்பாண மக்களின் அவலமான வாழ்க்கைப் பிரச்சினைகளைவிட இராணுவத்தின் கேந்திர நலன்களுக்கு முன்னுரிமை வழங்கும் உங்களது அணுகுமுறையானது சமாதான வழிமுறைக்கு பெரும் பங்கம் விளைவிக்கும் எனச் சுட்டிக்காட்டினார். மேலும் அக்கடிதத்தில் "பூநகரி முகாமை அகற்றி யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் பாதையைத் திறந்து விடுவது, அத்தியாவசியமான பொருள்களின் மீதான பொருண்மியத் தடைகளை நீக்குவது, மீன் பிடித் தடையை அகற்றுவது ஆகியன எம்மைப் பொறுத்தவரை எமது மக்களின் அத்தியாவசிய வாழ்வு நிலையோடு சம்பந்தப்பட்டவை. ஆனால் உங்களது கண்ணோட்டத்தில் இவையனைத்தும் விட்டுக் கொடுக்க முடியாத தேசிய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள். இன்னுமொரு வகையில் சொல்லப்போனால் தமிழ் மக்களின் சமூகப் பொருண்மிய வாழ்க்கை மீது இராணுவம் விதித்த தடைகளை தேசியப் பாதுகாப்புக்கு அவசியமானவை எனக்கூறி இந்த அநீதியான நடவடிக்கைகளை நியாயப்படுத்த முனைகிறீர்கள். எமது மக்களை ஆழமாகப் பாதிக்கும் இந்த முக்கிய விடயங்களில் நீங்கள் கொண்டுள்ள



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பிரபாகரனும்
# ப்பு போரும்



நிலைப்பாடு எமக்கு கவலையையும் ஏமாற்றத்தையும் தருகின்றது.

உங்களது இந்த தப்பான பார்வையில் தமிழ் சமூகத்தின் உரிமைகளும், சுதந்திரங்களும் தேசிய பாதுகாப்புக்குப் பங்கம் விளைவிக்கும் அச்சுறுத்தல்களாகவே கருதப்படுகின்றன. இந்த நிலைப்பாட்டில் இராணுவவாதம் மட்டுமின்றி பேரினவாதத்தின் அம்சங்களும் மறைந்து கிடக்கின்றன. எமது மக்கள் எதிர்நோக்கும் மிகவும் அவசியமான தேவைகளை விட்டுக் கொடுக்க முடியாத பாதுகாப்பு பிரச்சினையாக நீங்கள் சித்தரிக்க முனைவதில் இருந்து ஒன்று புலனாகின்றது. அதாவது இராணுவ பொருண்மிய அழுத்தங்களை தொடர்ந்து நீடிக்க விரும்புகிறீர்கள். அதனை பேச்சுக்களில் அரசியல் இலாபம் ஈட்டும் துரும்புச் சீட்டுக்களாகப் பாவிக்க முனைகிறீர்கள்."

தலைவர் பிரபாகரனின் இந்தக் கூர்மையான வரிகள் சந்திரிகா அம்மையாரின் சமாதான முகமூடியைக் கிழித்து விட்டது. பாதை திறப்பு விவகாரத்தினை பாதுகாப்பு விவகாரமாக்கி, அதனை பாரதூரமான இராணுவ விவகாரமாக்கி, அதில் விட்டுக் கொடுப்பதற்கு இடமில்லை என்று சந்திரிகா எடுத்த கடும் போக்கானது இனவாதத்தின் இறுமாப்பில் முளைத்த இராணுவ வாதம் என்று சரியாக எடைபோட்டது அக்கடிதம். சந்திரிகாவின் அந்தரங்க நோக்கம் இராணுவத் தீர்வுதான் என்பதை அப்பொழுதே எடுத்துக் கூறி விட்டார் பிரபாகரன். இராணுவ அழுத்தமும் பொருண்மியத் தடைகளும் பேரினவாதத்தின் சித்திரவதைக் கருவிகள். தமிழர்களைத் துன்புறுத்தி அடிபணிய வைக்கும் ஆயுதங்கள். அரசியல் இலாபம் தேடும் துரும்புச் சீட்டுக்கள்.

சிங்களப் பேரினவாதம் இந்த வழிமுறைகளைக் கைவிடப் போவதில்லை. ஏனென்றால் தமிழருக்கு நீதி வழங்குவது அதன் நோக்கமல்ல. ஆகையால் தான் அது சமாதானத்தையும் சமரசத்தையும் விரும்பவில்லை.

சந்திரிகாவின் நிலைப்பாடு பேரினவாதத்தின் இந்தப் போக்கைப் புலப்படுத்தியது.

இதைச் சுட்டிக் காட்டியது பிரபாகரனின் கடிதம்.

சந்திரிகா - பிரபாகரன் கடிதப் பேச்சு வார்த்தை கருத்து முரண்பாட்டில் முறிந்து போய் இரண்டு வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இப்பொழுதும் இராணுவப் படையெடுப்பும் பெருண்மிய அழுத்தமும் தொடர்கின்றது. தனக்கு சமாதானத்தில் ஆசையில்லை என்பதையும் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் அக்கறை இல்லை என்பதையும் சந்திரிகா அம்மையார் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்து வருகின்றார். காலம் நகர்ந்திருக்கின்றது. ஆயினும் அரசின் அடிப்படைக்கொள்கையில் மாற்றம் நிகழவில்லை. இன்று தமிழீழ கள நிலவரமும், அரசின் பாதுகாப்பு நலன்களும் பாதை திறப்பு விவகாரங்களும் புதிய பரிணாமங்களை அடைந்திருக்கின்றன. அன்று பூநகரி இராணுவ முகாமை அகற்ற முடியாது என்று அடம்பிடித்து சமாதானத் தீர்வுக்கு சமாதி கட்டிய சந்திரிகா இன்று பூநகரி முகாமை மூடிவிட்டிருக்கின்றார். அன்று யாழ்ப்பாணத்திற்கு பாதை திறப்பது நாட்டின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக முடியும் எனக் காரணம் காட்டிய அவர் இன்று யாழ்ப்பாணத்திற்குப் பாதை திறப்பதுதான் அரசாங்கத்தின் போர் என்று கத்தி வருகின்றார்.

அன்று யாழ்ப்பாணத்திற்கு பாதை திறப்பதை சந்திரிகா அரசு விரும்பவில்லை. அதற்குக் காரணமும் இருக்கின்றது. அன்று கோட்டையில் புலிக் கொடி பறந்தது. யாழ்ப்பாணத்தில் தமிழரின் ஆட்சி நடந்தது. அரசியற் சுதந்திரத்தோடு தமிழர்கள் தன்னாட்சி நடத்தி வருவதை சிங்களப் பேரினவாதச் சக்திகளால் ஜீரணிக்க முடியவில்லை. யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்து தமிழர் தலைகளை சிங்களவரின் ஆட்சிக்குள் பணியவைக்க வேண்டுமென்பது சிங்கள ஆளும் வர்க்கத்தின் நீண்டநாள் கனவாக இருந்தது. இந்தக் கனவை நனவாக்கிவிட சந்திரிகா விரும்பினார். இதனால்தான் பாதை திறப்பு விவகாரத்தில் அவர் கடும் போக்கை எடுத்தார். பாதையைத் திறந்தால் குடாநாட்டு முற்றுகை தளர்ந்து போகும் படையெடுப்புக்கு படையினரின் மனவலிமை குறைந்து போகும். வடக்கில் தமிழரின் தன்னாட்சி தழைத்தோங்கி பலப்படும். இதனால் தான் புலிகளுடன் சமரசம் செய்வதிலோ, பாதை திறந்துவிடுவதிலோ சந்திரிகா அக்கறை காட்டவில்லை. அவர் இராணுவத்தின் படையெடுப்பு திட்டத்திற்கும் கேந்திர தந்திரோபாயத் தேவைக்கும் முதன்மை கொடுத்தார் என்ற பிரபாகரனின் குற்றச்சாட்டு தளரப்போவதில்லை.

இன்றைய புற நிலைகள் வேறு. யாழப்பாணம் சிங்கள இராணுவத்தின் பிடிக்குள் இருக்கின்றது. இதனால் இராணுவத்திற்குப் பல நிர்ப்பந்தங்களும் எழுந்துள்ளன. இன்று ஒரு பாதை

**பிரம்மஞானி**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தேவைப்படுகின்றது. அன்று தேவைப் படாத பாதை இன்று ஒரு தவிர்க்க முடியாத நிர்ப்பந்தமாக அத்தியாவசிய தேவையாக எழுந்திருக்கின்றது. பெரும் படைப்பல சக்தியைப் பயன்படுத்தி குடாநாட்டை இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருக்கின்றது. தமிழரின் வரலாற்றுப் புகழ்மிக்க, கலாச்சார நகரம் என்ற ரீதியில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியது சந்திரிகா அரசுக்கு பிரச்சார ரீதியில் மட்டும் பெரும் வெற்றியை ஈட்டிக் கொடுத்துள்ளது. ஆனால் அதன் பின் விளைவுகள் எத்தகைய பாரதூரமானது என்பதை இப்பொழுதுதான் சிங்கள அரசு உணரத் தொடங்கியுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாடானது தனித்ததொரு தீவு போல தரைப்பாதையின்றியே அரசின் கைக்கெட்டியது. இன்று வடக்கில் புவியியல் ரீதியில் தமிழீழப் பகுதியை சிங்கள ஆட்சிக்குள் கொண்டுவர முனைவதால் தென்பகுதியில் பெரும் பகுதி புலிகளின் ஆட்சியின் கீழ் வந்துள்ளது. இது அரசுக்குப் புதிய சிக்கல்களையும் நெருக்கடிகளையும் ஏற்படுத்தியுள்ளது. யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்து இருக்கும் படைகளுக்கு விநியோகம் ஒரு பாரியப் பிரச்சினையாக எழுந்திருக்கின்றது. ஆகாய, கடல் வழி விநியோகமானது சுமக்கமுடியாத பணப் பழுவை அரசுக்கு சுமத்தியுள்ளது. விநியோகம் சீராக இல்லை. ஆகாயப் படை புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகிவிட்டது. இதனால் கடல் வழி ஒன்றுதான் எஞ்சியிருக்கின்றது. அங்கும் கடற்புலிகளின் ஆதிக்கம் தொடர்கின்றது. கடற்சமர்கள் தொடர்கின்றன. கடற்படைக் கப்பல்களையும், சரக்குக் கப்பல்களையும் கடற்புலிகள் வேட்டையாடிவருகின்றனர். கடற்புலிகளுடன் ஒளித்து விளையாடியே கடல் வழி விநியோகத்தை நடத்த வேண்டி இருக்கின்றது. இந்த சிக்கலைத் தீர்ப்பதற்கு ஒரே வழியாக இருப்பது தரைப்பாதை விநியோகம்தான். இதனால் தரைப் பாதையொன்றை திறக்கவேண்டியது இன்றியமையாத நிர்ப்பந்தமாக சந்திரிகாவுக்கு தோன்றியிருக்கின்றது.

மதவாச்சி– மன்னார் பதையால் படைகளை நகர்த்தி “எடிபல” இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகிய போது, மன்னார் – பூநகரிப் பாதையைத் திறப்பதுதான் அரசின் நோக்கமாக இருக்கும் என இராணுவ ஆய்வாளர்கள் ஆருடம் கூறினார்கள். வன்னியில் புலிகளிடம் பெரும் போர் ஒன்றைத் தவிர்த்து, சேதங்களைக் குறைத்து கரையோரமாகக் கடற்படையினரின் உதவியுடன் பாதை ஒன்றைத் திறக்கவே சந்திரிகா அரசு திட்டமிடுவதாக சில ஆய்வாளர்கள் கூறினர். ஆனால் சந்திரிகா அம்மையாரின் நோக்கம் அப்படியாக இருக்கவில்லை. அவர் வன்னியில் போரை விரிவுபடுத்த விரும்பினார். வன்னியில் பெருநிலப்பரப்பை ஆக்கிரமித்து வடக்கை தெற்குடன் இணைத்து சிங்களவரின் ஆட்சியைத் தமிழர் மீது திணிப்பது தான் சந்திரிகாவின் திட்டம். இன்னொரு வகையில் சொல்லப்போனால் பாதை திறப்பதோடு புலிகளுக்கு முடிவுகட்டி; தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு முடிவு கட்டி; இனப்பிரச்சினைக்கு முடிவு கட்டி; இவ்வருட முடிவிற்குள் நிரந்தரமாக இராணுவ தீர்வு ஒன்றினை கண்டுவிடுவது என்பதுதான் சந்திரிகா ஆட்சிபீடத்தின் திட்டம். இத்திட்டம் வெற்றி பெறும் என அரசு எண்ணியது. அதன் அடிப்படையில் இராணுவ நடவடிக்கைக்கு “வெற்றி உறுதி” (ஜயசிக்குறுய்) எனப் பெயர் சூட்டியிருக்கின்றது.



யாழ்ப்பாணத்தில் ஈட்டிய இராணுவ வெற்றி சந்திரிகாவிற்கு ஒரு அலாதியான தன்னம்பிக்கையைக் கொடுத்திருந்தது. இந்த தன்னம்பிக்கையின் அடிப்படையிலேயே அவர் தவறான வழி முறை ஒன்றைக் கைக்கொண்டுள்ளார். ஏன் யாழ்ப்பாணத்தில் இருந்து இராணுவக் குறிக்கோள் ஒன்றுடன் தந்திரோபாய ரீதியில் புலிகள் பின் வாங்கிக் கொண்டார்கள் என்பதை அவர்கள் சரியாக புரிந்து கொள்ளவில்லை. குடாநாட்டைக் கைப்பற்றியதுடன் போரில் பெரும் பகுதி முடிந்து விட்டது என்பதும், புலிப்படை பலவீனம் அடைந்துவிட்டது என்பதும் அரசின் மதிப்பீடு. இந்தக் கச்சிதத்திற்கு வரவேற்புரை போன்று கொழும்பு இராணுவ ஆய்வுகளும் அமைந்தன. இனவாத உணர்வும், புலிகளின் மீதான பகையுணர்வும் இவர்களின் கள யதார்த்த ஆய்வுகளை மழுங்கடித்தது எனலாம். முல்லைத்தீவின் இராணுவ சாதனை கூட பேரினவாதத்தின் கண்களைத் திறக்கவில்லை. புலிகளின் ஆட்பலம், ஆயுத பலம், இயக்கத்தின் கட்டமைப்பு, போர்க்கலையில் புலிகளின் திறனாற்றல், இலட்சியத்தில் அவர்கள் கொண்டுள்ள உறுதி, இவை பற்றிய ஒரு தவறான மதிப்பீட்டுடன் ஜயசிக்குறுய் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. ஜயசிக்குறுய் நடவடிக்கை மூலம் வன்னிப் பிரதேசத்தில் அகலக் கால் வைத்தால் வன்னிப்பகுதி ஆக்கிரமிப்பை விரிவுபடுத்துவது இலகுவாக இருக்கும். இதனால்தான் மன்னார் – பூநகரி பாதையைக் கைவிட்டு வவுனியா ஆனையிறவு ஊடாக செல்லும் பெருவீதியைத் திறப்பதற்கு சந்திரிகா அரசு முடிவெடுத்தது. தரைப்பாதையின் அவசர தேவையை விட தமிழர் பிரதேசத்தைக் கூறு போடுவது தான் அதன் முக்கிய நோக்கம் என இதில் இருந்து உணர்ந்து கொள்ளலாம். கண்டிவீதிப் பாதையானது காடுகள் சூழ்ந்த நெடும் பாதையென்பதும் அது புலிகள் வாழும் பாசறைகள் நிறைந்த பகுதியூடாகச் செல்கின்றது என்பதும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு தெரியாததல்ல. இதையெல்லாம் அவர்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கள் பொருட்படுத்தவில்லை. ஆட்பலமும், ஆயுதபலமும் இருந்தால் வெற்றி நிச்சயம் என அவர்கள் நினைத்தார்கள் போலும். ஆனால் புலிகளிடமும் ஆட்பலமும், ஆட்லறிப்பலமும் உண்டு என்பதை அவர்கள் சரியாக எடை போடவில்லை. போர் தொடங்கிய பின்னரே இராணுவத்துக்குப் பல அதிர்ச்சிகள் காத்திருந்தன.

இந்தப் பாதை திறப்புப் போர் முன்பொரு பொழுதும் இல்லாதவாறு எறிகணைப் போராகப் பரிணாமம் எடுத்தது இராணுவத்திற்கு வியப்பை ஏற்படுத்தியுள்ளது. புலிகளிடம் பீரங்கிகள் இருப்பது இராணுவத்திற்கு தெரியாமல் இல்லை. அவர்கள் பறிகொடுத்த கணக்கை அவர்கள் வைத்திருப்பார்கள் அல்லவா? ஆனால் குறுகிய கால ரீதியில் ஆட்டிலறியை எடுத்து அதை சுகமாக கையாளவும், துரித கெதியில் இவற்றைக் களத்துக்குக் களம் இடம் மாற்றியும் குறித்த இலக்குகளுக்கு குறிதவறாமல் அடித்தும், அந்தக் கனரக ஆயுதங்களின் பாவனையில் நிபுணத்துவம் பெற்றுவிடுவார்கள் என்று இராணுவம் எதிப்பார்க்கவில்லை. ஜெயசிக்குறுய் படையினருக்கு எதிராக இதுவரை நடைபெற்ற சமர்களில் புலிகளின் எறிகணைத் தாக்குதலே இராணுவத்திற்குப் பெரிய அளவில் உயிர்ச்சேதத்தையும், உடல் சேதத்தையும், ஆயுத தளபாட இழப்பையும் ஏற்படுத்தியுள்ளது. பலரகமான ஆட்லறிகளையும், மோட்டார்களையும் கையாளும் திறமையான போர்முறைக்கு புலிகள் தேர்ச்சிபெற்றது இராணுவத்தினருக்கு மின்சார அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. தமது படைபலம் குறித்து எப்பொழுதுமே புலிகள் மௌனம் சாதிப்பது உண்டு. எதிரிக்கு தகவல் சேரக் கூடாது என்பதற்கா, நீண்டகாலமாக அவர்கள் கையாண்டுவரும் மரபு இது. இதானால் புலிகளின் படைபலம் குறித்து பலவிதமான கணிப்புகள் உண்டு. இது எல்லாமே தவறானது என்பது புலிகளுக்கு மட்டுமே புரிந்த இரகசியம். தந்திரோபாய நோக்கத்திற்காகப் புலிகள் பின்வாங்குவது உண்டு. சில சமயங்களில் முன்னேறும் படைகளுக்கு முகங்கொடுக்காமல் விடுவதும் உண்டு. இவற்றை எல்லாம் புலிகளின் பலவீனமாக, படைபலத்தின் சக்தியின் வீழ்ச்சியாக இராணுவம் எண்ணிக் கொண்டது. புலிகளின் படைபலத்தில் 80 வீதத்தை எப்படியும் அழித்துவிட்டோம் என்றது ரத்வத்தையின் கணக்கு. மிகுதியான 20 வீதம் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிந்துவிடலாம் என்பது சந்திரிகாவின் கணக்கு. இப்படியெல்லாம் புலிகளின் படைபலத்தைக் கொச்சைப்படுத்தியவர்களுக்கு வன்னியில் ஏற்பட்ட கடும் எதிர்ப்பும், அறுவைச் சிகிச்சை போன்ற அதிரடித்தாக்குதலும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கின்றது. மிகவும் பலம்வாய்ந்த விடுதலை இராணுவம் புலிகளிடம் இருக்கிறது என்பதைக் கொழும்புப் பத்திரிகையாளர்களும் இராணுவ ஆய்வாளர்களும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். கள நிலைகளுக்கு ஏற்ப பின்வாங்குவதும், அனுகூலமற்ற மோதல்களைத் தவிர்ப்பதும் பலவீனத்துக்கான அறிகுறிகள் அல்ல. பின்வாங்குவது திருப்பித் தாக்குவதற்குத் தான். படைகளைத் தக்கவைத்து, பலப்படுத்தி சரியான தருணத்தில் சரியான சூழலில் எதிரி மீது மின்னல் வேகத் தாக்குதல்களை நடத்துவது பிரபாகரனின் போர்க்கலை யுக்தி. இதுதான் வன்னித் தளத்தில் மேடையேற்றப்படுகின்றது.



பிரச்சார மேள தாளத்துடன் புயல் வேகத்தில் தொடங்கிய தாக்குதல் புலிகளின் கடுமையான எதிர்ப்பால் ஆமை வேகத்தில் நகரத் தொடங்கியுள்ளது. முன்னேறிய இராணுவத்தின் பின்னணியை ஊடறுத்து தாண்டிக் குளத்திலும் பெரிய மடுவிலும் புலிப்படை நிகழ்த்திய துணிகரத் தாக்குதல்கள் ஜெயசிக்குறுவை நிலைகுலையச் செய்தது. நகர்வுகளை இடைநிறுத்தியது. பெரிய அளவில் இழப்புக்களை ஏற்படுத்திய இந்த மரண அடிகள் இராணுவத்தினரின் மன உறுதியைக் குலைத்தது. திடீர்த் தாக்குதல்களால் இராணுவத்தினரின் முன்னணிப் படையணிகளின் பற்களை புலிகள் உடைத்து விட்டார்கள் என ஒரு இராணுவ ஆய்வாளர் தெரிவித்தார். ஆகையினால் இராணுவத்தை கடுமையாக எதிர்த்துப் போராட புலிப்படை தயார் நிலையில் நிற்கின்றது; உறுதி பூண்டு நிற்கின்றது; பலமாக நிற்கின்றது. இந்த நிலையில் வன்னியூடாகப் பாதை திறப்பது இலகுவான காரியமல்ல என்பதை இராணுவம் இப்பொழுது உணர்ந்திருக்கின்றது. அப்படித்தான் பெரு முயற்சி எடுத்து பாதையைத் திறந்தாலும் அதற்கு பெரும் உயிரிழப்பைக் கொடுத்தாக வேண்டும். பெரும் உயிரிழப்பைக் கொடுத்தாலும் பாதையைப் பாதுகாப்பாக தக்கவைத்துக் கொள்ளமுடியுமா என்பது தான் முக்கிய கேள்வி. பெரிய அளவில் உயிர் இழப்பைக் கொடுக்க இராணுவம் தயங்குகின்றது. பற்கள் போனாலும் பரவாயில்லை முதுகெலும்பை முறித்துக் கொள்ளக்கூடாது என்பது தான் இராணுவத்தின் நிலை. ஆனால் சந்திரிகா – ரத்வத்த ஆட்சி பீடம் இராணுவ உயிரிழப்பை பொருட்படுத்துவதாக இல்லை. ஏழை விவசாயிகளின் மைந்தர்கள் செத்து மடிவதை ஆளும்வர்க்கம் பொருட்படுத்தப் போவதில்லை. வர்க்கத் திமிரும், வறட்டுக் கௌரவமும் தோல்விகளை சீரணித்துக் கொள்ளாது களத்திற்கு அடிக்கடி சென்று இராணுவத்தின் கழுத்தை பிடித்துத் தள்ளுகின்றார் ரத்வத்தை. அவர் வன்னிப் பாதையில் வீறுநடை போட விரும்புகின்றார். ஆனால் வன்னிப் பாதை ஒரு மரணப் பாதை என்பதைக் காலம் அவருக்கு உணர்த்தும்.

பாதை திறப்பு விவகாரம் சந்திரிகா அரசை ஒரு மீளமுடியாத நெருக்கடிக்குள் தள்ளி இருக்கின்றது. விநியோகப் பிரச்சினை தீவிரமாகி வருவதால் யாழ்ப்பாணத்தில் இராணுவ ஆட்சியை தக்கவைப்பது முடியாத காரியமாக மாறிவருகின்றது. கடற்படை விநியோகம் கடற்புலிகளின் எதிர்ப்பால் தடைப்பட்டு வருகின்றது. இதற்குள் போர்ச் செலவீடு சமாளிக்க முடியாது அதிகரித்து வருகின்றது. இந்த நெருக்கடிகளால் சந்திரிகா அரசு திணறிப் போய் நிற்கின்றது. இராணுவப் பாதையானது கல்லும் முள்ளும் நிறைந்த கடுமையான பாதை என்பதை பேரினவாதம் கண்டறிந்துதான் புரிந்து கொள்ளும். ★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



## தமிழீழ கடற்படை 'கடற்புலிகள்'

# கடலிலே காவியம் படைப்போம்

உலகின் தமிழர் அரசாக அமையப் போகும் தமிழீழம் அதனது புவியியல் அமைப்பைக் கருத்தில் கொண்டு தனது கடற்பகுதியைப் பாதுகாத்துக் கொள்ளவும், மக்களின் பாதுகாப்பையும் கருத்திற் கொண்டு அமைத்துக் கொண்டது தான் "விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்''

தமிழீழ விடுதலைப் போர் ஆரம்பமான காலங்களிலேயே விடுதலைப் புலிகளின் படகுகள் தமிழீழக் கடற்பகுதியில் தனது போக்குவரத்துக்களை நடத்திக் கொண்டிருந்தன. ஆனால் அன்றைய காலகட்டத்தில் விடுதலைப் புலிகளின் படகுகள் சிறீலங்காவின் கடற்படையுடன் நேரடியான மோதல்களில் ஈடுபடாது தனது தேவைகளுக்காக மட்டும் பயணங்களை மேற்கொண்டு வந்தன. பின்னர் 84–ம் ஆண்டுகளில் போராட்டம் விரிவடையத் தொடங்க தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழீழக் கடற்படையொன்று தனியாகத் தொடங்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து அதற்கான நடவடிக்கைகளுக்கு அத்திவாரமிட்டார். இன்று பதின்மூன்று வருடங்களின் பின் தமிழீழக் கடற்படை அபார வளர்ச்சி கண்டு எதிரிப்படையை பல முனைகளிலும் திக்குமுக்காடச் செய்து வருவதுடன், தலைவரின் எண்ணப்படி தமிழீழக் கடல் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் படிப்படியாகக் கொண்டு வரப்பட்டுக் கொண்டுள்ளது.

தமிழர் கடற்படையான கடற்புலிகள் அமைப்பை எடுத்துக் கொண்டால் அதன் ஆரம்பகாலம் மிகவும் நெருக்கடிகளைக் கொண்டதாகவே அமைந்திருந்தது. ஏன் இரண்டாம் ஈழப் போரின் முடிவு வரை கடற்புலிகள் அமைப்பு மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்களை மாத்திரம் சிறீலங்கா கடற்படையின் மேல் நடத்தி வந்துள்ளதை அவதானித்துக்கொள்ள முடியும்.

முதலாம் ஈழப்போர் ஆரம்பமான போது, அதாவது தமிழீழப் போராட்டம் தனது சரியான தலைமையை தேர்ந்தெடுத்து போரை முன்னெடுத்த காலத்தில் விடுதலைப்புலிகள் அணியின் ஒரு அங்கமாகவே கடற்புலிகள் அணியும் இயங்கிக்கொண்டிருந்தது. அன்றைய காலகட்டத்தில் போராட்டத்திற்கு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அத்தியாவசியமான கடற்பயணங்களுக்காகவும் வேறு சில விநியோகங்களுக்காகவுமே கடற்புலிகளின் படகுகள் பாவிக்கப்பட்டு வந்தன. அன்றைய காலகட்டத்தில் பல போராளிகளின் படகுகள் சிறீலங்கா கடற்படையின் பீரங்கிகளால் சுட்டெரிக்கப்பட்டிருக்கின்றன. தமிழீழப் போராட்டம் கூர்மையடைத் தொடங்க அதன் கடற் தேவைகளும் அதிகரிக்க தொடங்கியது. 'விடுதலைப்புலிகள் கடலில் தமது ஆதிக்கத்தை என்று ஏற்படுத்துகின்றனரோ அன்று சிறீலங்கா தனது வடக்கு கிழக்கு பிராந்தியங்களை விட்டு விடுவது நல்லது' என்று ஒரு முறை சிறீலங்காவின் இராணுவத் தளபதி ஒருவர் கூறியிருந்தார். தமிழீழம் தனது நான்கு எல்லைகளில் மூன்றினை கடலாலேயே கொண்டுள்ளது. அதைவிட தமிழீழமானது, தனது வர்த்தக, அரசியல், சமூக தேவைகளை, தொடர்புகளை இந்த கடற்பகுதியூடாகவே மேற்கொள்ளும். அதைவிட தரைப்பகுதியின் பாதுகாப்பினை பலப்படுத்திக் கொள்ளவும், இந்தக் கடற்பிராந்தியமே துணைநிற்கும். அப்படியானால் தமிழினம் தனக்கென ஒரு அரசினை அமைக்கப் போராடும் போது பலம் பொருந்திய கடற்படையொன்று அதனிடம் இருக்கவேண்டும் என்பதனால் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களால் விடுதலைப்புலிகளால் "விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்" என பெயர் மாற்றம் பெற்று தனியான ஒரு பிரிவாக கடற்புலிகள் அணி மாற்றியமைக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரையான பதின்மூன்று ஆண்டுகால இடைவெளியில் தமிழர் கடற்படையான கடற்புலிகள் அமைப்பு கண்டுள்ள வளர்ச்சி அபாரமானது. ஆனாலும் எல்லாவித வசதிகளையும் கொண்டுள்ள சிறிலங்கா அரசின் கடற்படைக்கு முன்பாக மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களையும் வசதிகளையும் கொண்ட கடற்புலிகள் அமைப்பு மேலும் பல வழிகளிலும் விரிவாக்கம் பெற வேண்டியது அவசியமாகும்.

கடற்புலிகள் அமைப்பின், வளர்ச்சி பற்றியும், அதன் செயற்திறன் பற்றியும், தொடரும் ஈழப்போர்களில் ஆராய முற்பட்டால், முதலாம் ஈழப்போரானது முற்று முழுதான நிலப் பகுதியின் போராகவே இருந்துள்ளது. அன்றைய காலகட்டத்தில் சிறிலங்கா கடற்படைக்கு எதிராக எந்தவொரு தாக்குதலும் கடலில் மேற்கொள்ளப்படவில்லை.

**தமிழினம் தனக்கென ஒரு அரசினை அமைக்கப் போராடும் போது பலம்பொருந்திய கடற்படையொன்று அதனிடம் இருக்கவேண்டும் என்பதனால் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களால் "விடுதலைப்புலிகளின் கடற்புலிகள்" என பெயர் மாற்றம் பெற்று தனியான ஒரு பிரிவாக கடற்புலிகள் அணி மாற்றி அமைக்கப் பட்டது**

இரண்டாம் ஈழப்போரின் போதுதான் அதாவது 94–ஆம் ஆண்டிலேயே விடுதலைப்புலிகளின் கடற் பிரிவினர் 'கடற்புலிகள்' எனத் தலைவரினால் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஈழப் போர் இரண்டினை எடுத்துக்கொண்டால் அதன் ஆரம்பம் தரையில் என்றாலும் நடுப்பகுதியில் கடலில் மோதல்கள் ஏற்படத் தொடங்கின. அந்த சமயத்தில் தமிழீழ கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையே தனது மேலாதிக்கத்தைப் பேணிக்கொண்டிருந்தது. இது ஈழப்போர் இரண்டின் இறுதியில் ஓரளவிற்கு உடைக்கப்பட்டாலும், ஈழப்போர் மூன்றின் போதே தமிழீழக் கடலில் சிறிலங்கா தனது மேலாதிக்கத்தை முற்றாக இழந்தது எனக் கூறலாம். இதற்கு உதாரணமாக 90–ஆம் ஆண்டு முல்லைத்தீவு, 91–ஆம் ஆண்டு சிலாவத்துறை, ஆனையிறவு போன்ற தாக்குதல்களைக் குறிப்பிடலாம். மேற்கூறிய மூன்று தாக்குதல்களின் போதும் விடுதைலப்புலிகளின் பலம் தரையில் அதிகரித்திருந்த நிலையில் முகாம்கள் கைப்பற்றக் கூடிய சந்தர்ப்பத்தில், கடல் வழியான உதவிகொண்டே தமது முகாம்களை தக்கவைத்துக் கொண்டனர். இதே போன்றதொரு நிலைதான், யாழ். கோட்டைத் தாக்குதலின் போதும் ஏற்பட்டது. கடல்வழியாகவே அன்றைய தாக்குதலுக்கும், உதவிப்படைகள் அனுப்பப்பட்டன. ஆனால் விடுதலைப்புலிகளின் தரைப்பகுதி அணிகளின் தாக்குதல் உக்கிரத்திற்கு, ஈடுகொடுக்க முடியாத நிலையிலேயே சிறீலங்கா தனது படைகளை அங்கிருந்து, அப்புறப்படுத்திக் கொண்டது. இவை ஈழப்போர் இரண்டின் போது, இருந்த நிலமைகள். ஆனால் ஈழப்போர் மூன்றானது, ஆரம்பமானதே கடலில்தான். திருமலைத் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த இரண்டு கடற்படை ரோந்துக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டதுடனேயே மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகியது. மூன்றாம் ஈழப்போரில் இன்னொரு முக்கியத்துவம் சிறீலங்காவின் விமானப்படை குறிவைக்கப்பட்டதுமாகும். சிறிலங்காவின் விமானப் படையின் விமானங்கள் தொடர்ச்சி





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

யாக தாக்கியழிக்கப்பட்டதில், கடற்புலிகளின் பங்கு அளப்பரியது என்பது சொல்லத்தேவையில்லை. ஈழப்போர் மூன்றின் போது கடற்புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை விரிவு படுத்துவதிலும், அப்பகுதியில் தமது ஆழுமையை நிலைநாட்டுவதிலும், முழுக்கவனத்தையும் செலுத்திச் செயற்பட்டனர். ஆரம்பத்தில் முல்லைத்தீவு கடற்பகுதி வடமராட்சி, மற்றும் காங்கேசன்துறை, கடற்பகுதி போன்றவற்றில் கடற்புலிகள் தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்தியிருந்தாலும், சிறிலங்கா கடற்படையும், இப் பகுதிகளின் மீதே தமது கண்ணையும் வைத்திருந்தது. ஆனால் தொடர்ந்து இக் கடற்பகுதிகளில், கடற்புலிகளால் பல கடற்கரும்புலித் தாக்குதல்களும், நேரடிச் சமர்களும், கடற்கண்ணித் தாக்குதல்களும், நிகழ்த்தப்பட்டபோது, சிறிலங்காவின் கடல் மேலாதிக்கம் முற்றாக உடைத்தெறியப்பட்டது. இன்று கடற்புலிகளின் படகுகள் ரோந்து அணிகள், கொழும்புக் கடற்பிராந்தியம் மற்றும் காலிப்பகுதி கடல் தவிர்ந்த, சிறிலங்காவின் சகல கடற்பகுதிகளிலும் உலா வந்து கொண்டிருக்கின்றன. கடற்புலிகளின் அபார வளர்ச்சிக்கு பூநகரி, முல்லைத்தீவு படைத்தள தாக்குதல்களை உதாரணத்திற்கு கூறலாம். பூநகரித் தாக்குதலின் போது, போராளிகளை தளம் நோக்கி நகர்த்துவதற்கும் பின் தாக்குதல்கள் நடந்த சமயம் எதிரியின் கடல் உதவி கிடைக்காமல் பாதுகாப்பு வலயம் அமைத்ததுவும் கடற்புலிகளே.

அடுத்து முல்லைத்தீவு படைத்தளத்தின் மேல் நடாத்தப்பட்ட தாக்குதல்களிலும், தரைச் சண்டைக்கு நிகராக கடற்புலிகளின் படையணிகள் எதிரியின் கடற்படையுடன் மோதின. முல்லைத்தீவு தளம் தாக்கி கைப்பற்றப்படுவதில், பெரும் பங்கினை கடற்புலிகள் கொண்டிருந்தனர் என்பது மிகையாகாது. மூன்றாம் ஈழப்போரின் நடுப்பகுதியில் "சூரியக்கதிர்" எனும் இராணுவ நகர்வின் மூலம் யாழ்க்குடாவை சிறிலங்கா கைப்பற்றிக் கொண்டது. அந்த நடவடிக்கைக்கான பிரதான விநியோக மார்க்கங்களாக கடலும், வானும் இருந்தது. யாழ்க்குடாவைக் கைப்பற்றிக் கொண்ட இராணுவத்தை அங்கிருந்து அகற்றுவதானால் அவர்களுடைய



விநியோக வழிகள் தடை செய்யப்பட வேண்டும். அந்த வகையில், விமானங்கள் மீதும், கப்பல்கள் மீதும் பல தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. இதனால் விமானப்படையே பெரிதும் பாதிக்கப்பட்டது. அதேவேளை, யாழ்குடாவில் உள்ள பெருமளவிலான இராணுவத்திற்கு, விமானம் மூலம் விநியோகங்களை மேற்கொள்வதானது மிகவும் சிக்கலானது என்பதால், சிறிலங்கா அரசு கடல் வழி விநியோகத்தை பெரிதும் நம்பியிருந்தது. இந்த விநியோகப் பாதையும் தடைசெய்யப்படும் பட்சத்தில் யாழ். குடாவில் இராணுவத்தில் இருப்பானது கேள்விக் குறியாக்கப்படும். இந்த நடவடிக்கைதான் கடற்புலிகள் செயற்படுத்திவரும் தற்போதைய நடவடிக்கையாகும். இராணுவ விநியோகிப்பில் ஈடுபடும் தனியார் கப்பல்களும் இராணுவ இலக்குகளாக கணிக்கப்படும் என்ற அறிவிப்பும், ஒரு சில கடல் நடவடிக்கைகளும் இன்று சிறீலங்காவின் பல கப்பல்களை துறைமுகங்களுக்குள் முடக்கி உள்ளன. தனியார் நிறுவனக் கப்பல்களும் யாழ்குடாவிற்கு பயணம் மேற்கொள்ள தொடர்ந்து மறுத்து வருகின்றன.

80–களின் நடுப்பகுதியில் விடுதலைப்புலிகளின் கடற்பிரிவு என்ற நிலையில் சில படகுகளுடன் மட்டும் இயங்கிய நிலை மாறி இன்று விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் ஏராளமான படகுகளுடன் பல பிரிவுகளாக இயங்கி வருகிறது. இன்று தமிழீழக் கடற்பரப்பில் சரித்திரம் படைத்துவரும் கடற்புலிகள் அமைப்பில் விஷேட தாக்குதல் படைப்பிரிவு, கரையோரப் பாதுகாப்புப் பிரிவு, விமான எதிர்ப்புப் பிரிவு விநியோக வழங்கல் பிரிவு, கடற்கரும்புலிகள், மருத்துவப் பிரிவு, கடற்புலிகள் பெண்கள் பிரிவு என பல பிரிவுகளும் இப்பிரிவுகளுக்கான படகுகளை வடிவமைத்து கட்டிக் கொடுப்பதில் கடற்புலிகளின் தொழில்நுட்ப, பொறியியல் பிரிவும் அமைக்கப்பட்டுள்ளது. தமிழர் கடற்படையின் இன்றைய வளர்ச்சி அபாரமானதுதான். ஆனால் சகல வசதிகளையும் கொண்ட ஒரு அரச கடற்படையை எதிர்ப்பதற்கு கடற்புலிகளின் வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டவையே. இவை தவிர எதிர்காலத்தில் எமது பிராந்தியத்தை பாதுகாத்துக்கொள்ள எம்மிடம் அதிசக்தி வாய்ந்த ஒரு கடற்படை இருக்கவே வேண்டும். இன்று படகுகளுடன் கூடிய கடற்புலிகள் பெரும் பீரங்கிகள் பொருத்தப்பட்டு ரோந்துக் கப்பல்கள் கொண்ட கடற்படையாக வளர்ச்சி காணப்படவேண்டும். அதேவேளை எமது தேசத்தின் மூன்று எல்லைகளாக விரிந்து காணப்படும் கடல்பகுதியில் பாதுகாப்பினை ஏற்படுத்துவதற்கு கரைப்பகுதி கடற்படை முகாம்கள் சகல வசதிகளுடனும் அமைக்கப்பட வேண்டும்.

எத்தனை எத்தனை கடற் கரும் புலிகளின் தற்கொடையின் மூலம் இன்றைய நிலையை அடைந்திருக்கும் தமிழர் கடற்படை தமிழீழ போராட்டத்தின் பங்காளர்களான எமது மக்களின் துணை கொண்டு தனது இலக்கை எட்டிப் பிடிக்கும் பிடிக்க வேண்டும் என்பதுதான் இன்றைய நிலைப்பாடு.

**-உதயன்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## பாரிய சவால்களை எதிர்கொள்ளும்

# யாழ். குடாவுக்கான இராணுவ விநியோகம்

### 'ஜயசிக்குறுய்' துருப்புக்களுக்கு பேரிழப்புக்கள் கடல்வழி விநியோகத்திற்கும் தடங்கல்கள்

சிரமங்களுக்கு மத்தியிலும் தொடர்ந்த யாழ் குடாவுக்கான கடல் வழி விநியோகம் மேலும் சிக்கல்களைச் சந்திக்கின்றது. தரைவழிப் பாதையைத் திறக்க ஆரம்பிக்கப்பட்ட படையெடுப்பும், எதிர்பாராத பலத்த எதிர்ப்புக்கு முகம்கொடுத்து தாமதப் பட்டுள்ளது. இந்த வகையில் தமது ஆக்கிரமிப்பிற்குள் உள்ள குடாநாட்டுக் கான சிங்கள அரசின் விநியோகம் பெரும் நெருக்கடியைத் தற்போது எதிர் கொண்டுள்ளது.

ஆக்கிரமிப்பிற்குள் உள்ள குடா நாட்டிற்கான அரச விநியோகங்களை வழங்கி, படையினரின் இராணுவ நிர் வாகத்திற்கு உதவிபுரிந்து கொண்டிருந்த இரண்டு கப்பல்களை, சிங்கள அரசு, அடுத்தடுத்து இழந்துள்ளது. 01.07.1997 அன்று மன்னார் கடலில் ஒரு கப்பலைக் கடற்புலிகள் எரித்தழித் தனர். அடுத்து, 07.07.1997 அன்று வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில் ஒரு சரக்குக் கப்பலை கடற்புலிகள் கைப் பற்றினர். இந்தக் கப்பல் அழிப்புகள் வடபுலப் படைக்கு பாரிய விநியோகப் பிரச்சினைகளைக் கொடுப்பதுடன் மட்டும் நின்றுவிடாது; அரசாங்கத் தின் பொருளாதாரச் சுமைகளை மேலும் அதிகரித்துவிடும் என்பதும் நிச்சயம்.






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



இராணுவத்தின் ஆக்கிரமிப்பிற்குள் உள்ள குடாநாட்டிற்கான அரச விநியோகங்களை கடல் வழிமூலம் மேற்கொள்வதற்கேற்ற கப்பல் வளம் சிறீலங்கா அரசிடம் சொந்தமாக இல்லை. எனவே வெளிநாட்டுக் கப்பல் நிறுவனங்களுடன் உடன்பாடுகள் செய்து விநியோகப் பணிகளைச் சீராக்க சிங்கள அரசாங்கம் முயன்றது. அதாவது சிவிலியன் கப்பல்களை வாடகைக்கு அமர்த்தி குடாநாட்டில் நடைபெறும் இராணுவ நிர்வாகத்திற்கான அரச விநியோகங்களை மேற்கொள்ள அரசாங்கம் முயற்சிக்கின்றது. சாதாரண உடையணிந்து கடமைபுரியும் ஒரு இராணுவச் சிப்பாயைப் போல சிவிலியன் சரக்குக் கப்பல்களைப் பயன்படுத்தி, அரசாங்கம் தனது இராணுவ நலனைப் பூர்த்திசெய்ய எத்தனிக்கின்றது.

எனவே, ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கான விநியோகத்தில் ஈடுபட்டு வந்த சிவிலியன் சரக்குக் கப்பல்களும் விடுதலைப் போராட்டத்தின் இராணுவ இலக்குகளே ஆகும். ஆகவே, ஆக்கிரமிப்பின் ஒரு கருவியாகச் செயற்படும் இந்த விநியோகக் கப்பல்களை தமிழீழக் கடற்பரப்பில் வைத்து அழித்து படைத்துறைக்கு நெருக்கடிகளை உண்டுபண்ணி ஆக்கிரமிப்பிற்கு முடிவு கட்ட முயல்வது புலிகள் இயக்கத்தின் போர் உபாயமாகும். அத்துடன், இது போராட்டத்தின் இன்றியமையாத் தேவையுமாகும்.

அதேநேரம் கப்பல்கள் மீதான இந்தத் தாக்குதல் சம்பவங்களை குடாநாட்டு மக்களுக்கு எதிரான ஒரு நடவடிக்கையாகச் சித்தரித்துக் காட்ட அரசாங்கம் முயற்சிக்கின்றது.

குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினரின் இராணுவத் தேவைகளை ஈடுசெய்வதற்கென கப்பலில் கொண்டு செல்லப்படும் பொருட்களையும், இராணுவ உபகரணங்களையும் மறைத்துவிட்டு மக்களுக்கான உணவுப் பொருட்களே கப்பலில் கொண்டு செல்லப்படுவதாக அரசாங்கம் கூற விரும்புகின்றது.

**குடாநாட்டில் நடைபெறும் இராணுவ நிர்வாகத்திற்கான அரச விநியோகங்களை மேற்கொள்ள அரசாங்கம் முயற்சிக்கின்றது. சாதாரண உடையணிந்து கடமைபுரியும் ஒரு இராணுவச் சிப்பாயைப் போல சிவலியன் சரக்குக் கப்பல்களைப் பயன்படுத்தி, அரசாங்கம் தனது இராணுவ நலனைப் பூர்த்திசெய்ய எத்தனிக்கின்றது.**

குடாநாட்டில் தரித்துள்ள இருபத்தி ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட படையினருக்கான உணவு, மருந்து மற்றும் உதிரிப் பொருட்களுடன், இராணுவத் தேவைக்குப் பயன்படும் எரிபொருட்கள், இராணுவப் பொருட்கள், ஆயுதங்கள், வெடிமருந்துகள் என்று பெருந்தொகை இராணுவ வழங்கலை, கடல்வழி மூலம் அரசாங்கம் குடாநாட்டிற்கு அனுப்புகின்றது.

ஆக்கிரமிப்பிற்குள் இல்லாத தமிழர் பகுதிகளுக்கான அத்தியாவசியப் பொருட்களின் விநியோகங்களைத் திட்டமிட்டுத் தவிர்த்துவிட்டு, தனது கட்டுப்பாட்டிற்குள் உள்ள பகுதிகளுக்கு பொருட்களை விநியோகம் செய்யமுயலும் அரசின் தந்திரோபாயம் விளங்கிக் கொள்ளத்தக்கதாகும். படையினரின் இராணுவ நிர்வாகத்திற்குள் வாழும் மக்கள் அனைத்தையும் பெற்று இயல்பு வாழ்க்கையை வாழ்கின்றனர் என்று உலகிற்கு காட்டி ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தவும், மக்களுக்கான விநியோகம் என்ற போர்வையில் இராணுவத் தேவைகளையும் பூர்த்திசெய்து ஆக்கிரமிப்பைத் தொடர்வதுமே அரசின் தந்திரமாகும். இந்த விநியோகத் தந்திரத்திற்கு விடுதலைப் போராட்டம் பலியாக முடியாது.

இராணுவத் தேவையையும், ஆக்கிரமிப்பிற்குள் வாழும் மக்களின் தேவைகளையும் ஒன்றாக இணைத்துச் செயற்படுத்த, அரசாங்கம் முயற்சிக்கின்றது. ஏனெனில், இராணுவ விநியோகங்கள் புலிகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகும்போது அதை தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கையாக அர்த்தப்படுத்திக் காட்ட அரசாங்கம் எத்தனிக்கின்றது. இந்த நிலையில் புலிகளின் போராட்ட நடவடிக்கைகளையும் அரசாங்கத்தின் நயவஞ்சக முயற்சிகளையும் எமது மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

குடாநாட்டிற்கான வான் போக்குவரத்து ஏற்கனவே முடங்கிப் போயுள்ளதாலும், சிரமத்தின் மத்தியில் நடைபெறும் கடல் போக்குவரத்து, அடிக்கடி நெருக்கடிக்குள்ளாவதாலும் ஒரு தரைப்பாதை அமைப்பதே இந்த நெருக்கடிக்குத் தகுந்த தீர்வு என்று அரசாங்கம் எண்ணக்கூடும்.

புலிக்குகையின் மையப்பகுதியூடாக 65 கி.மீ நிலப்பாதை அமைத்து குடாநாட்டு ஆக்கிரமிப்பைப் பாதுகாக்க அரசாங்கம் விரும்புகிறது. இந்த முயற்சியும் அரசாங்கம் எதிர்பார்த்ததைவிட இன்று கடும் சிக்கலைச் சந்தித்துள்ளது.

ஒட்டுமொத்தத்தில், குடாநாட்டிற்கான இராணுவ விநியோகம் பலத்த சவால்களைச் சந்தித்துள்ளது. வடபுலத்தில் நிலைகொண்டுள்ள சிங்களப் படை எதிர்கொள்ளும் விநியோகப் பிரச்சினையானது, தொடர்ந்தும் அதிகரித்தபடி செல்வதையே களநிலவரம் புலப்படுத்துகின்றது. ★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# புலிகள் உயிர்த்தெழுகின்றனரா?

யுத்தத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஏற்படும் இழப்புகள் குறித்து சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டு வரும் அறிக்கைகள் தொடர்பாக பொருத்தப்பாடான கேள்வி ஒன்றை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுள்ளார். "பாதுகாப்பு அமைச்சின் அறிக்கைகளை நோக்கினால் இதுவரை 50,000 புலிகள் இறந்திருக்க வேண்டும் இதனை நம்பவே முடியவில்லை. போர் புரியும் புலிகள் புதிது புதிதாகவா உயிர்த்தெழுகின்றார்கள்?'' என்ற கேள்வியை அவர் கேட்டுள்ளார். ரணில் விக்கிரமசிங்கவின் கேள்வியானது முற்றிலும் பொருத்தப்பாடான ஒன்று என்பதில் ஐயமில்லை. ஏனெனில் சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சோ அன்றி இராணுவத் தரப்போ எப்பொழுதுமே விடுதலைப் புலிகள் எண்ணிக்கை 8000–க்கு மேற்பட்டதாகக் கூறியதில்லை. ஆனால் ஒவ்வொரு சண்டையின் போதும் சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சும் இராணுவத்தரப்பும் புலிகளின் இழப்பு குறித்து வெளியிடும் தொகையானது விடுதலைப் புலிகளின் எண்ணிக்கை குறித்து அவர்கள் வெளியிட்ட அறிக்கைகளையே கேள்விக் குறிகள் ஆக்குகின்றன.



யாழ் குடாநாடு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த போது சுமார் 7000 தொடக்கம் 8000 வரை விடுதலைப் புலிகள் இருப்பதாக இராணுவத்தரப்பினால் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் யாழ் குடாநாட்டில் இருந்து புலிகள் வெளியேறிய போது போரில் 50 வீதம் வெற்றி பெற்றுவிட்டதாக அரசாங்கத் தரப்பினால் அறிவிக்கப்பட்டது. ஆனால் அதன் பின்னர் புலிகள் முல்லைத்தீவு இராணுவ முகாமைத் தாக்கிய போது புலிகள் தமது முழுப்பலத்தையும் திரட்டித் தாக்குதல் நடாத்தியதாகவும், சுமார் 5000 புலிகள் பங்குபற்றியதாகவும் சொல்லப்பட்டது. இதன் பின்னர் சத்ஜய, எடிபல இராணுவ நடவடிக்கைகள் முடிவுற்றதும், போர் 70 வீதம் முடிந்ததாக அரசியல் மற்றும் இராணுவத்தரப்பு அறிவித்ததோடு புலிகள் மிகவும் பலம் குன்றிப்போய் விட்டதாகவும் தெரிவித்தனர். இதற்கு ஏற்றாற் போன்று ஆனையிறவு, கிளிநொச்சி, பரந்தன் முகாம்களைப் புலிகள் தாக்கிய போது, சுமார் 3000 புலிகள் பங்குபற்றியதாக இராணுவத் தலைமைப் பீடம் தெரிவித்தது. ஆனால் எது எவ்வாறு இருப்பினும் சரி, ஜெயசிக்குறு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட வேளையில் விடுதலைப் புலிகளின் பலம் 6000 வரை உள்ளது என்றே இராணுவத் தரப்பின் கணிப்பீடு கூறியது. அதாவது 8000 படையினராக இருந்த புலிகள் 70 வீதம் போர் முடிவுக்கு வந்த பின்னர், 6000 வரையான புலிகள் என்பதே அவர்கள் கணிப்பீடாக இருந்தது. இக் கணிப்பீட்டுக்கான சமன்பாடு எவ்வாறு உருவாகியது என்பதும் சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சுக்கும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்த போன்றோருக்குமே தெரிந்த விடயமாகும். இதனை நாமும் ஏற்றுக் கொண்டால், இச் சமன்பாட்டின்படி போர் முடிவதற்கு சிறிது காலமே உள்ளது என்பதையும் சகலரும் ஏற்றுக்கொள்ளவேண்டியதாகின்றது.

ஏனெனில் ஜெயசிக்குறு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 2000 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டும் 3500–க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகவும் அரசின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அவ்வாறானால் புலிகள் இன்னமும் சுமார் 500 பேர் மட்டுமே இருக்க முடியும். ஆகையினால் சிறீலங்கா அரச தரப்பு கூறுவதன்படி போர் விரைவில் முடிவிற்கு வருவது என்பது சாத்தியப்பாடானதாகவே இருத்தல் வேண்டும். ஆனால் கள நிலவரமோ இதற்கு ஏற்ற வகையில் இல்லை. பாதுகாப்பு அமைச்சு கூறும் புலிகளின் எண்ணிக்கையான 6000 பேரில் 5500 பேர் களத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்ட பின்னரும் புளியங்குளத்தை இராணுவத்தால் கைப்பற்ற முடியவில்லை. அதாவது மூன்று முயற்சிகளின் பின்னரும் இது சாத்தியமாகவில்லை. அவ்வாறானால் புலிகளினால் எவ்வாறு புளியங்குளத்தைக் காத்து நிற்க முடிகின்றது. ரணில் விக்கிரமசிங்க கூறுவது போன்று புலிகள் மீண்டும் மீண்டும் உயிர்த்தெழுந்து வந்தா போரிடுகின்றனர். ஆனால் அவ்வாறில்லை. புலிகளின் இழப்புக்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சர் உண்மைக்கு மாறாக அதிகரித்த தொகைகளையே வெளியிடுகின்றது என்பதும் புலிகள் நடத்துவது தமிழர்களின் தேசிய இன விடுதலைப் போராட்டம் என்பதினால் அது விரிவடைந்து செல்கின்றது என்பதுமே உண்மையாகும்.

★★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# 'ஜயசிக்குறுய்' யதார்த்தங்களும்



வன்னிப் பெருநிலப்பரப்பிற்குள் மே 13–ம் நாள், இரு முனைகளூடாக இராணுவத்தைப் புகுத்தி விட்டு 'வெற்றி உறுதி' என்று எதிரி பெயர் சூட்டினான்.

இராணுவ நடவடிக்கைக்கு எதிரி சூட்டிய பெயரும் – பாதை திறப்பது அதன் நோக்கம் என்ற அரசின் அறிவிப்பும் மக்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்திவிட்டன.

பரபரப்பான பெயர் சூட்டல்கள் செய்தி ஊடகங்களுக்கு நல்ல தீனி. யதார்த்தம் புரியாத இராணுவத் தளபதிகளுக்கு அது ஒரு மகிழ்ச்சிகரமான பொழுது போக்கு. அதேவேளை பொதுமக்கள் மத்தியில் ஒரு உளவியல் சலசலப்பை உருவாக்கவும், சிலவேளை அது உதவலாம். ஆனால் ஒரு விடுதலை இயக்கம் இத்தகைய பரப்பிற்கும் சலசலப்பிற்கும் செவிசாய்க்கமாட்டாது.

'ஒப்பரேசன் லிபரேசன்', 'செக்மேற்' என்ற எதிரியின் மிரட்டல் பெயர் சூட்டல் வரிசையில் 'வெற்றி உறுதி'யும் வந்துள்ளது. இத்தகைய உளவியல் பெயர் சூட்டல்களைக் கண்டு எமது மக்கள் குழப்பமடையத் தேவையில்லை.

இந்தப் படை நடவடிக்கையின் முடிவு தொடர்பாக எதிரி மிகவும் நம்பிக்கையுடன் இருக்கின்றான் என்பதையே பெயர் சூட்டல் புலப்படுத்துகின்றது.

இந்தப் பெரு நம்பிக்கைக்கு ஆணிவேர் எது?

'றிவிரச', 'சத்ஜய', 'எடிபல' என்ற இராணுவப் புயல்களால் புலிப்படையின் இராணுவ பலம் ஆட்டங்கண்டு விட்டது என்ற அரசின் ஆய்வு முடிவே அந்த ஆணிவேராகும். அத்துடன் மக்கள் ஆதரவு என்ற அரசியல் பூங்காவையும் புலிகள் இயக்கம் இழந்துவிட்டது என்ற அரசின் அனுமானிப்பும் அந்தப் பெருநம்பிக்கைக்கு வலுச் சேர்த்தது.

புலிகளின் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த கணிசமான பகுதி நிலத்தை கைப்பற்றிய ஒரு இராணுவ அம்சத்தையும், கைப்பற்றப்பட்ட குடாநாட்டிற்குள் ஒரு தொகுதி மக்கள் திரும்பிச் செல்கின்றனர் என்ற அரசியல் அம்சத்தையும் அளவுகோல்களாகப் பயன்படுத்தி படையியல் ரீதியில் புலிகள் தோற்கடிக்கப்பட்டனர் என்ற அரைகுறைமதிப்பீட்டையும், தமிழ் மக்களின் ஆதரவை புலிகள் இயக்கம் இழந்துவிட்டது என்ற பொய்யான முடிவையும் அரசு எடுத்தது. இவற்றின் அடிப்படையில் பெரியதொரு இலக்கையுடைய இராணுவ நடவடிக்கையை அரசு துணிந்து எடுத்தது.

இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகி மூன்று வாரங்களின் பின், ஜயசிக்குறுவின் வேலைகளில் ஒன்றாக தலைவர் பிரபாகரனைப் பிடிப்பது அல்லது கொல்வது என்ற தகவலை ரத்வத்த பகிரங்கப்படுத்தியிருந்தார்.

சிங்கள அரசின் பெயர் சூட்டலையும், ரத்வத்தையின் இராணுவ ஆசைகளையும் பார்க்கும்போது 1988–ம் ஆண்டு மணலாற்றுப் பகுதியில் தலை





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வர் பிரபாகரனை இலக்குவைத்து இந்தியப் படைகள் நடாத்திய 'செக்மேற்' இராணுவ நடவடிக்கை நினைவுக்கு வருகின்றது. சதுரங்க விளையாட்டின் இறுதிக் கட்டமான இராசாவை அழித்தலின்போது சொல்லப்படும் 'செக்மேற்' என்ற வெற்றிப் பிரகடனத்தையே இந்தியப் படைகளும் பெயர் சூட்டலுக்காகத் தேர்ந்தெடுத்திருந்தனர். அதே போல இப்போது, 'புலிகளின் கதை முடிகின்றது' என நினைத்துக் கொண்டு 'வெற்றி உறுதி' என நடவடிக்கைக்கு சிங்கள அரசு பெயர் சூட்டியது. ஆனால், செக்மேற்றின் விதி எப்படி முடிந்தது? செக்மேற் சொன்னவர்களே செக்மேற்றுக்கு ஆளாக்கப்பட்ட தலைகீழ் நிகழ்ச்சிதான் நடந்திருந்தது. அதே போன்றதொரு பேராசைப் பெயர்சூட்டலுடனும் அதீத எதிர்பார்ப்புகளுடனும் சிங்கள அரசும் புறப்பட்டுள்ளது.

குடாநாட்டுப் படையினரின் இராணுவத் தேவையை ஈடுசெய்ய ஒரு தரைவழிப்பாதை அரசிற்கு இன்று அவசியம் தேவை. அதே அளவு அவசியம், அமைக்கப்படும் பாதை பாதுகாக்கப்படுவதாகும். புலிகளின் படைபலம் மேலும் நசுக்கப்படும்போதுதான் அந்தப் பாதுகாப்பு கிடைக்கும் என்று அரசு எண்ணுகிறது. இந்த நிலையில், தரைப்பாதை திறக்கும் முயற்சியையும் புலிகளின் படைபலத்தைச் சிதைக்கும் வேலையையும் ஒரே எத்தனிப்பில் செய்ய முயலும் பேராசைத் தந்திரத்தை ரத்வத்த கடைப்பிடிக்கிறார். அதனால் தான் எதிர்ப்பேதுமற்ற 'எடிபல'வை நிறுத்திவிட்டு வன்னியில் புவியியல் மையப் பகுதியை ஊடறுத்துச் செல்லும் வவுனியா – கிளிநொச்சி பாதையைக் கைப்பற்ற, ரத்வத்த குழுவினர் முடிவு செய்தனர்.

வவுனியா–கிளிநொச்சி பாதை அமைப்பு முயற்சி அபாயகரமானது என்று சிங்கள தேசத்தின் அனைத்து ஆய்வாளர்களும் ஒரே குரலில் அரசை எச்சரித்துள்ளனர். ஆயினும், அவை அனைத்தையும் புறக்கணித்துவிட்டு, ரத்வத்த, பாதை திறப்பிற்கு உத்தரவிட்டார். அவரது முயற்சியை துணிச்சலானது என்று பேரினவாதிகள் வர்ணிக்கின்றனர். ஆனால், அது யதார்த்தத்தை அடித்தளமாகக் கொண்ட செயற்திறனுள்ள துணிச்சலா! என்பதைக் காலம் தீர்மானிக்கும்.



ஜயசிக்குறுவின் பிரதான இராணுவ இலக்கு பாதைதிறப்பு. ஜயசிக்குறுவின் பிரதான இராணுவ நோக்கம் புலிகளை சண்டைக்கிழுத்து அழிப்பது. அதனால் தான் 30 கி.மீற்றர்களை இடைத் தூரமாகக் கொண்ட இருவேறு முனைகளூடாக (ஓமந்தை – நெடுங்கேணி) படையினர் வன்னிப் பெருநிலப்பரப்பினுள் புகுந்துள்ளனர். திசைதிருப்பலுக்காக ஒன்றுக்கு மேற்பட்ட களங்களைத் திறப்பது படையினரின் வழமையான தந்திரம். ஆனால், ஜயசிக்குறுவின் இருமுனைகளும் இருபெரும் சண்டைக் களங்களாகவே திகழ்கின்றன.

## கற்பனைகளும்



பெரும் படைபல ஒருங்கிணைப்பு ஜயசிக்குறுவின் பலம். அபரிமிதமான ஆசைகொண்ட அதன் இராணுவ இலக்கு ஜயசிக்குறுவின் பலவீனம்.

சிங்களப் படையினரைப் பொறுத்தளவில் 'வெற்றி உறுதி' ஒரு 'இராணுவ மரதனோட்டம்' ஓமந்தையிலிருந்து கிளிநொச்சி வரை ஏறக்குறைய 65 கி.மீ. தூரத்தை அவை ஓடி முடிக்க வேண்டும். அதேநேரம் ஓடியதூரத்தை பிடித்தும் வைத்திருக்க வேண்டும்.

விரிந்து–பரந்த வயல்வெளிகளூடாகச் செல்லும் தண்ணீர் வாய்கால் போல வன்னிப் பெருநிலப்பரப்பினூடாக ஜயசிக்குறுவின் இலட்சியம் ஓடிப்பாய விரும்புகிறது. வயல்களுக்கு வாய்க்கால் உயிர்நாடி. அதனால், வாய்க்காலுக்கு வயல்கள்தான் காப்புக் கவசம். ஆனால், வடிவ ரீதியில் வாய்க்காலைப்போல அமையவிரும்பும் ஜயசிக்குறு இலட்சியத்திற்கு வயல்களைப் போல இருபுறமும் விரிந்து பரந்துள்ள பெரும் காடுகள்தான் எமனாக வந்து நிற்கப்போகின்றன.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ரத்வத்த ஆசைப்படுவதுபோல வவுனியா– கிளிநொச்சி பாதை அமைப்பு சாதாரண விடயமல்ல.

இந்திய ஆக்கிரமிப்புக் காலகட்டத்தில் வவுனியா – ஆனையிறவுப் பாதை வழியே நடைபெற்ற அரச விநியோகங்களுக்கு ஆயுதப் பாதுகாப்பு வழங்க இந்தியப் படைகள் முயன்றன. எனினும், பாதை நீளத்திற்கு கைகோர்த்தது போல இந்தியப் படைகள் நிற்கவில்லை! வாரத்தில் ஓரிரு நாட்கள் – அதுவும் குறிப்பிட்ட சிலமணி நேரங்கள் மட்டும் பாதைப்பாதுகாப்பில் இந்தியத் துருப்புக்கள் ஈடுபட்டன. மற்றைய வேளைகளில் பாதை நெடுகிலும் ஆங்காங்கே இருந்த தத்தமது முகாங்களிலேயே தங்கியிருந்தனர். அந்தக் காலப் பகுதியில் வன்னிப் பெருநிலப்பரப்பில் சிலநூறு புலிவீரர்களே நிலைகொண்டிருந்தனர். இயக்கத்தின் மொத்த ஆட்பலமும் ஆயிரத்தைத் தாண்டாத நிலையிலேயே இருந்தது. இந்த நிலையில், மேலெழுந்தவாரியான பாதைப் பாதுகாப்பு இந்தியப் படைக்குச் சாத்தியமாயிற்று. அத்துடன், அன்றையகால போராட்ட நிலவரப்படி விநியோகப் பாதையை முற்றுமுழுதாக தடுத்து நிறுத்த வேண்டுமென்ற அவசியம் எழவில்லை. அதாவது, புலிகள் இயக்கத்தின் முக்கிய இராணுவ இலக்காக விநியோகப்பாதை இருக்கவில்லை.

ஆனால், இன்றைய நிலைவேறு. புலிகளின் ஆட்பலமும், ஆயுதபலமும் கடந்த 10 ஆண்டுகளில் பிரமாண்டமான வளர்ச்சியைப் பெற்றுவிட்டது. அதேநேரம், புலிவீரர்களின் போர்த்திறன் ஆச்சரியப்படும் அளவுக்கு உயர்ச்சி கண்டுள்ளது. அத்துடன் இன்றைய பாதை அமைப்பு முற்றுமுழுதான இராணுவ நோக்கம் கொண்டது. இத்தகைய யதார்த்த நிலையில் வவுனியா – கிளிநொச்சி வரையான சுமார் 65 கி.மீ. நீளமான இந்த நெடுஞ்சாலையை முழுமையாக ஆக்கிரமித்து அதை ஒரு தொடர் இராணுவ வலயமாக வைத்திருப்பது என்பது சாதாரண விடயமல்ல.

ஜயசிக்குறு நடவடிக்கையில் இருபதாயிரம் துருப்புகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அரசதரப்புச் செய்திகள் தகவல் தருகின்றன. பாதை திறப்பு நடவடிக்கை தொடங்கி ஒரு மாதகாலத்தில் ஓமந்தையிலிருந்து புளியங்குளத்திற்கு அண்மை வரையான 14 கி.மீ. தூரத்தை அரசபடைகள் கைப்பற்றியுள்ளன. இதற்காக நடந்த ஒருமாத



சண்டைகளில் குறைந்தது 350 படையினர் கொல்லப்பட்டு, குறைந்தது 600 படையினர் காயமடைந்துள்ளனர் (நெடுங்கேணி சண்டை உட்பட).

இதேவேளை 10.06.97 அன்று ஜயசிக்குறுவின் கட்டளை மையப்பகுதி அமைந்திருந்த தாண்டிக்குளம் – நொச்சிமோட்டைப் பகுதிகள் மீது புலிகள் நடத்திய :தகர்த்தெறிந்து உள் நுழையும்' தாக்குதலில் *(Breack Through)* குறைந்தது 400 படையினர் பலியாக, சுமார் 570 வரையான படையினர் காயமடைந்தனர். இந்த விடிகாலை அதிரடித் தாக்குதலின்போது மட்டும் படையினரின் 3 ராங்கிகள் அழிக்கப்பட்டன. அத்துடன் 3 ஆட்டிலறிகளையும் பெரும் வெடி பொருட் களஞ்சியங்களையும் படையினர் இழந்திருந்தனர்.

இதன் பின்பு, 24.06.97 அன்று ஜயசிக்குறுவின் முன்னணி நிலைகள் அமைந்துள்ள பன்றிக்கெய்தகுளம், பனிக்கநீராவிப் பகுதி மீது, அங்கிருந்த பீரங்கித் தளத்தைக் குறி வைத்து இன்னுமொரு ஊடுருவற் தாக்குதலை புலிகள் நிகழ்த்தினர். இந்தப் பெருஞ் சண்டையில், 185 வரையான படையினர் கொல்லப்பட்டதுடன் 100 பேர் வரையில் காயமடைந்தனர். 120 மில்லி மீற்றர் பீரங்கி ஒன்றையும், காவுவண்டியுடன் கூடிய பீரங்கி அடிப்பாகங்கள் நான்கையும், சில நூறு எறிகணைகளையும், படை வாகனங்களையும் புலிகள் கைப்பற்றினர். ஓமந்தைப் பகுதியிலிருந்த படையினரின் வெடிப் பொருட் களஞ்சியம் ஒன்றும் இதே தினம் புலிகளின் பீரங்கித் தாக்குதலினால் அழிக்கப்பட்டது.

இந்த வகையில், இதுவரை 1000 வரையான ஜயசிக்குறு படையினர் பலியாகியுள்ளனர்.

1300–ற்கும் மேற்பட்டோர் காயம் பட்டுவிட்டனர். எனவே மொத்தம் 2300 துருப்பினரை ஜயசிக்குறு படை இதுவரை இழந்துவிட்டது. ஜயசிக்குறுவின் மொத்த ஆட்பலத்தில் இது 11 சதவீதமாகும்.

அத்துடன், ஜயசிக்குறுவில் பங்கு கொண்ட மொத்தப் படைக்கல வளத்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தில் 10 ராங்கிகளையும், 4 பீரங்கிகளையும், களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பெருந்தொகையான வெடிப்பொருட்களையும், பல இராணுவ வாகனங்களையும் படையினர் இழந்துவிட்டனர்.

ஜயசிக்குறுவின் நீளம், 65 கி.மீற்றர். இதுவரை அது ஏறக்குறைய 13கி.மீற்றர்களை எட்டியுள்ளது. இது மொத்த இலக்கின் 25 சதவீதமாகும். 25 சதவீத தூரத்தை கடப்பதற்குள் 11 சதவீத ஆட்பலத்தை அது இழந்துவிட்டது.

'வெற்றி உறுதி' படையினர் இதுவரை சந்தித்த ஆள் – ஆயுத இழப்பு என்பது, படை நடவடிக்கையின் முடிவு தொடர்பாக ஆரம்பத்தில் இருந்த நம்பிக்கையை கேள்விக்குரியதாக்கிவிட்டது. படை வீரர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டது. படைத் தளபதிகள் தங்களது திட்டங்களை மறு பரிசீலனை செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். சிங்கள இராணுவ ஆய்வாளர்களும் அரசை நோக்கி எச்சரிக்கை வேட்டுக்களை பலமாகத் தீர்க்கத் தொடங்கியுள்ளனர்.

இவற்றின் அர்த்தம் ஜயசிக்குறு நடவடிக்கை இத்துடன் நின்றுவிடும் என்றல்ல, இன்றைய நிலையில் 'ஆப்பி முழுத்த குரங்கின் கதையாக' ரத்வத்த இருக்கிறார். நடவடிக்கையைத் தொடர வேண்டிய கட்டாயத்திற்குள் அவர் இருக்கிறார். எனினும், இன்னும் சில 'தாண்டிகுளங்களை' ஜயசிக்குறு படையினர் சந்திக்கும்போது 'யாழ்தேவி'யைப் போல ஜயசிக்குறுவும் காணாமல் போகலாம்.

வன்னியில் 'வெற்றி உறுதி'யைத் தொடர படைத் தளபதிகள் முயன்று கொண்டிருக்க, கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் தனித்தனி பதுங்கித் தாக்குதல்களில் சிங்களப் படையினர் பலத்த ஆள் இழப்பைச் சந்திக்கின்றனர். ஜயசிக்குறு நடவடிக்கைக்கு இவையும் இடைஞ்சலாக இருக்கும்.

பண்டைய கிரேக்கத்தின் முதல் மரதனோட்ட வீரனான அந்தத் தூதன், தனது இலக்கை அடைந்து, தேதியைச் சொல்லிவிட்டு வீழ்ந்து இறந்தான் என்று வரலாற்றாசிரியர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் ஜயசிக்குறு மரதனோட்டம் தனது இலக்கைத் தொட்டுவிட்டு மரணிக்கப்போகின்றதா! அல்லது இடை நடுவிலே காணாமல் போகப் போகின்றதா? யாம் அறியோம் பராபரமே.

★★★

# மீளமுடியாத நெருக்கடி

"யுத்த செலவீட்டிற்குப் பணம் இல்லாததன் காரணமாகவே நாட்டிலுள்ள சகல வளங்களையும் தனியாருக்கு தாரைவார்க்க அரசு முனைகின்றது. கவச வண்டிகளையும், ஆயுத தளபாடங்களையும் கொள்வனவு செய்வதற்கு கமிஷன் எடுப்பவர்களின் நெருக்குதலும், யுத்தத்தை தொடர வேண்டும் என்பவர்களின் நெருக்குதலுமே தனியார்மயப்படுத்தும் அரசின் நடவடிக்கைகளுக்கு மூலகாரணமாகும்" என்று ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் நவசமாசக் கட்சியின் செயலாளர் பத்தி வீரக்கோன் குற்றம் சாட்டியுள்ளார். "தனியார் மயமாக்கல் எனும்போது அதன் பொதுப்படையான அம்சம், நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் அமைப்புக்களைச் சீர்செய்வது என்பதே ஆகும். இதன் மூலம் அரசாங்கத்திற்கு மூலதனமும் பொதுமக்களுக்கு முறையான சேவையும் கிடைப்பதாக இருக்கும். அதே சமயம் நிறுவனங்களும் லாபத்தில் செயல்பட வாய்ப்பு ஏற்படும். ஆனால் தனியார் மயமாக்கல் என்பது எமது தேர்தல் விஞ்ஞானத்தில் குறிப்பிடப்பட்ட ஒரு விடயமாகும். ஆகையினால் லாபத்தில் சிக்கினால் என்ன நட்டத்தில் சிக்கினால் என்ன தனியார் மயமாக்கியே தீருவோம் என அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கையானது அரசாங்கத்திற்கு எழுந்துள்ள நிதி நெருக்கடி என்றே கூற வேண்டும். இல்லாதுவிட்டால் லாபத்தில் இயங்கும் நிறுவனங்களை அரசாங்கம் அவசரத்தில் விற்க வேண்டிய தேவை எழுந்திருக்காது.

சந்திரிகா அரசானது யுத்தத்தில் பெரும் தொகையை செலவு செய்தாலும் பொருளாதார நடவடிக்கைகளை தாம் முன்னெடுத்துச் செல்வதாகவே பிரச்சாரம் செய்கின்றது. ஆனால் சிறிலங்காவின் பொருளாதார வளர்ச்சியில் ஏற்றம் எதுவும் காணப்படவில்லை. நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை நோக்கிச் சென்று கொண்டு இருக்கின்றது என்பதே உண்மையாகும். இதனை சர்வதேச நாணய நிதியின் அறிக்கை தெரிவித்ததே சிறப்பான எடுத்துக்காட்டாகும். இந்த அறிக்கையில் சிறிலங்காவின் பொருளாதாரத்தில் எந்தவித அபிவிருத்தியும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு சிறிலங்காவின் இவ்வாண்டுப் பொருளாதார வளர்ச்சி விகிதம் தென்னாசியப் பிராந்தியத்திலேயே குறைவானது எனத் தெரிவித்துள்ளது.

இவ்வாறாக எழுந்துள்ள பொருளாதார நெருக்கடியே சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கம் இலாபத்தில் இயங்கும் நிறுவனங்களைத் தனியார் மயமாக்கும் அளவிற்கு வந்தமைக்குக் காரணமாகும். இந்த நெருக்கடி அதிகரித்துச் செல்வதை அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரித்து செல்வதில் இருந்தே புரிந்து கொள்ளலாம். அதாவது பொருள்களின் விலையானது கட்டுக்கடங்காது நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றது. ஆனாலும் இவற்றில் ஏற்படும் அதிகரிப்பானது மக்கள் கவனத்தைக் கவராது. ஆயினும் அத்தியாவசியப் பொருள்களுக்கு ஏற்படும் விலை அதிகரிப்பானது மக்கள் கவனத்தைக் கவர்வதோடு அவர்களின் எதிர்ப்பையும் அரசு சம்பாதிக்கும் நிலையும் ஏற்படுகின்றது. அப்படியிருந்தும் மா போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலையை அரசாங்கம் அதிகரிக்க முனைப்பட்டமையால் அதன் பொருளாதாரம் வீழ்ச்சி காணும் நிலையை அடைகின்றது என்று புரிந்து கொள்ளலாம். அதிலும் மா மற்றும் பாண் என்பவற்றின் விலை உயர்வானது ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய தேர்தல் வாக்குறுதி ஒன்றுக்கு மாறான செயலாகும்.

ஆனால் இந்நிலையிலும் அரசு விடுதலைப் புலிகளுடனான போரை தொடர்ந்து நடத்துவது என்றே முடிவு செய்துள்ளது. இது நாடும் மக்களும் எக்கேடு கெட்டுப் போனாலும் பரவாயில்லை, யுத்தம் தொடரப்படும் என்ற அதன் கொள்கையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. இது யுத்தத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டு வரலாம் என்ற அரசாங்கத்தின் கணிப்பீடு காரணமாகவும் இருக்கலாம். ஆனால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும்வரை இலங்கையில் யுத்தம் ஓயப் போவதில்லை. யுத்தம் ஓயும் வரை சிறிலங்கா தனது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளப்போவதும் இல்லை. தொடர்ந்தும் பொருளாதாரச் சிக்கலில் சிக்கித் தவிக்கும்.

★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# தரைப்பாதையின் போரியல் நோக்கம்

வவுனியா—கிளிநொச்சி நெடுஞ்சாலையைக் கைப்பற்றி குடாநாட்டிற்கு ஒரு தரைப்பாதையை அமைத்திட சிங்கள அரசு முயற்சிக்கின்றது.

'வெற்றி உறுதி' என்ற பெயரில் அதற்கான இராணுவ நடவடிக்கையையும் அது ஆரம்பித்துவிட்டது. ஓமந்தையூடாக புளியங்குளத்திற்கு அண்மையான சுமார் 14 கி.மீ. நெடுஞ்சாலையை படையினர் கைப்பற்றியுள்ளனர்.

சுமார் 65 கி.மீ. நீளமுள்ள இந்த நெடுஞ்சாலை முழுவதையும் இராணுவப்பிடிக்குள் கொண்டு வருவதன் மூலம் பாரிய இராணுவ நலன்களை அடைய சிங்கள அரசு ஆவல் கொண்டுள்ளது. அத்துடன் பேரினவாதத்தின் அரசியல் அபிலாசைகளும் இந்த நெடுஞ்சாலை கைப்பற்றப்படலில் அடங்கியிருக்கின்றது. தமிழரின் ஆயுதப் போராட்டம் முனைப்புப் பெற்ற 83—ம் ஆண்டுக் காலப்பகுதியில் இருந்து இன்று வரை குடாநாட்டுடனான தொடர்பை சிங்கள அரசு பெரும்பாலும் இழந்து வந்திருக்கின்றது. அதே நேரம், வடபுலத்தைத் தமது ஆளுகை மண்டலத்திற்குள் கொண்டு வந்த புலிகள் இயக்கம் அங்கே, ஒரு நிழல் நிர்வாகத்தையும்—நிழல் அரசையும் ஏற்படுத்தியிருந்தது. சிங்கள அரசின் எந்த ஒரு அரசியல் அதிகாரமும் வவுனியாவுக்கு அப்பால் செல்லாக்காசாகவே இருந்தது. சிங்கள ஆட்சியாளர்களின் அரச விஜயங்களும் வவுனியாவுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. அதுவும் 90—ஆம் ஆண்டிலிருந்து குடாநாட்டிற்கான நேரடித் தொடர்பு முற்றுமுழுதாகவே அறுந்து கிடந்தது. இவை காரணமாக, வடபுலம் குறிப்பாக, குடாநாடு ஒரு தனிநாடு என்ற மனப்படிமம் சிங்களவர் மனங்களில் படியத் தொடங்கியது. தீவு முழுவதும் சிங்களவருக்கே சொந்தம் என்ற பேரினவாத அரசியல் நிலைப்பாடு, இதனால் பெரும் பாதிப்புக்குள்ளானது.

**குடாநாட்டிற்கான வான்வழிப்பயணம் முடங்கிப்போயுள்ள இன்றைய சூழ்நிலையில், கடல்வழிப் பாதை, சிரமமும்-அபாயமும் நிறைந்ததாகிவிட்ட இன்றைய நிலையில் ஒரு தலைவழிப்பாதை அரசுக்கு இன்றியமையாத் தேவையாகிவிட்டது.**

இத்தகைய புறச் சூழலிலேயே குடாநாட்டை ஆக்கிரமிக்க அரசு முடிவெடுத்திருந்தது. அந்த ஆக்கிரமிப்புச் சமரில் புலிகளை அழித்து மேற்குறித்த நிலைமைகளுக்கு முற்றுப்புள்ளியிட சந்திரிகா அரசு தீர்மானித்தது. படைப்பலத்தை ஒன்றுகுவித்து — பிரமாண்டமான அளவில் படைக்கலச் சக்தியைப் பயன்படுத்தி குடாநாட்டை தனது



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இராணுவப் பிடிக்குள் எடுத்தது. குடாநாட்டை ஆக்கிரமித்த பின்னும் அரசு எதிர்பார்த்தது போல — முன்னைய அரசியல்— இராணுவ நிலைகளில் பாரிய மாற்றங்கள் நடைபெறவில்லை, மாறாக குடாநட்டில் குவிக்கப்பட்ட பெரும்படைக்கான இராணுவ விநியோகங்கள் அரசுக்கு புதியதொரு சுமையாக மாறிவிட்டன.

குடாநாட்டிற்கான வான்வழிப்பயணம் முடங்கிப்போயுள்ள இன்றைய சூழ்நிலையில், கடல்வழிப்பாதை சிரமமும்—அபாயமும் நிறைந்ததாகிவிட்ட இன்றைய நிலையில் ஒரு தரைவழிப் பாதை அரசுக்கு இன்றியமையாத் தேவையாகிவிட்டது. அதாவது, குடாநாட்டில் அகலக்கால் பரப்பி நிற்கும் இராணுவப் பூதத்திற்கு ஒரு தொப்புள்கொடி அவசரமாகத் தேவைப்படுகின்றது. வவுனியா—கிளிநொச்சி நெடுஞ்சாலையை இராணுவத் தொப்புள்கொடியாகப் பயன்படுத்தி குடாநாட்டில் நிலைகொண்டுள்ள இராணுவப் பூதத்தை உயிர்த்துடிப்புடன் வைத்திருக்க அரசு விரும்புகின்றது. அதேவேளை, குடாநாட்டிற்கு நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தி தீவு முழுவதும் சிங்கள ஆளுகைக்குள் வந்துவிட்டது என்று காட்டி பேரினவாதத்தின் அரசியல் அபிலாசைகளையும் நிறைவேற்ற அரசு துடிக்கின்றது.

நெடுஞ்சாலையைக் கைப்பற்றி இராணுவப் பாதை அமைப்பது சாத்தியமா? என்ற கேள்வி ஒருபுறம் இருக்கட்டும். பாதை அமைக்கப்பட்டால், அது தமிழினத்தின் வாழ்வை—தமிழ் போராட்டத்தை எவ்விதம் பாதிக்கும் என்று பார்ப்பது அவசியம்.

ஆட்தொகையிலும்—மரபுப்போர் ஆயுத வளத்திலும் அரச படைகள் பலத்துடன் இருந்தாலும், தேவையான போது அவற்றை விரைவாக ஒருங்கு திரட்டிப் பயன்படுத்த சிங்களப்படைத் துறைத் தலைமைக்கு, சில தடைகள் இருக்கின்றன. பூகோள நிலையும், புலிகளின் பலமும்தான் அந்தத் தடைகள்.

குடாநாட்டில் ஒரு தொகுதிப்படை, மன்னாரில் ஒரு தொகுதிப்படை, கிழக்கில் ஒரு தொகுதிப்படை, சிங்களத் தேசத்தில் ஒரு தொகுதிப்படை என்று சிறீலங்காப் படை பரந்து கிடக்கின்றது. விரைவான ஒருங்கிணைப்பும், வேகமான நகர்வும் ஒரு படையின் வெற்றிக்கு மிக அவசியம். தமிழீழக் கடலும், புலிகளின் காட்டுப் பகுதிகளும் இந்த ஒருங்கிணைப்பிற்கும்— நகர்விற்கும் சவாலாக நிற்கின்றன.

வவுனியா— கிளிநொச்சி நெடுஞ்சாலையைக் கைப்பற்றி சிங்களதேசத்தை தரை வாயிலாக குடாநாட்டுடன் இணைத்துவிட்டால் மேற்குறித்த தடைகள் தகரும் என்று அரசு எதிர்பார்க்கின்றது. தேவைக்கேற்ப, இந்தப் பாதை வழியே வடக்கிற்கும் — வடக்கிற்கு வெளியேயும் துருப்புக்களை விரைவாக ஒருங்கிணைத்து நகர்த்த படைத் தலைமைக்கு வாய்ப்பேற்பட்டுவிடும். இது, தமிழினத்திற்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய ஒரு இராணுவ அம்சமாகும். தமிழரின் தாயக நிலப்பரப்பை கூறுபோட்டுச் சிதைக்கும் பேரினவாத நோக்கமும் இதில் அடங்கியுள்ளது.

இவ்விதம், தனது இராணுவ — அரசியல் நலன்களை வென்றெடுக்கும் நோக்குடன் அரசு பாதையைத் திறக்க முயலும் போது, கூட்டணியின் ஆனந்தசங்கரி போன்ற சில தமிழினத் துரோகிகள் அதைத் 'தமிழ் மக்களுக்கான வரப்பிரசாதம்' என்று திரித்துக் காட்டமுற்படுகின்றனர். வடபுலத்தின், விவசாய கடல்சார் உற்பத்திகள் தென்பகுதிக்கும், தென்பகுதியில் இருந்து இறக்குமதிப் பொருட்கள் வடபகுதிக்கும் அனுப்பி தமிழ் மக்களுக்கு நன்மை செய்யவே பாதை திறக்கப்படுகின்றது என்ற பாணியில் அவர்கள் பிரச்சாரம் செய்து பேரினவாதத்திற்கு வால்பிடிக்கின்றனர். இந்தத் துரோகிகளின் பிரச்சாரத்திற்கு வலுச்சேர்ப்பது போல "குடாநாட்டின் அபிவிருத்திக்காக சீமெந்து போன்ற பொருட்களைக் கொண்டு செல்லவே தரைப்பாதை'' என்று அரசும் ஒத்து ஊதுகின்றது.

அன்று, சந்திரிகா அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையின் போது தமிழ் மக்களின் போக்குவரத்து வசதிக்காக, பூநகரி முகாமை அகற்றி ஒரு தரைப்பாதை திறக்கும்படி கேட்ட போது அரசு அதற்கு மறுத்து விட்டது.

ஆனால் இன்று, பல நூற்றுக்கணக்கானோரைப் பலிகொண்டு பல பத்தாயிரம் மக்களை இடம்பெயர வைத்து, குடாநாட்டிற்கு ஒரு பாதை அமைக்க அதே அரசு செயலில் இறங்கியுள்ளது. அன்று, பாதை திறப்பை தனது இராணுவ நலனுக்கு முரணான விடயமாகப் பார்த்தது. இன்று, பாதை திறப்பு அதன் இராணுவ நலனுக்கு அத்தியாவசியமான தேவையாகிவிட்டது.

ஆகவே, பாதைதிறப்பை குடாநாட்டு மக்களின் போக்குவரத்திற்கான ஊடகமாகப் பார்ப்பது மகாதவறு. பாதை அமைப்பு முயற்சி தமிழரின் தேசிய நலனுக்கு ஊறுவிளைவிக்கக் கூடியது. தமிழினத்தின் தேசிய இன அபிலாசைகளுக்கு இலக்குவைத்து வீசியெறியப்படும் சுருக்குக் கயிறாக பாதை அமைப்பைப் பயன்படுத்த அரசு முயலும் என்பதை தமிழினம் மறக்கக்கூடாது.



★★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# "ஒரே நாடு ஒரே தேசியம்"



## அவசியமற்ற தீர்வு?

ஆட்சிக்காலத்தின் மூன்றாண்டுகளைக் கடந்த நிலையிலும், சமாதான சங்கீதத்தின் சுருதி மாறாமல், அதன் கனம் மாறாமல் சந்திரிகா அரசினால் தொடர்ச்சியாக இசைக்க முடிகின்றது. 1994–ம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்னதாக, அதனை எதிர்கொள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியினால் கூட்டாக இசைக்கப்பட்ட இந்த சமாதான சங்கீதம் தமிழ் மக்களைப் பொறுத்தவரை என்றோ கசந்துவிட்டது என்றபோதும், இக்கூட்டணி ஆட்சியை ஒருவித மாயையுடன் தாங்கிப் பிடிக்கும் வலுவை அது வழங்கவே செய்கின்றது.

பொதுத் தேர்தலுக்கு முன்னதாக பிரதான வாக்குறுதியாக, இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டப் பொதி தம்வசம் இருப்பதாகவும், நீண்டதும், விரும்பத்தகாததும், துன்பம் விளைவிப்பதுமான புரையோடிப்போன இனப்பிரச்சினையைத் தீர்ப்பதே தனது பிரதான பணி எனவும் வார்த்தைகளால் வரித்துக் கொண்டு ஆட்சிபீடம் ஏறிய சந்திரிகா அம்மையார், இனப்பிரச்சினைக்கான தீர்வுப் பொதியை மக்கள்முன் வைக்க இன்றுவரை முன்வரவில்லை.

ஆனாலும் தீர்வுத் திட்டம், அரசியல் அதிகாரப் பகிர்வு என்னும் பதங்கள் அடிக்கடி உச்சரிக்கப்படுகின்றன. இன அடக்குமுறை குறித்த சந்தேகங்கள் முனைப்புப் பெற்று முன்வருகின்றபோது, தீர்வுப்பொதி, அதிகாரப் பரவல் போன்ற பதங்களால் ஓங்கி அறையப்பட்டு, முனைப்புறும் சந்தேகங்கள் வலுவிழக்கச் செய்யப்படுகின்றன. உலகின் கவனமும் இந்த சமாதான கோஷங்களால் கவரப்படுகின்றன.

95– ஏப்பிரல் மாதம், சமாதானப் பேச்சுவார்த்தை முறிவடையக் காரணமாக இருந்துவிட்டு, பேச்சுவார்த்தை முறிவடைந்து, மீண்டும் ஈழப்போர் தீவிரப்பட்ட நேரத்திலும், புலிகள் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சமாதானத்தை நிலைநாட்டியே தீருவோம் என, சமாதானத்தின்பால் தீவிர வெறிகொண்டவர் போல் சந்திரிகா அம்மையார் உரைத்த போது உண்மை உணரப்படாமல், உலகத்தின் கண்கள் ஒருவேளை மூடப்பட்டிருக்கக்கூடும்.

இன்று குடாநாடு ஆக்கிரமிக்கப்பட்டாயிற்று, சிங்களப் படையின் பிடியில் குடாநாடு வந்தாயிற்று, ஆனால் கொழும்பு வானொலியில் யாழ் விவசாயி கூறியதுபோல் அங்கு நிம்மதி போயிற்று, சுதந்திரம் போயிற்று, அமைதியான வாழ்வு போயிற்று.

ஆனால் சிங்கள அரசு, இன்றும் தனது ஆக்கிரமிப்பு வெறியைத் தீவிரப்படுத்தி நிலங்களை கைப்பற்றும் போக்கையே தீவிரப்படுத்துகின்றது. பெரும் அழிவைச் சந்தித்து, பெரும் அழிவை ஏற்படுத்தி இந்த விடாப்பிடியான விபரீதக் கொள்கையை சந்திரிகா அரசு மேற்கொண்டுள்ளது. இதற்கு சமாதானத்திற்கான யுத்தம் என்ற நூதனமான பெயரையும் சூட்டியுள்ளது.

விடுதலைப்புலிகளை நன்கு பலவீனப்படுத்தல், தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துக் கொள்ளல், தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கையை தனது இராணுவப் பிடியில் வைத்திருத்தல், பின்னர் தமிழர்களின் இன அடையாளங்களை அலட்சியப்படுத்தி, தேசியச் சிறப்பை சிதைத்து, தேசிய இனம் என்பதையே மறந்து, தீர்வு என்ற பெயரில் எதையாவது பெயருக்கு முன்வைப்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பதே சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவின் திட்டமாக உள்ளது. இதனை சந்திரிகா அம்மையாரின் திட்டமென்பதிலும், பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் திட்டமென்பதே சரியானதாகும். தமிழீழ மக்கள் ஒரு தேசிய இனம் என்பதை மறுத்து, இலங்கைத் தீவைச் சிங்கள தேசமாக வலியுறுத்தி, அங்கு இருப்பது ஒரே தேசிய இனம், அது சிங்களத் தேசிய இனம் என்ற புதிய வரலாற்றை வரைந்து, தமிழீழ மக்களை உதிரிகளாக்கி உரிமையற்றவர்களாக்கி, சிங்களத் தேசிய இனத்துள் மறைந்து கரைந்துபோகின்ற பரிதாபத்திற்குரியவர்களாக்குவதே பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் உறுதியான திட்டம்.

இந்தத் திட்டத்திற்கு புதுவடிவம் கொடுத்து, நவீன உலகின் பழி ஏற்பட்டுவிடாமல் அதனை பக்குவமாய் அரங்கேற்றும் முக்கிய பணியை இனவாதி சந்திரிகா தனது பொறுப்பில் எடுத்துள்ளார் என்பதே சாலப்பொருத்தமாகும்.

மூன்றாண்டுகளுக்கு முன்னால் ஒரு சமாதான தேவதைபோல் காட்சி கொடுத்த சந்திரிகா அம்மையார் இன்று, இன அழிவுப் போரை தலைமைதாங்கி நடத்தும் ஒரு இனவாதிக்குரிய வேடத்தை ஏற்றுள்ளார். எனினும் சமாதானம் குறித்தும் இடையிடையே ஊண்டிப் பேசவே செய்கின்றார். அதற்கான முயற்சிகளில் தீவிரமாய் ஈடுபடுபவர்போல தன்னைக் காட்டிக் கொள்கின்றார். நவீன உத்தியுடன் இன அழிப்புப் போர் தொடர்கின்றது.

இராணுவம் குறித்து அன்று அதிருப்தியாய் பேசிய சந்திரிகா அம்மையார் இராணுவ நடவடிக்கைகள் குறித்து இன்று திருப்தியும் பெருமையும் கொள்கின்றார். யுத்தவெறி குறித்த மிதப்பான போக்கே எங்கும் மேலோங்கி நிற்கின்றது. இனப்பிரச்சினை ஒன்று உண்டு, அதற்கு அவசரமான, அவசியமான தீர்வொன்றை காணவேண்டும் என்று, அன்று துடித்த சந்திரிகா அரசு, இன்று விமானக் குண்டு வீச்சுக்களுக்கே முக்கியத்துவம் தருகின்றது. அப்பாவிப் பொது மக்கள் மீதான சிங்களப்படையின் தாக்குதல்களுக்கு புதுவிளக்கம் தருகின்றார். இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதை சற்று பின் தள்ளி வைத்துவிட்டு, இராணுவப் பிரச்சினைக்கு முடிவு கட்டப்போவதாக அறிவிக்கின்றார். முன்னைய சிங்களத் தலைவர்கள் தமிழ்மக்களுக்கு செய்த



அநீதிதான் பிரபாகரன் உருவாகக் காரணம் எனக்கூறி வரலாற்றை சரியாக நாடிபிடித்தவர் போல் தோற்றமளித்த சந்திரிகா அதே வரலாற்றுத் தவறை இழைத்துக் கொண்டிருக்கிறார்.

தமிழ் மக்களுக்கான பாதுகாப்பான பாதை அமைக்க, பூநகரி முகாமை அகற்றி அல்லது குறிப்பிட்ட தூரம் நகர்த்தி ஒரு வழியேற்படுத்தச் சம்மதிக்காமல், ஒரு யுத்தத்தை ஆரம்பித்து வைத்த சந்திரிகா அரசு, தமிழ் மக்களுக்கான விநியோகப் பாதையமைக்க ஜெயசிக்குறுய் படையணிகள் போராடி வருவதாக பிரச்சாரப்படுத்திவருகின்றது. உண்மையில் சந்திரிகா அரசின் ஆக்கிரமிப்புக் கொள்கையின் பிரதான பாத்திரத்தையே வவுனியா கிளிநொச்சி தரைப்பாதை திறப்பு முயற்சி வகிக்கின்றது. தமிழரின் தாயக நிலப்பரப்பை ஆக்கிரமிப்பது, ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் தமது படையினருக்கு சீரான விநியோகத்தை கஷ்டமின்றி வழங்கி ஆக்கிரமிப்பை தொடர்ந்து பாதுகாப்பது, இதற்காகவே ஜெயசிக்குறுய் படையணி போராடிக்கொண்டிருக்கிறது.

பூநகரி முகாமை அகற்றி அல்லது குறிப்பிட்ட தூரம் நகர்த்தி ஒரு வழியேற்படுத்தச் சம்மதிக்காமல், ஒரு யுத்தத்தை ஆரம்பித்து வைத்த சந்திரிகா அரசு, தமிழ் மக்களுக்கான விநியோகப் பாதையமைக்க ஜெயசிக்குறுய் படையணிகள் போராடிவருவதாக பிரச்சாரப்படுத்திவருகின்றது. உண்மையில் சந்திரிகா அரசின் ஆக்கிரமிப்புக் கொள்கையின் பிரதான பாத்திரத்தையே வவுனியா கிளிநொச்சி தரைப்பாதை திறப்பு முயற்சி வகிக்கின்றது.

இந்த நிலையிலும் அரசியல் அமைப்புச் சட்டத்திருத்தம், தீர்வுப் பொதி குறித்து சந்திரிகா அம்மையாரால் பேச முடிகின்றது. இந்த வருட இறுதிப் பகுதியில் இது குறித்த மக்களின் அபிப்பிராயம் அறியும் பொருட்டு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்போவதாக சந்திரிகா அம்மையார் தெரிவித்திருக்கின்றார்.

இவை எல்லாவற்றையும் தூக்கி சாப்பிட்டுவிடும் அளவிற்கு, புதிய பிரச்சாரப் போராட்டத்தை சிறீலங்கா அம்மையார் ஆரம்பித்துள்ளார்.

பிரபஞ்சத்தின் சூனிய முடிவை ஒத்ததாய் இந்த அரசியல் நாடகங்களின் வெறுமையான முடிவை அவர் வெளியரங்கமாக முன்வைத்திருக்கின்றார் என்றே கொள்ள வேண்டும்.

'ஒரே நாடு....... ஒரே தேசியம்'

இதுவே சந்திரிகா அம்மையாரின் புதிய பாடல், சிங்களப் பேரினவாதிகளின் பேரினவாதக் கூச்சலின் மொத்த வெளிப்பாடாய் இந்த அரிய தத்துவத்தை அம்மையார் வெளியரங்கமாக அறிவித்திருக்கின்றார்.

'ஒரே நாடு, ஒரே தேசியம்' – இந்த ஆபத்தான கொள்கை தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை மறுக்கின்றது. தமிழர் ஒரு தேசிய இனம் என்பதை மறுக்கின்றது. அவர்களுக்கு ஒரு தாயகம் உண்டென்பதை மறுக்கின்றது.

ஆக சிறீலங்கா என்பது சிங்கள தேசிய இனத்தின் தாயகம் என்ற முடிவுக்கு வருகின்றது. அங்கு வேறு தேசிய இனங்கள் இருப்பதை மறுக்கின்ற போது, தேசிய இனப்பிரச்சினை மறுக்கப்படுகின்றது. ஆகவே முடிவாக, சிறீலங்காப் பேரினவாத அரசால் இனப் பிரச்சினைக்கான தீர்வு பொதி என்பன தேவையற்ற ஒன்றாகவே உணரப்படுகின்றது.

...ப்பு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உதைக்கும்

இலங்கைத்தீவு இந்திய பூபாகத்தோடு ஒன்றாக இருந்த காலம் உண்டு. இலங்கை முழுவதும் தமிழர்களே வசித்த காலம் உண்டு. வெள்ளையன் காலத்தில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் பொறுப்பிலே இலங்கை மீது ஆளுமை இருந்து வந்தது. வெள்ளையன் காலத்திற்கு முன் சிங்களவர் தனி ஆட்சியும், தமிழர் தனி ஆட்சியும் தனித்தனியாக இருந்தது என்பது இமாலய வரலாற்று உண்மை. ஆனால் வெள்ளையன் வெளியேறிய போது தலைக்கு ஒரு வாக்கு என்ற தேர்தல் முறை காரணமாகச் சிங்கள பெரும்பான்மையினரை வைத்தே கொழும்பில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற சிங்கள பௌத்த இனவெறி கிளப்பப்பட்டது. அந்த இனவெறி நோய் முற்றி இன்று ஈழத்தமிழர்களுக்குப் பெரும் கொடுமையாக முற்றியுள்ளது.

தொடர்ந்து உரிமை பறிக்கப்பட்டு, தற்காலம் அவர்களது உடமையும், உயிரும் பறிக்கப்பட்டு உலகமுழுவதும் சிதறி ஓடி, சொந்த நாட்டிலும் அகதிகளாய் சொல்லொணாத் துயரத்திற்கும் மத்தியில் தங்கள் விடுதலைக்காக சர்வபரித்யாகமும் செய்து போராடிவருகிறார்கள்.

இதில் இந்தியாவின் நிலை என்ன? இந்தியாவில் உள்ள 6 கோடி தமிழர்களில், தொப்புள் கொடி உறவுள்ள ஈழத் தமிழர் பற்றிய இந்திய அரசின் நிலைப்பாடு என்ன? மேலே சொன்னவற்றால் தமிழர்களுக்கு ஆதரவாக இந்திய அரசு இருக்க வேண்டும். ஆனால் இதற்கு மாறாக மறைமுகமாகவும், நேர்முகமாகவும் சிங்கள இனப்படுகொலை அரசிற்கு இந்திய அரசு உதவியே வருகிறது. ஏன்? உலகை ஆதிக்க வட்டாரமாகப் பிரித்துக் கொண்டுள்ள பெரும் பணக்கார வெள்ளை நாடுகள், தங்களுக்கு உதவிக்கரமாக இருக்க வட்டார ஆதிக்க அரசுகளை அங்கீகரித்து வைத்துள்ளனர். அப்படி அங்கீகாரம் பெற்ற நாடுகளில் இந்தியாவும் ஒன்று. அந்த ஆதிக்க வட்டாரத்தின் நாடுகள் சேர்ந்த அமைப்பு தான் 'சார்க்' என்பது. அந்த அமைப்பில் யார் தலைவராகயிருந்தாலும், அதன் தலைமை இந்தியாவிடமே உள்ளது.

சார்க் வட்டார நாடுகளின் சட்டாம்பிள்ளையாக இருப்பதால், அது சிறு நாடுகளைத் தன் கட்கத்தில் வைத்து ஆட்டுவிக்கிறது. அந்த நாடுகளுடன் உள்ள உறவில், அங்கு ஆளும் கூட்டத்தினர் அந்தந்த நாடுகளுக்குள் செய்யும் அக்கிரமங்களையும், அநியாயங்களையும் கண்டு கொள்வதில்லை. ஆனால் அந்நாடுகளின் போக்கு தனக்கு மாறுபாடாக இருப்பதாகக் கருதினால் அவைகளை மிரட்டவும் தயங்குவதில்லை. இலங்கையைப் பொறுத்த வரை பெங்களூர் சார்க் மகாநாடு வரை இந்த மிரட்டும் போக்கையே இந்தியா கடைப்பிடித்து வந்தது.

ஆனால் ஈழத்தமிழரின் உண்மையான விடுதலைப் போராட்ட வீரர்களான புலிகளிடம் தோற்கும் நிலை வந்ததும் அப்போதைய இலங்கைப் பிரதமர் ஜெயவர்த்தனா இந்தியத்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# காலுக்கு முத்தம்



தலைமையிடம் சரணடைந்தார். அந்த நிலைமைக்கு அவர் சொன்ன விளக்கம் 'இந்தியாவிடம் சரணடையாவிட்டால் நான் பிரபாகரனிடம் சரணடைய வேண்டியதாயிருந்திருக்கும்.' என்பதே யாகும்.

பெங்களூர் சார்க் மகாநாட்டிற்கு முன்பும் சரி, பின்பும் சரி கொழும்பு அரசு இந்தியாவின் நாணயமான நண்பனாக இருந்ததுமில்லை, இருக்கவுமில்லை, இருக்கப்போவதுமில்லை. கொழும்பு அரசு இந்தியாவின் வம்சாவளி தமிழர்களுக்குச் செய்த கொடுமைகள் எண்ணற்றவை. ஆனால் இலங்கை அரசின் அத்தகைய கொடுமைகளிலிருந்து அவர்களுக்கு நிவாரணம் பெற்றுத் தருவதை விடுத்து, கொழும்பு அரசின் ஆசைகளையே, தன் தார்மீக கடமையையும் மறந்து நிறைவேற்றி வந்த இந்திய அரசு இன்று வரையிலும் அவர்களைக் கொழும்பின் கோரப் பிடியிலேயே இருக்க வைத்துள்ளது.

அதைவிடக் கொடுமை சமீபகாலங்களில் வணிகம் செய்யவெனவும், தொழில் நடத்த எனவும் இலங்கைக்கு, குறிப்பாக, தென்னிலங்கைக்குச் சென்று தொழில் நடத்தி வந்த இந்தியக் குடிமக்களான தமிழர்களே அதிகம் உயிர், உடமை இழந்தவர்களாவார்கள். ஸ்ரீராம் என்ற ஒரு தமிழரின் எரிக்கப்பட்ட நூல் தொழிற்சாலை மட்டும் ரூபா 5 கோடி பெறும். இலங்கையில் அப்படி வணிகம் மற்றும் தொழில் நடத்திய இந்தியக் குடிமக்கள் அந்தப் பெரும் இனப்படுகொலையில் 860 கோடி முதல் 1000 கோடி வரை மதிப்புள்ள சொத்துக்களை இழந்து விட்டனர் என்பது ஒரு கணக்கு. இந்திய அரசு தமிழர்களையும் இந்தியர்களாக எண்ணியிருந்தால் இலங்கை அரசிடம் நஷ்ட ஈடு அல்லவா கேட்டிருக்க வேண்டும். கேட்காதது மட்டுமல்ல, தொடர்ந்து இந்தியாவின்பால் விரோதம் காட்டி வரும் கொழும்பு அரசுக்கு ஆதரவாகவும், அவர்கள் தமிழர்களுக்குச் செய்யும் கேடுகளுக்கு நேர்முகமாகவும், மறைமுகமாகவும் தான் உதவிகரமாக இருந்து வருகிறது. ஈழத்தமிழர்களுக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கும், சிங்கள அரசு தைரியமாகக் கேடு செய்யும் துணிவு, இந்திய அரசின் ஆதரவால் தான் ஏற்பட்டுள்ளது.

**இந்திய அரசு தமிழர்களையும் இந்தியர்களாக எண்ணியிருந்தால் இலங்கை அரசிடம் நஷ்ட ஈடு அல்லவா கேட்டிருக்க வேண்டும். கேட்காதது மட்டுமல்ல, தொடர்ந்து இந்தியாவின் பால் விரோதம் காட்டி வரும் கொழும்பு அரசுக்கு ஆதரவாகவும், அவர்கள் தமிழர்களுக்குச் செய்யும் கேடுகளுக்கு நேர்முகமாகவும், மறைமுகமாகவும்தான் உதவிகரமாக இருந்துவருகிறது.**

இந்திய அரசு ஈழத்தமிழர் மேல் அறிவிக்கப்படாத ஒரு போரை நடத்தி வருகிறது. சிங்களப் படை ஈழத் தமிழரைத் தேடி அழிக்க உதவிகரமாகத் தன் கடலோரக் காவல் படையை நிறுத்தி உதவுகிறது. ஏன்? கொழும்பு துறைமுக எண்ணைக் கிணறுகள் தீப்பிடித்த போது அவசரமாக எண்ணெய்த் தீயை அணைக்கும் விஷேட கப்பலை இந்திய அரசு அனுப்பி அணைத்தது. கொழும்புக்கு ஆயுதம் ஏந்திச் செல்லும் கப்பலுக்கு கொச்சியில் எரிபொருள் நிரப்ப உதவியது. ஆனால் கிட்டுவின் கப்பல் சர்வதேச எல்லைக்குள் சென்றதை சட்டவிரோதமாக இங்கு இழுத்து வந்து பெரும் சேதத்தை விளைத்தது. ஏன்! சிங்கள மக்களையே நரவேட்டை ஆடக் கொழும்பு ஆதிபத்திய அரசுக்கு இந்திய அரசு உதவித்தான் வருகிறது.

இந்திய அரசு விசேட சிரத்தை எடுத்து உண்மைப் போராளிகளை பயங்கரவாதிகளாகச் சித்தரித்து இந்திய மக்களுக்கு குறிப்பாகத் தமிழக மக்களுக்குக் காட்டுகின்றது. தமிழகத்தில் விடுதலைப் போராளிகள் பற்றிய அவதூறு பரப்பும், சிங்கள இராணுவ, மற்றும் அவர்களது இரகசிய காவல் துறை முதலியவற்றின் பிரச்சாரக் கதைகளே பெரிதும் பரப்பப்படுகின்றன. இவை 1939 – 44, 2–ம் உலகப் போரில் வெள்ளை அரசு வெளியிட்ட 'யுத்த சஞ்சிகை'–யை நினைவுபடுத்தும். ஆனால் சிங்கள அரசியல்வாதிகள் ஒருவரை ஒருவர் ஈவிரக்கமின்றிக் கொல்வதும், ஜே.வி.பி. இயக்கத்தின் இளைஞர்களை கிட்லர் செய்தது போல் 'மரணப் படை' (Death Squad) அமைத்து 1971–ல் 20,000 ஜே.வி.பி (சிங்கள) இளைஞர்கள் பச்சைப் படுகொலை செய்யப்பட்டதையும், 1988–89–ல் மீண்டும் அவர்கள் 80,000–க்கு மேல் எவ்வித சட்ட சம்பந்தமும் இன்றிக் கூலிக் கொலையாளிகளை வைத்துக் கொன்று குவிக்கப்பட்டதையும் மறைக்கமுடியாது. (அப்படிக் கொன்று கூட்டம், கூட்டமாகப் புதைக்கப்பட்ட எலும்புக் கூடுகள் தற்போது தோண்டி எடுக்கப்படுகின்ற செய்தி அடிக்கடி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வருகிறதல்லவா?). அத்தகைய மாபாதக செயலுக்காக அதை முன்னிருந்து நடத்திய ஜெனரல் ரஞ்சன் விஜயரத்னாவை, சிங்கள இனவெறி ஏற்றப்பட்ட மக்கள் அவரை ஒரு மாவீரனாகவே இன்னும் போற்றுகின்றனர். இப்படி ரத்த வெறி கொண்டதையும், சிங்கள பௌத்த இனவெறி பற்றியும் இந்திய அரசு படுமனம் சாதிக்கிறது. அதே விஜயரத்தன ஈழத்தமிழர் இளைஞர்கள் சுமார் 3.000 பேரை நேரடியாகக் கொலையாளிகளை அனுப்பிக் கொன்று வந்தபோது; அந்த ஜெனரலின் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட பின்தான், சிங்கள தமிழ்த் தாய்மார் நிம்மதி மூச்சு விட்டனர். கொழும்பில் தாங்கள் ஈன்றெடுத்த





செல்வங்களை கொன்ற கொலைகாரர்களைக் கண்டித்து, அன்னையர் முன்னணி (தமிழ்– சிங்கள அன்னையர்) கூட்டாக ஒரு மாநாடு நடத்தினர். சிங்கள இன வெறிக் கொழும்பு அரசு, ஒலி பெருக்கியில் 'புலிகள் வருகிறார்கள் – கொன்று போடுவார்கள்' எனப் பிரச்சாரம் செய்தது. கூட்டத்திற்கு தலைமை தாங்கிய சிங்கள அன்னை 'புலிகள் கொலைகாரர் அல்ல, நீங்கள் தான் கொலைகாரர்கள், புலிகள் ஒரு நாளும் அப்படிச் செய்யமாட்டார்கள்' என மேடையிலே அந்த அன்னை அறிவித்தார்.

இதையெல்லாம் இந்திய அரசு இந்திய மக்களுக்கு அறியத்தருவார்களா? மாட்டார்கள்.

1971–ல் நடந்த ஜே.வி.பி. புரட்சியின் போது கொழும்பு அரசு கவிழ்ந்து விட்டது. வானொலி நிலையத்தையும் அவர்கள் கைப்பற்றிவிட்டனர். அன்றும் இந்திய அரசுதான் வான்படையை அனுப்பி சிங்கள அரசை மீட்டு ஆட்சியில் அமர்த்தி வந்தது.

மீண்டும் அமைதிப் படையை அனுப்பி அமளி செய்து மூக்கறுபட்டுத் திரும்பியது. ஆனால் அதே சிங்களவர்கள் 'இந்திய ஆக்கிரமிப்புப் படையே திரும்பிப் போ' என்றனர்.

ஆனால் சிங்களவர் எட்டி எட்டி உதைத்துக் கொண்டே இருந்தாலும், இந்திய அரசு நிறுத்தாமல் உதைக்கும் காலுக்கு முத்தம் கொடுத்துக்கொண்டே இருக்கிறது. இந்த சுயமரியாதையற்ற, அசிங்க அரசியலுக்கு, இந்திய ஆளும் வர்க்கங்களுக்கு ஒரு உள்நோக்கம், சுயநலம் உள்ளது. எனவேதான் அவர்கள் உதைக்கும் காலுக்கு முத்தம் கொடுத்துக் கொண்டே உள்ளனர்.

1983 ஜூலை இனக் கலவரத்தின் போதும் சரி, அதன் பிறகும் சரி, 'இந்திய நாய்களே வெளியேறுங்கள்' என்ற ஒலி முழக்கத்தை சிங்களவர்கள் செய்து கொண்டு தான் இருக்கிறார்கள். கொழும்பில் உள்ள இந்திய ஹை கமிஷனர் அலுவலகம் தாக்கி சேதாரப்படுத்தப்பட்டது. துணைக் கமிஷனர் காலில் கடும் அடி. இந்தியா மூச்சுவிடவில்லை. பாகிஸ்தான் இந்தியா மீது படையெடுத்த போதும், சீனப்போரின் போதும் சிங்கள அரசு இந்தியாவுக்கு ஆதரவு காட்டியதா? பாகிஸ்தானுக்கல்லவா உதவிகரமாக இருந்துவந்தது. வங்காள தேச விடுதலைப் போரின் போது ஐ.நா.சபையில் இந்தியாவிற்கு விரோதமான நிலையைதானே கொழும்பு எடுத்தது. அப்போது சோவியத் மற்றும் அதன் சார்பு நாடுகள் 5 மட்டுமே இந்தியாவை ஆதரித்தன. உண்மையில் சோவியத்தின் 'வீட்டோ பவர்' மட்டுமே இந்தியாவின் மானத்தைக் காப்பாற்றயது.

காஷ்மீரத்துப் பண்டிதர்கள் ஐ.நா. சபை சென்று மனுக் கொடுக்கலாம். ஆனால் அல்லல்பட்டு ஆற்றாது அழுது நிற்கும் ஈழத்தமிழர்களுக்காக ஐ.நாவில் மனுக் கொடுத்தால் டெல்லி புருவத்தை நெரிக்கிறது. கென்யாவிலும் இதர ஆபிரிக்க நாடுகளிலும் இந்தியர்கள், அதாவது வட இந்தியர்கள் பாதிக்கப்பட்டால் டெல்லியில் இருந்து அவர்களுக்குப் பாதுகாப்பு விரைகிறது. காஷ்மீரத்து பண்டித அகதிகளுக்கும், ஆப்கான் அகதிகளுக்கும், திபெத்திய அகதிகளுக்கும் இங்கு சுகபோக வாழ்வு. ஆனால் ஈழத்தமிழ் அகதியோ கொட்டடியில் அடைக்கப்பட்ட கால் நடை போல் வாழ்க்கை. காவலர் தொல்லை வேறு. பக்கத்து சிறு நாடுகளுக்கு நாம் எதையும் எதிர்பாராமல் நன்மை செய்து கொண்டே இருந்தால் அவை நாளடைவில் நமக்கு நல்ல நண்பர்களாகவே மாறுவர் – இருப்பர் என்பது தான் குஜ்ரால் கொள்கை. (குஜ்ரால் டாக்ட்ரின்) இந்தக் கொள்கையை இந்திய அரசு, கொழும்பைப் பொறுத்த வரை ஒரு வன்மத்தோடு கடைப்பிடிக்கிறது. எனவே சிங்கள அரசு இந்தியாவிற்கு பகிரங்க விரோதம் பாராட்டினாலும் அதை கண்டுகொள்வதில்லை. அப்படிப் பகை பாராட்டி இந்தியக்

**வழக்கறிஞர்**
**பூ.அர. குப்புசாமி, கரூர்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

குடி மக்களான தமிழக மீனவர்களை தினமும் சுட்டுத் தள்ளுவது, துரத்திப் பிடித்து அவர்களது மீன்களையும், மீன் வலையையும் கவர்ந்து செல்வது, அவர்களைப் பிடித்து இலங்கைச் சிறையிலடைத்து பணயக் கைதிகளாக நடத்துவது. இந்த அத்துமீறலையும், இந்திய அரசாண்மைக்கு சவால் விடு வதையும் தினம் செய்து வரும் சிங்கள அரசின் கடற்படைக்குத் துணையாக இந்திய கடலோரக் காவலர் படை 500 கி. மீ. தூரத்திற்கு தமிழகக் கடலோரத் தில் நிறுத்தப்பட்டுள்ளது. சமீபத்தில் வலுப்படுத்தப்பட்டுள்ளது. கச்சதீவை தாரை வார்த்ததும், அங்கு ஒப்பந்தத் திற்கு விரோதமாக இலங்கை அரசு அதைக் கடற்படைத் தளமாக உபயோ கிப்பதும் இந்திய அரசின் தமிழர் விரோத கொள்கையின் உச்சாணி விரோதமாகும். சமீபத்தில் வந்த சிங்கள அமைச்சர் கதிர்காமர் இந்தியாவிடம் இரகசியமாக கச்சதீவை ஒட்டி உள்ள பல சிறு தீவுகளையும், பவளப் பாறை களையும் கூட இலங்கைக்குக் கேட்ட தாகத் தகவல்.

ஏற்கனவே நேரு இந்திய – தமிழகப் பொருளாதாரத்திற்கு பெரும் ஊக்க மளிக்கும் சேது சமுத்திர திட்டத்தை, சிங்கள தலைவர்கள் தங்கள் கொழும்பு துறைமுக முக்கியத்துவம் குறைந்து விடும், எனவே அத் திட்டம் வேண் டாம் எனக் கேட்டுக் கொண்டதன் பேரில் நேரு குடும்பம் அதைக் கிடப் பில் போட்டது. சேது சமுத்திரத் திட் டத்திற்கென இந்தியக் கடற்கரையோரக் கிராமங்களில் கொஞ்சதூரம் நிலங் களை வாங்க, விற்கக்கூடாதென ஆணை பிறப்பித்து 33 ஆண்டுகளாகின்றன. இனி அத்திட்டம் நிறைவேறும் வாய்ப் பில்லை. எனவே அந்த அரச உத்த ரவை ரத்துசெய்ய வேண்டுமென்று அந்த வட்டார மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். சிங்கள பௌத்த வெறி அரசிற்கு அனுசரணையாக இந் திய அரசு இழக்கத் தயாராக இருக்கும் திட்டங்களில் ஒன்று சேதுசமுத்திரத் திட்டம்.

பெங்களூர் சார்க் மாநாட்டிற்கு முன்னர் ஜெயவர்த்தனா, இந்தியா பெரிய நாடுதான். எங்கள் நாட்டை சில மணி நேரத்தில் இந்தியா கைப் பற்றி விடலாம். ஆனால் அதற்குள் நாங்கள் இங்குள்ள எல்லாத் தமிழர் களையும் சுட்டுத் தள்ளி விடுவோம் என்று உறுமினார். அப்படிப்பட்ட ஒரு பாசிஸ வெறி கொண்ட நபருக்கு



இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை கொழும்பில் மரியாதை அணிவகுப்பின் போது ஒரு சிங்களச் சிப்பாய் துப்பாக்கி சனியனைத் திருப்பி மட்டையால் பிடறியில் ஓங்கி அடிக்கிறான். இதை உலகெங்கும் தொலைக்காட்சியில் காட்டினார்கள். “வெய்யில் மிகுதியால் புத்தி தடுமாறி செய்து விட்டான்” என்றார் ஜெயவர்த்தனா. அந்தக் கொலை முயற்சிக்காரனை 30 நாட்களில் விடுதலை செய்து விட்டனர். இப்போது அங்கே அவன் ஒரு அரசியல் தலைவன்!

டெல்லியில் வைத்து இந்திய அரசு உயர்தர வைத்தியம் அளித்தது. ஏன்? அவரை விட தமிழர்கள் மீது வெறி காட்டிய சிறீமாவுக்கு கேரளாவில் வைத்து நவரக்கிளி – பிளிச்சல் வைத் தியம் அளித்தது. இவை எல்லாம் குஜ் ரால் டார்ட்ரின் – இற்கே வெளிச்சம்.

இலங்கையில் தமிழர்களை ஒழிப் பதே தங்கள் புனித மதக் கடமை என்றுகூறி ஒழிக்கிறார்கள். ஆனால் இந்து தர்மத்தைக் காக்கவே அவதாரம் எடுத்த “தர்ம ரட்சக புருஷர்கள்” ஏரா ளம் உள்ள இந்தியாவில் அங்குள்ள இந்துக்களை அழிக்காதீர்கள் எனக் குரல் கொடுக்கக் கூட ஆள் இல்லை. அதே கூட்டம், இந்தியாவில் உள்ள பௌத்த மதக் கோவில்களையும், சொத் துக்களையும் கைப்பற்றி சுகபோகமாக அனுபவித்து வருகின்றனர் என்ற செய்தி யையும் அந்த வெறியேற்றப்பட்ட சிங் கள பௌத்தர்களுக்கு யாரும் சொல்வ தில்லை.

இந்தியாவில் புலிகளால் ஆயுதக் கலாச்சாரம் பரவுகிறது என்று ஒரு புழுதி பிரச்சாரம் நடக்கிறது. ஆனால் புலிகள் தவிர்ந்த இதர ஆயுதக் குழுக் கள் அனைவரும் ஒன்று கொழும்பு அரசின் கையாட்களளாக இருக்கிறார் கள், அல்லது இந்திய அரசின் பாது காப்பில் இங்குள்ளார்கள். உண்மையில் கடந்த காலம் முழுவதும் தமிழகத்தில் நடந்த பல தகாத செயல்கள் அனைத் திலும் சம்பந்தப்பட்டவர்கள் புலிகள் அல்லாதவர்களே என்பதை அரசே கணக்கு வைத்துள்ளது.

இந்தியாவில், இலங்கையைத் துண் டாட விடக் கூடாது என்று ஒரு பிரச் சாரம் நடக்கிறது. ஆனால் பொம்மை மாநில முதல்வராகயிருந்து இங்கே ஆதரவாளர்களுடன் ஓடிவந்த வரத ராஜப் பெருமாள் வரும் முன்னர் தமிழீழத்தை ஒரு சுதந்திர நாடு என அறிவித்தும் தனிக்கொடி ஏற்றிவிட்டு வந்தாரே! அப்படிப்பட்டவரை, ‘ஏழு கடல் தாண்டி ஒரு தீவுக்குள் பாது காப்பாக வைக்கப்பட்ட அரக்கன் கதை போல’ எங்கோ ஒளித்து வைத்தி ருக்கிறார்களே! அதெப்படி? அதுவும், இந்த இரு நாடுகளிலும் உள்ள புலிக ளல்லாத குழுக்களை எல்லாம் சேர்த்து தேவையானால் ஒரு ஏற்பாட்டை உலகை ஏய்க்க செய்யும் நோக்கத்தில் உள்ள சிங்கள இன அரசுக்கு இந்திய அரசு உதவவேயாகும்.

நேரு காலத்தில் இருந்து குஜ்ரால் காலம் வரை (வி.பி.சிங் காலம் சற்று வித்தியாசமானது) கொழும்பு அரசு இந்தியாவை உதைத்துக் கொண்டே இருக்கிறது. இந்தியா சிங்கள இனவெறி கொழும்பு அரசின் அத்தகைய உதைக் கும் காலுக்கு முத்தமிட்டுக் கொண்டே இருக்கிறது. அத்தகைய முத்தங்களில் சிலவற்றை மட்டுமே இங்கு கொடுத் துள்ளோம். ★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தூது

'சத்ஜெய குடிசை'
வன்னி
10–06–97

அன்புள்ள அஜிதனுக்கு,

வணக்கம்.

உங்களின் கடிதம் மிகத் தாமதமாகவே கிடைத்துள்ளது. தபாற்போக்குவரத்தின் ஒழுங்கின்மையால் இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளது. சிறீலங்கா அரசின் 'தர்ம நியம'த்தின்படி கடிதங்களை ஒருமனிதன்–தமிழர்– உரிய காலத்தில் கிடைக்கப்பெறுவதும் தகாதது. தமிழர் அனுப்பும் கடிதத்தை வேறொருவர் பெறுவதற்கும் இந்த நியமம் சில விதிகளை வைத்துத்தானிருக்கிறது. இது 'இன்ரநெற்' யுகம். ஆனால் எம்முடைய சாதாரணத் தபாலோ தவங்கிடந்து, சீரழிக்கப்பட்டு காலங்கடந்தே போய்வருகிறது.

காலமே, நீ இப்படி எத்தனை நிகழ்ச்சிகளை உன் வரலாறு நெடுகிலும் சந்தித்திருப்பாய்.

நண்ப,

என்னுடைய எல்லாக் கடிதங்களைப் போலவும் இதிலும் பிரச்சினைகளையும் துயரத்தையும் கோபத்தையும் தான் எழுத முடிகிறது. நானென்ன செய்வது? இவற்றின் நடு மையத்தில் என் இருப்பு சதா நெருக்கடிக்குள்ளாகிக் கொண்டிருக்கிறதே!

இங்கே மறுபடியும் வேர் புடுங்கல். இந்தத் தடவையும் 'ஜெயசிக்குறு' என்று ஒரு புதிய பெயரில் பசிய வாழ்வு பிடுங்கப்பட்டுள்ளது. வவுனியாவிலிருந்தும் நெடுங்கேணியில் இருந்தும் ஷெல்லடியுடனும் குண்டுவீச்சுடனும் தொடங்கிய இந்த அரக்கத் தாண்டவம் முடிவில்லாமல் இடையில் நிற்குது. பல கிராமங்கள் இந்தத் தடவையும் கைவிடப்பட்டுள்ளன. சருகடைகின்ற அவற்றின் முற்றங்கள், வீதிகளைப் புற்கள் மேய்கின்றன. வேலிகளைக் கறையான் தின்கிறது. ஷெல்லில் சிதறுண்ட தென்னைகள் தலையில்லாமல் – வட்டுமுறிந்து – மொட்டையாக நிற்கின்றன. பட்டியடைக்காத மாடுகள் குழுப்பத்துகின்றன. வயல்கள் தரிசாகின்றன. தீயில் எரிந்த குடிசைகளின் சாம்பல், காற்றில் அள்ளிச் செல்லப்படுகிறது. சாம்பல் பரவிய காற்று உம் முகத்திலும் படக்கூடும். இந்தக் காற்று உம் முகம் தடவும் போது அதன் மணத்தில் எங்கள் வியர்வையின் மணத்தை அறிவீர்கள். எங்கள் உழைப்பின் அடையாளமாக அது இருக்கும். எங்கள் வாழ்வின் முகமாக அது இருக்கும். அப்போது எங்கள் கண்ணீரின் அடையாளத்தை அது காட்டும்.

சனங்கள் மறுபடியும் காடுகளிலுறைகிறார்கள். வனவாசம் தொடர்கிறது. இராமனுக்கு பதினான்கு வருஷங்கள். பாண்டவர்களுக்கு பன்னிரண்டு ஆண்டுகள். விக்கிரமாதித்தனுக்கு காடு ஆறு மாதம்; நாடு ஆறு மாதம். நமக்கோ பிடுங்கிய வாழ்வில், எல்லையில்லாக் காலநீட்சியாய் தொடரும் துன்பியல், கடுங்கோடையின் வரட்சியில், நீரில்லாத காடுகளில் குழந்தைகளுடனும் வயோதிபர்களுடனும் வனவாசம் செய்வதென்பது சாதாரணமானதல்ல. 'சத்ஜெய' நடவடிக்கையில் பிடுங்கிய வேர் பதியமாக முதல் இப்போது 'ஜெயசிக்குறு' என்று அடுத்த பிடுங்குதல்.

வாழ்ந்த வீடுகள், வாழ வைத்த கிராமங்கள், புழங்கிய பொருட்கள், வைத்த பயிர், வளர்த்த பிராணிகள், சேர்த்த தேட்டம், செய்த தோட்டம் என்று எல்லாவற்றையும் விட்டு உயிரை மட்டும் கொண்டு அனாதரவாக வெளியேறித் தெருவில் நடப்பதென்பது எவ் வளவு கொடுமையானது? அடுத்தகண வாழ்வுக்கான எந்த வெளிச்சமும், வழியும் தெரியாத ஒரு நிலையில், மரங்களின் கீழே குடும்பம் குந்துவது எத்தகைய வேதனைக்குரியது? ஆனால் இவ் வளவுக்குமப்பால் ஒரு நம்பிக்கை – நமது போராட்டம் வெல்லுமென்பதுதான். நமது வழி நியாயமானது; சத்தியமானது. இது ஒன்றே ஆறுதலளிப்பது. இந்த ஆறுதலுடன், இந்த நம்பிக்கையுடன் தான் மீண்டும் மீண்டும் குடிசைகள் முளைக்கின்றன. மனிதர்கள் வாழ்கின்றார்கள். புதிய கிராமங்கள் உருவாகுகின்றன. இது பிடுங்கப் பிடுங்கப் பதியமாகும் ஒரு பிடிவாதம்தான்.

வன்னியைப் பிரித்துவிட துடிக்கிறார்கள் சிங்களப் பேரினவாதிகள். முதலில் வடக்குக் கிழக்கு எனப் பிரிப்பு - பிறகு கைப்பற்றிய இராணுவப் பிரதேசங்களை பாதுகாப்பு வலயங்களாகப் பிரிப்பு - மணலாற்றைத் தங்களுடைய அநுராதபுரம் மாவட்டத்துடன் இணைக்கப் பிரிப்பு. இப்போது வன்னியைப் பிரித்து பிரதான வீதியைக் கைப்பற்றி யாழ்ப்பாணத்துக்குச் செல்வதெனத் திட்டம். எங்கள்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மண்ணின் சுதந்திரச் சூடு ஆறாத இடம் வன்னி - எதிரிகளுக்கு எப்போதும் அதிர்ச்சி மையமாக வன்னியே அமைந்ததும் வரலாறு. அதிர்ச்சி மையத்துள்ளே தான் சிக்கப் போகிறது சிங்கள இராணுவம். இதன் முதல் அடையாளம் தான் தாண்டிக்குளத்தாக்குதல். இராணுவத்தின் முன்னேறும் ஊக்கத்தை பெரும் தளர்ச்சிக்குள்ளாக்கிய இந்த அதிரடி, வன்னி மீதான சிங்கள ஆக்கிரமிப்புக்கு ஒரு எச்சரிக்கைதான். எங்கள் போராளிகள் தரப்பிலும் எண்பதுக்கு மேலானோர் வீரச்சாவு. எவ்வளவு உயிர்களும், இளைய இரத்தமும் இந்த விடுதலைக்காகச் சிந்தப்படுகிறது பார்த்தீர்களா?

ஆனால் சிங்களவர்கள் போரைத் தொடர்ந்து நடத்துவதில் ஆர்வத்துடன் இருப்பதுதான் நகைப்பிற்குரியதும் துக்கமானதுமாகும். அநுபவங்களை மறுதலிக்கும் ஒரு இனமாக அவர்கள் தொடர்ந்தும் இருக்கவே விரும்புகிறார்கள் போலுள்ளது. என்றாலும் காலம் பொய்த்து விடுவதில்லையா! தகுந்த பாடத்தை அது புகட்டும்.

தவிர, இங்கே இந்த இடப்பெயர்வுகளால் இன்னும் இன்னும் புதிய புதிய பிரச்சினைகள் தோன்றியபடியே இருக்கின்றன. அகதிகளுக்கான நிவாரணத்தை நிறுத்தி விட்டதாக இப்போது புதிய அறிவித்தலை சிங்கள அரசு அறிவித்திருக்கிறது. ஏற்கனவே பல பொருட்கள் தடை செய்யப்பட்டிருக்கின்றன. உணவுப்பொருட்கள் எடுத்துவருவதற்கும் தடை. இதில் புதிதாக நிவாரண வெட்டும். இப்படியே நீள்கிறது சிறீலங்கா அரசின் 'தாராள ஜனநாயகம்?, திரும்பவும் இடம்பெயர்ந்தவர்களால் நிரம்பி வழியும் பள்ளிக்கூடங்களில் வகுப்புகள் இடைநிறுத்தமாகியுள்ளன.

இனி இந்த மக்கள் 'ஜெயசிக்குறு குடிசை'களை அமைத்துப் போகும்வரை, படிப்பும் குலைந்து விடுகிறது. பிரச்சினைகளை உருவாக்கி அதில் நம்மைச் சிக்கவைப்பதிலேதான் சிங்கள அரசு வெற்றியீட்ட முனைகிறது. உற்பத்திப் பகுதிகளை ஆக்கிரமித்தும் இராணுவ நடவடிக்கை மூலம் சீரழித்தும் விட்டு உணவுத் தடை, நிவாரண நிறுத்தம் என்றெல்லாம் வதைக்க முயல்கிறது சிங்கள அரசு.

நண்ப, மருத்துவ வசதிகள் கூட இப்படித்தான். நீங்கள் இவற்றை நேரிற் பார்த்தால் அல்லது இந்தச் சூழலுக்குள் வாழ்ந்தால் நிச்சயம் அரசு எதிர்ப்புச்சக்தியாக உடனே மாறுவதைத் தவிர வேறில்லை. மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு. கடந்த மாதத்தில் அக்கராயன், மல்லாவி, புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைக்கு வந்த மக்கள் வழமையிலும் அதிகம். போசாக்கின்மை மக்களைத் தொடர்ந்தும் நோயாளிகளாகவே வைத்திருக்கிறது. திரும்பத் திரும்ப ஆஸ்பத்திரி வாசல்களில் நடுங்கியபடியும் தள்ளாடிக்கொண்டும் தவிக்கும் விழிகளுடன் நிற்கும் மக்கள். வைத்தியசாலையில் வேலைசெய்யும் அந்த ஊழியர்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே புரியவில்லை. பாவப்பட்ட ஜென்மங்கள் மாதிரி நாம் ஒவ்வொருவரும் நிற்கும் போது அவர்கள் இரக்கப்பட்டு பசி, நேரம், சலிப்பு என எதையும் பாராமல் நம்மைப் பராமரிக்கிறார்கள். இந்த மண்ணின் சிறப்புத் தான் இதென்று நினைக்கிறேன். எங்கள் அம்மாவுக்கும் அண்ணாவுக்கும் கடந்தவாரம் கடுமையான சுகவீனம். நான், அந்த நான்கு நாட்களில் பட்ட சிரமத்தையும் அலைச்சலையும் நினைக்கும் போது அந்த ஊழியர்கள் மட்டும் எப்படி இவ்வளவு பொறுப்புணர்வுடனும் பொறுமையுடனும் உழைக்கிறார்கள் என்று ஆச்சரியமாயிருக்கு. ஆனாலுமென்ன, நோயாளிகளின் இறப்புவீதம் மருந்தின்மையாலும் போதிய உணவின்மையாலும் கூடிக்கொண்டுதானிருக்கிறது. சிறு குழந்தைகள் ஒன்றிரண்டு நாள் நோயில் இறந்து விடுகின்றன. கதறி அழும் மெலிந்த தாய்மார்....., எதுவுமே பேசத் தோன்றாமல் மௌனத்துடன் உறைந்திருக்கும் ஆண்கள்......., சந்தையில் துரத்தித் துரத்தி பொருட்களை வாங்க வற்புறுத்திக் கொண்டிருக்கும் சிறுவர்கள்... இப்படித் தான் இருக்கிறது நிலவரம்.

நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? என்று கேட்டிருந்தீர்கள். நலமாகத்தானிருக்கிறோம். நாம் விடுதலையை ஆழமாக நேசிக்கின்றோம். எத்தனை வேதனைகளும் சோதனைகளும் நேர்ந்தாலும் இந்த நேசிப்பு நம்மைப் பழுதடைய விடாது. இது போதனையல்ல. உண்மை.

நீங்கள் அனுப்பிய பணம் கிடைத்ததால் பல தேவைகளை ஓரளவுக்குச் சமாளித்தோம். பொருட்கள் ஏதாவது அனுப்பலாமா? என்று கேட்டு எழுதியிருந்தீர்கள். உங்கள் மனதுக்கு எங்களின் மனமார்ந்த மெய்நன்றி. எங்களுக்குரிய உணவு, மருந்துப் பொருட்களையே தடுக்கும் இந்த அரசு, உங்கள் உதவிப் பொருட்களை எங்ஙனம் அனுமதிக்கும்? இவையெல்லாவற்றையும் நீங்கள் நன்கு அறிவீர்கள்.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

'என்றோ ஒருநாள் சந்திப்போம்' என்ற உங்களின் மன ஆவலையும் அந்த நம்பிக்கையையும் விருப்பத்தையும் நான் உணருகிறேன். அந்த நாளுக்காகத்தான் நாமும் இப்படிப்பாடுகளைச் சுமந்து வருகின்றோம். எங்கள் மாமாவின் மகனும் அவனுடைய மூன்று நண்பர்களும் புதிய போராளிகளாக இணைந்துவிட்டார்கள். மாமா புரிந்து கொள்ளும் பக்குவமுடையவர். அவருக்குக் காலமும் தேவையும் தெரியும். ஆனால் மாமி பிள்ளைப் பாசத்தால் இரண்டு நாட்கள் குழம்பி இப்போது தேறிவிட்டா. தன்னுடைய இரண்டாவது பிள்ளையும் போராட்டத்துடன் இணையும் போது மாமியின் தனிமையை எப்படி நிரப்புவதென்று மாமா கேட்டார். காலம் ஒரு நிறைவை தமக்குத்தரும் என்று மாமா பிறகு சொன்னார். அது சரிதான், விடுதலைக்காகத் தம்பிள்ளைகளும் பாடுபட்டார்களே என்ற நிறைவுதானே அது.

நான் இடம்பெயர்ந்தவர்களுக்குப் புதிய குடியிருப்புக்கள் அமைக்க உதவிக்கொண்டிருக்கிறேன். எங்களுடைய 'சத்ஜெய குடிசை'யைப் போல இப்போது வந்தவர்களுக்கு 'ஜெயசிக்குறு குடிசைகள்', இது நம் துயரத்தின் அடையாளமாக இருக்கட்டும். இந்தத் துயரத்திலிருந்தே நாம் எழுவோம். துயரந்தான் மனிதனை அதிகமதிகம் புடம்போடுகின்றது. நம்மையும் புடம் போடும்.

நீங்கள் நம்மைப் புரிந்து கொண்டாற் போதும். நமது துயரத்தை உணர்ந்து கொண்டால் காணும். நம் பிரச்சினையைத் தெரிந்தால், நது இலட்சியத்தை உணர்ந்து கொண்டால் அது உங்களையும் எம்முடன் ஒன்றிணைக்கும். இன்னும் இன்னும் எம்முடன் நெருங்கி, உதவி, ஒன்றாகுவீர்கள். உங்களைப் போல ஒவ்வொருவரும் நமக்கு உதவ வேண்டும். நமது போராட்டத்துக்கும், இந்த விடுதலை வாழ்வுக்கும் அது தெம்பூட்டும்.

நண்பா, இங்கே இப்போது வெய்யில் தகிக்கிறது. இது கோடை. சோளகம் மூசிவீசுது. எதிர்காற்றில் தான் எங்கள் பயணங்கள் நடக்கின்றன. ஏற்றமும் இறக்கமும் நிறைந்த நீண்ட வீதிகளில் இந்தப் பயணங்கள்......

இனிச் சில புதினங்களை மட்டும் சிறுகுறிப்பாகக் குறிப்பிடுகின்றேன்.

1. இங்கே நீண்டகாலமாக வெளிவரும் 'ஈழநாடு' பத்திரிகை, இப்போது 'ஈழநாடு மாதமலர்' என்ற சஞ்சிகையை தன்னுடைய மாதாந்த வெளியீடாக வெளியிடுகிறது. கலை, இலக்கியம், சமூகவியல் மற்றும் துணுக்குகள், சிறுகுறிப்புகள் எனப் பலவிடயங்களுடன் இது வெளிவருகிறது.

2. புதியவர்களின் கவிதைகள் தரமாக மிகவும் மகிழ்ச்சிக்குரியதாக இருக்கின்றன. அவர்களின் பார்வையும் வெளிப்பாட்டு முறையும் அநுபவங்களும் புதியனவாகவுள்ளன. ஈழத்திலக்கியத்தில் தொடர்ந்தும் கவிதைதான் முன்பாத்திரமாக நிற்கப் போகிறது என நினைக்கிறேன்.

3. பள்ளிக்கூடம் போகாத பிள்ளைகள் வீட்டில் குழப்படி செய்கின்றன. பள்ளிக்கூடம் – மூடப்பட்டுள்ளதால் படிப்பும் வாழ்க்கையும் இப்படிச் சீரழிகிறது என்று துக்கமாயிருக்கு. அரசின் சமாதானத்துக்கான போரின் அடையாளத்தை இந்தப் பள்ளிக்கூடங்களில் காணலாம்.

4. கடந்தவாரம் மனோகருடையதும் ரவியினதும் திருமணங்கள் நடந்தன. ஒன்று மிக அடக்கமாக போர்க்கால திருமணமாக இருந்தது. மற்றது காலப்பிரக்ஞையை மறந்திருந்தது.

5. எங்களுடன் இடம்பெயர்ந்து வந்திருந்த எங்களூர்வாசி யோகன், இரண்டு நாள் அடையாளங் காணப்படாத நோயால் திடீர் மரணமாகிவிட்டான். முப்பது வயது. திருமணமாகி ஆறுவருடங்கள். இரண்டு பிள்ளைகளும் தாயும் ஆறுதலற்றுத் தவிக்கிறார்கள். இன்னும் புரியாதபுதிர், யோகனுக்கு என்ன வருத்தம் வந்தது என்பதுதான்.

6. தமிழ்ச்சினிமா [தமிழக] மீதான ஆர்வம் வெகுவாகக் குறைந்து வருகிறது. எங்கும் இரண்டு மூன்று நாட்களுக்கு மேல் ஒரு படம் ஓடுவதில்லை. எல்லாம் ஒரேமாதிரியான படங்களாக அவை தொடர்ந்தும் இருக்கின்றன என்று பார்ப்பவர்கள் சொல்கிறார்கள். மாறாத கதை அமைப்பு, காட்சிகள், பண்பு என்பன இப்படிச் சலிப்படைய வைத்திருக்கலாம். இது ஓரளவுக்கு ஆறுதலளிக்கும் விடயம். நல்லவற்றைத் தேர்வதின் ஒரு ஆரம்பமாக இதைக் கொள்ளமுடிகிறது.

சரி நண்ப, மிக நீண்டதாக இந்தக் கடிதத்தை எழுதிவிட்டேன். உங்கள் சுகத்தையும் செய்திகளையும் தெரியப்படுத்துங்கள். நமது சுகத்தையும் நண்பர்களுக்குத் தெரிவியுங்கள்.

நன்றி.

அன்புடன்
விதுல்ஜன்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஜெனிவாவில் தமிழர் குரல்

ஜெனிவாவில் அமைந்துள்ள ஐ. நா சபையின் மனித உரிமைகளுக்கான உப ஆணைக்குழுவின் 49-வது தொடர் ஆகஸ்ட் 4 தொடக்கம் ஆகஸ்ட் 29 வரை நடைபெற்றது.

இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் மீதான சிறீலங்காவின் பயங்கரவாதத்தை இத்தொடர்பில் முக்கிய அங்கம் ஆக்குவதற்கு உலகின் பல பாகங்களிலுமுள்ள மனித உரிமை முன்னேற்பாளர்கள் தங்கள் தங்கள் அரச சார்



பற்ற ஸ்தாபனங்கள் மூலம் முன்னேற்பாடுகளை செய்து இருந்தார்கள்.

இவ் 49-வது தொடர் தொடங்கிய முதல் வாரம் அரச சார்பற்ற ஸ்தாபனங்களான "வடக்கு-தெற்கு XXI" மூலம் செல்வி டியற்றி மக்கோணலும் சர்வதேச கல்வி அபிவிருத்தி நிறுவனம் மூலம் திரு. கிருபாகரன், பக்ஸ் கிறிஸ்ரி என்ற நிறுவனம் மூலம் திரு ஜாக் விக்ரோரி, மக்கள் உரிமை விடுதலைக்கான சர்வதேச அமைப்பு மூலம் வெறினா கிராப் ஆகியோர் சிறீலங்காவின் மனித உரிமை மீறல்களை கடுமையாகக் கண்டித்து அறிக்கைகளை வாசித்தார்கள். சிறீலங்கா அரசை சர்வதேச போர் வழக்காடுமன்றம் முன் நிறுத்தி விசாரிக்கப்பட வேண்டும் என்றும், தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பட்டினி சாவிலிருந்து பாலியல் வன்முறை, காணாமல் போதல் போன்ற மனித உரிமை மீறல்களை வரிசைப்படுத்தி ஆதாரங்களுடன் எடுத்து கூறினார்கள்.

அரச சார்பற்ற ஸ்தாபனங்களின் வரிசையான கண்டனங்களுக்கு முகம் கொடுக்க முடியாது சிறீலங்கா அரச பிரதிநிதிகள் தடுமாறினார்கள். நிலைமைகளை சமாளிப்பதற்கென கொழும்பு வெளிநாட்டு அமைச்சில் இருந்தும் அமெரிக்காவிலுள்ள சிறீலங்கா தூதுவராலயத்திலிருந்தும் விஷேட பிரதிநிதிகள் சிறீலங்கா அரசினால் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

ஆகஸ்ட் 11-ம் திகதி சுவிஸ் தமிழ்ச் சங்கங்களின் சம்மேளத்தினால் ஜெனிவா நகரில் ஓர் மாபெரும் ஊர்வலமும், பத்திரிகையாளர் மாநாடும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

காலை 10.00 மணிக்கு நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அமெரிக்க சர்வதேச சட்டத்தரணி கரன் பார்க்கர், திரு. ஜேம்ஸ்கரன், திரு அஜீத் ரூபசிங்கா, வணபிதா டாக்டர் டானியல் தியாகராஜா ஆகியோர் கலந்து கொண்டு பத்திரிகையாளருக்கு தகுந்த விளக்கங்களை கொடுத்து, சிறீலங்காவினால் மூடி மறைக்கப்பட்டுள்ள மனித உரிமை மீறல்களை வெளி உலகுக்கு கொண்டு வந்தார்கள். இப்பத்திரிகையாளர் மாநாட்டில் கொழும்பில் இருந்து வருகை தந்த பிரபல இராணுவ ஆய்வாளரான "தாராகி" எனப்படும் திரு. சிவராமும் கலந்து கொண்டார்.

ஜெனிவா ஊர்வலத்தில் கலந்து கொள்ளவென சுவிஸ் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் விஷேட புகையிரதங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. ஊர்வலம் ஜெனிவா புகையிரத நிலையத்தின் முன்பு இருந்து பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4.15 மணிக்கு ஐ.நா முன்றலை வந்தடைந்தது. இவ் ஊர்வலத்தில் கலந்துகொண்ட மக்கள் "எங்கள் தலைவர் பிரபாகரன்", "சிங்கள இராணுவமே தமிழீழத்தை விட்டு வெளியேறு", "எங்கள் நாடு தமிழீழம்", "சர்வதேச சமூகமே தமிழீழத்தை அங்கீகரி" போன்ற பல கோஷங்களை எழுப்பினார்கள்.

இவ் ஊர்வலம் ஐ. நா முன்றலை வந்தடைந்ததும் "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்ற பாடலுடன் கூட்டம் ஆரம்பமாகியது.

இக்கூட்டத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பணியகப் பிரதிநிதி திரு. நடராஜா முரளிதரன், சிறீலங்காவிலிருந்து வருகை தந்த தேசிய சமாதான கவுன்சில் பிரதிநிதி திரு. அஜித் ரூபசிங்கா, வணபிதா டாக்டர் டானியல் தியாகராஜா, சட்டத்தரணி கரன் பாக்கர், திரு ஜேம்ஸ்கரன், செல்வி மான் ஆகியோர் உரையாற்றினார்கள்.

திரு. அஜித் ரூபசிங்கா தமது உரையில், 'தமிழ் மக்களின் போராட்டத்தை விபரமாக தனது சிங்கள மக்களுக்கு






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



தான் எடுத்துரைப்பதாகவும் வெற்றி நிச்சயம் கிடைக்கும்' என்று கூறி பேச்சை முடித்து கொண்டார்.

இதேவேளை 49–வது மனித உரிமை கூட்டத்தொடரின் தலைவர் திரு. பேன்சுவா யோசேயிடம் தமிழ் மக்கள் மீதான சிறீலங்கா அரச பயங்கரவாதம் பற்றிய கண்டன மனுவும் சமர்ப்பிக்கப்பட்டது. இச் சந்திப்பில் திரு ஜேம்ஸ் கரன் (தலைவர் சர்வதேச தமிழர் சம்மேளனம்), திரு. விசுவலிங்கம் கிருபாகரன் (பொதுச் செயலாளர், தமிழர் மனித உரிமைகள் மையம்), வணபிதா டாக்டர் டானியல் தியாகராஜா, திரு அஜித் ரூபசிங்கா, திரு பொன்னுத்துரை கெங்காதரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறீலங்காவின் அரச பயங்கரவாதத்தை 49–வது தொடரில் கண்டிக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

இரண்டாவது வாரம் நடைபெற்ற கூட்டத் தொடரில் சர்வதேச கல்வி அபிவிருத்தி நிறுவனம் சார்பில் சட்டத்தரணி கரன்பாக்கர், பக்ஸ் ரோமான் சார்பில் திரு. யோன் மரியாநுடா ஆகியோர் தமிழ் மக்களின் நிலைமைகளை எடுத்துரைத்தார்கள். அத்துடன் 49–வது கூட்டத் தொடர் இதற்கு ஓர் பரிகாரம் காணவேண்டும் என வலியுறுத்தினார்கள்.

இவ் 49–வது தொடரில் அங்கம் வகிக்கும் 26 வேறுபட்ட நாட்டை சேர்ந்த சட்ட நிபுணர்கள் இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்களின் தற்போதைய நிலைக்கு காரணமாக உள்ள சிறீலங்கா அரசு மீது ஓர் கண்டனத்தை கொண்டுவர தயார் ஆனார்கள்.

இக்கண்டனத்தை பிரான்ஸ் நாட்டு சட்ட நிபுணர், நோர்வே அமெரிக்கா மற்றும் பலரின் உதவியுடன் தயாரித்தார். இக் கண்டனத்தை ஆதரித்து வாக்களிக்க பெரும் தொகையான சட்ட நிபுணர்கள் சம்மதித்து இருந்தார்கள். ஆனால் கியூபா நாட்டு சட்ட நிபுணரினால் முன்னெடுக்கப்பட்ட ஓர் சட்ட விதிமுறையின்படி இக் கண்டனம் சபையில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இது பற்றி சட்ட நிபுணரிடையே ஏற்பட்ட ஓர் காரசாரமான விவாதத்தை ஏறத்தாழ 30 நிமிடங்கள் சபையில் இருந்த அரச பிரதிநிதிகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் கேட்கக்கூடியதாக இருந்தது.

பிரான்ஸ், நோர்வே நாட்டு சட்ட நிபுணர்கள் தொடர்ந்து வந்த தமது விவாதங்களில் சிறீலங்காவில் உடனடியாக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் – மக்கள் இடம்பெயர்வதை உடன் நிறுத்த வேண்டும் – சிறீலங்காவில் உள்ள தற்போதைய நிலைமைகளை மனித உரிமை அடிப்படையில் பார்க்க தவறுபவர்கள் மனிதத்தன்மை அடிப்படையில் பார்க்க வேண்டும் என்று கூறினார்கள்.

இத் தொடர் நடக்கும் வேளை சட்டத்தரணி கரன்பாக்கர் தலைமையில் கூட்டப்பட்ட அரச சார்பற்ற ஸ்தாபனங்களுக்கான கூட்டத்தில் கனடாவில் இருந்து வருகை தந்திருந்த மனித உரிமை சட்டத்தரணி திரு. பிரான்சிஸ் சேவியர், திரு ஜேம்ஸ்கரன், செல்வி டியற்றி மக்கோனல் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கடந்த ஆறு மாதங்களாக தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்களை தொகுத்து ஆதாரங்களுடன் ஓர் அறிக்கையை பிரான்சில் தலைமையகத்தைக் கொண்ட தமிழர் மனித உரிமை மையம் வெளியிட்டிருந்தது.

இக்கூட்டத்தொடரில் கலந்து கொண்ட தமிழ் பிரதிநிதிகள் ஐ.நா. மனித உரிமை மையத்தின் முக்கிய புள்ளிகளை சந்தித்து இலங்கைத்தீவின் வடகிழக்கில், விசேடமாக வன்னி நிலைமைகளை எடுத்துரைத்தார்.

இவ் 49–வது தொடரில் திரு. அன்ரன் பொன்ராசா, செல்வி சுஜிவ் துரைராசா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

— கிருபா





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# புலம் பெயர்தலும் வாழ்வும்

புலம் பெயர்தல் என்பது வெறுமனே ஒரு பௌதீக விடயமல்ல. தன் இருப்பை உறவை— சமூகக் கலாச்சார பொருளாதார வாழ்வை விட்டு அன்னியப்பட்டு புதியதொரு சமூகக் கலாச்சார பொருளாதார அமைவினுள் உட்செல்லல் என்பது தனித்த ஒரு பௌதீக விடயமாக இருக்கவும் முடியாது. மாறாக பிரக்ஞை பூர்வமான தாக்கங்களும் வாழ்வியல் ரீதியான பாதிப்புக்களும் நிறைந்த ஒரு துன்பியல் நிகழ்வாகவே கருதப்பட முடியும்.

புலம்பெயர்தல் என்பது புறக் காரணிகளால் தூண்டப்பட்ட ஒரு வாழ்வியல் நடவடிக்கை. அந்தப் புறக்காரணி பொருளாதார சமூக விடயங்களாகவோ அல்லது நசுக்கப்பட்ட போராடும் மக்கள் சமூகத்தில் தவிர்க்க முடியாத நடவடிக்கைகளாகவோ இருப்பினும், மனித சமூகத்தின் அகவியல் விருப்பு, வெறுப்புக்கள் இந் நடவடிக்கைத் தீர்மானிப்பில் ஒரு பாத்திரம் வகிக்கவே செய்கின்றது. இந்த அகத்தேர்வுக்கான காரணம் எதுவாக இருப்பினும் அவற்றின் அடியோடும் மூலமான பிரச்சினை மனித குலத்தின் 'தப்பி உயிர் வாழும்' உணர்வே ஆகும். இங்கு தப்பி உயிர்வாழ்தல் என்பது பிழையான அல்லது வேடிக்கையான உணர்வல்ல. இது ஒரு இயல்பான உயிரியல் செயல்பாடு. இங்கே தப்பி ஓடவைக்கும் புறக்காரணிகளே மனிதனை தப்பி பிழைக்கும் நடவடிக்கைக்கு தூண்டுகின்றது. இவ்வாறு தப்பிப் பிழைக்கும் மனிதன் தனது நிகழ்கால வாழ்வில் இதன் தாக்கத்தை அகத்தேயும் புறத்தேயும் வெளிப்படுத்துவான். அதாவது, தமது புதிய வாழ்வியல் அமைப்பில் கடந்த காலத்தின் பாதிப்பு, அது தோற்றுவித்த உணரப்படமுடியாத வெறுமை அல்லது பிற பகுத்தறிய முடியாத உணர்வுகளின் பிடியில் செயல்படுவான். இதன் தாக்கம் அப் புலம்பெயர்ந்து வாழும் தலைமுறையையும் அதனது தொடர்ச்சிகளையும் பாதிக்கும் என்பது ஒரு பரிணாமம் பெற்ற சமூகவியல் கோட்பாடாகும்.

எமது தமிழீழ மக்களின் புலம் பெயர்தல் நடவடிக்கை அடிப்படையில் தப்பி உயிர்வாழுதல் என்ற சாதாரண உயிரியல் செயற்பாடாகவே இடம்பெறுகின்றது. அரச பயங்கரவாதம் — அது தோற்றுவித்த அச்சம் என்பன சாதாரண தமிழனை புலம் பெயரத் தூண்டுகின்றது. புலம் பெயர்ந்து வாழும் சகல தமிழீழ மக்களும் இவ் உயிர் வாழ்வதற்கான காரணிகளால் தூண்டப்பட்டவர்களே.

நேரடிப் பார்வையில் அகதிகளாக 1980 தொட்டு இன்றுவரை புலம் பெயர்ந்த மக்களை அரச பயங்கரவாதத்தின் நேரடித் தாக்குதல்களினால் தூண்டப்பட்டவர்கள் எனவும் அதற்கு முற்பட்ட காலத்து புலம் பெயர்ந்த சமூகத்தினரை பொருளாதாரக் காரணிகளை கொண்டவர்கள் என்றும் வகைப் படுத்தலாம். சமகால நிலைமையை அகத்தேயும் புறத்தேயும் பகுத்து ஆராய்கையில் பிற காரணிகளால் புலம் பெயர்ந்தோர் 80–களுக்கு முற்பட்ட காலத்து பொருளாதாரக் கலாச்சார புறக்கணிப்புகளில் தாக்கத்தை உள்வாங்கியவர்கள் என்பதும், அதன் பிற்பாடு புலம்பெயர்ந்த மண்ணில் வேர் விடும் நடவடிக்கைக்கு அரச பயங்கரவாதத்தினால் தூண்டப்பட்டவர்கள் என்பதும் புலப்படுத்தப்படுகின்றது.

புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ சமூகத்தினரின் இன்றைய சமூக கலாச்சார பொருளாதார வாழ்வு பற்றிய ஆய்வானது மேற்கூறிய அனுமானத்தைக் கவனத்திற் கொண்டே அமைக்கப்படவேண்டும். ஏனெனில்,

அ. எமது சமூகத்தின் வாழ்வியல் நடவடிக்கைகள் சொந்த மண்ணின் சமகாலத்து விடயங்களின் பாதிப்புக்களைக் கொண்டது. இதற்குப் பொருளாதாரக் காரணிகளால் இடம்பெயர்ந்தோர் — அரச பயங்கரவாதம் காரணமாக இடம்பெயர்ந்தோர் என்ற வேறுபாடு கிடையாது.

ஆ. புலம்பெயர்தலின் பாதிப்புக்களே [மனோவியல் தாக்கங்கள், கலாச்சார முரண்பாடுகள், இதனால் ஏற்படும் முரண்பட்ட உணர்வுகள்] அதன் செயற்பாட்டைத் தீர்மானிக்கின்றன.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இ. எதிர்காலத்துத் தலைமுறையின் மீதான பண்பாட்டு வாழ்வியல் பாதிப்புக்கள் நாம் குறிப்பிட்ட எடுகோளைப் பற்றியதாகவே உருவாகி வரும் நிலைமைகளின் சாத்தியங்கள்.

★★★

புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் நாளாந்த வாழ்வு பல முரண்பட்ட காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றது. பிரான்ஸில் வாழும் ஒருவர் தன்னைச் சுற்றி கட்டியெழுப்பும் வேலிக்கும் — தட்டி நிரவும் முற்றத்திற்கும் இடையே பலவித முரண்பாடுகளை கொண்டிருப்பார். இங்கே பொருளாதார வாழ்வு என்பது புதிதாக தான் வேரூன்ற நினைக்கும் அல்லது தங்கியிருக்க நினைக்கும் தேசத்தினால் தரப்படும் சலுகைகள், விதிமுறைகள் சார்ந்த வாழ்வே ஆகும். ஏனெனில் தமிழர்கள் என அடையாளம் இடத்தக்க ஒரு பொருளாதார வாழ்வு புலம் பெயர்ந்த இடங்களில் கட்டியெழுப்பப்படக் கூடிய சாத்தியக்கூறுகள் அண்மிய காலத்தில் இல்லை.

இந்த நாளாந்த வாழ்வு முறைகள் வேறுபட்டிருப்பினும் புலம் பெயர்ந்த தமிழீழ மக்கள் மத்தியில் பல்வேறு பண்பாட்டியல் ஒருமைப்பாடுகளை இனங்காணக் கூடியதாக உள்ளது.

இதில் முதன்மையானது, சமகாலத்து மண்ணின் நிலைமை அவர்கள் மத்தியில் தோற்றுவித்துள்ள கரிசனை — அது பற்றி எழும் நியாயபூர்வமான கோபம் — கூட்டு எதிர்காலம் தொடர்பான மானசீகப் பிரார்த்தனை — நம்பிக்கை என்பவற்றை இத்தகைய பண்பாட்டியல் ஒருமைப்பாடு எனக்கூறலாம். இவ் ஒருமைப்பாட்டின் பிரதான அடையாளம் அல்லது குறியீடு விடுதலைத் தாகம் — தமிழீழ விடுதலைப் புலிகள் — அது சார்ந்த அரசியல் கலாச்சார எழுச்சி என வகைப்படுத்தலாம்.

இவ் அடிப்படையில் ஒருவித பண்பாட்டியல் பிணைப்பு உருவாக்கப்பட்டு வருகின்றது. புலம் பெயர்ந்து வாழும் தமிழர் சமூகத்தின் பிரதான கலாச்சார மெருகும் உருவாக்கமும், தமிழீழம் சார்ந்த, புலிகள் சார்ந்த, விடுதலை உணர்வு சார்ந்த கோட்பாடுகளால் வழிநடத்தப்படுகின்றது.

புலம்பெயர்ந்து வாழும் இடங்களில் உருவாக்கப்பட்ட — உருவாகி வரும் இலக்கியப் படைப்புக்களின் மூலக்கருத்துக்களை எடுத்து ஆராயின் இம் மக்களை நகர்த்தும் பிரதான கோட்பாட்டு சக்தி மேல் விபரிக்கப்பட்ட விடயங்களே என்பது வெளிப்படையாகின்றது.

ஜேர்மனியில் 'தமிழாலயம்', பிரான்ஸில் உருவாகி வரும் 'தமிழ் சோலை' ஆகிய ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட கல்வி அமைப்புக்கள் சமகாலத்து ஆரோக்கியமான கோட்பாட்டைப் பின்பற்றி எதிர்காலத்து தலைமுறையை வடிவமைக்கும் சமூகப் பணியையும் சமூகப் பொறுப்பையும் புரிகின்றன.

**இங்கே பொருளாதார வாழ்வு என்பது புதிதாகத் தான் வேரூன்ற நினைக்கும் அல்லது தங்கியிருக்க நினைக்கும் தேசத்தினால் தரப்படும் சலுகைகள், விதிமுறைகள் சார்ந்த வாழ்வே ஆகும்.**



இக் கல்வி நிறுவனங்கள் சாதாரண வாழ்விட விடயங்களை மையப்படுத்தாது எதிர் காலம் நோக்கிய பார்வையைக் கொண்டிருப்பது அவதானிக்கத்தக்கது. குறிப்பாக ஜேர்மனியில் தமிழாலயம், மொழிப்பயிற்சி அது சார்ந்த பல கலை, பண்பாட்டு விடயங்கள் மற்றும் வரலாறு என்பவற்றை இளந் தலைமுறைக்குப் போதிப்பது அத்தலைமுறையை பண்படுத்துவதற்கு உதவுகின்றது. இது இன்றைய மேற்கத்தைய அல்லது புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் கலாச்சார முரண்பாட்டிற்கும் அழுத்தங்களுக்கும் முகம் கொடுக்கும். எமது இளைய தலைமுறையின் சமுதாயப் பார்வையை கோட்பாட்டு மதிப்புக் கொண்ட சாளரங்கள் ஊடாக சுவாசிக்க வைக்கப்படுகின்றது.

இது புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் இடம்பெறும் ஆக்கபூர்வமான நிகழ்வாகும்.

மேலும், புலம்பெயர்ந்து வாழும் மக்களின் சமூகக் கலாச்சாரப் பிணைப்பை கட்டியெழுப்பும், அடையாளப்படுத்தும் குறியீடுகளாக வர்த்தக மையங்கள் கோவில்கள், தேவாலயப் பிரார்த்தனைகள், விளையாட்டுப் போட்டிகள், தாம் வாழும் பிரதேசம் சார்ந்த அமைப்புக்கள் அதனது மரபு ரீதியான செயற்பாடுகள் என்பன திகழ்கின்றன.

இச் சாத்தியமான பிணைப்புப் பாலத்தின் மறுபுறத்தே எமது சமுதாயத்தைப் பீடித்திருந்த சிய கயமைத்தனங்களும் தொடர்கின்றன.

பெண் அடிமைத்தன நில பிரபுத்துவ எச்சசொச்சக் கோட்பாடான சீதனம், மனித நாகரீகம் வெட்கித் தலைகுனியும் கொடிய சாதிய எண்ணங்கள் என்பனவற்றை இதற்கான உதாரணங்களாகக் கொள்ளலாம்.

இன்று அனைத்து மனிதர்களது கண்முன்னும் சீதனம் தொடர்பாக 'பேச்சுவார்த்தைகள்' நடக்கின்றன. பொருளாதார வளர்ச்சி அடைந்த நாடுகளில் 'விபத்தாய்' கால் பதித்த ஒரு மனிதன் தன்சக மனிதனால் 'நிறுத்து நிர்ணயிக்கப்படும்' சமுதாய சாபக்கேடு தொடர்வது ஆரோக்கிய மற்ற செயற்பாடாகும்.

இதுபோன்றதே சாதியப் பார்வையும்; அதுபற்றி எழமுயலும் கலாச்சார தனிமைப்படுத்தல்களும் ஆகும். நாளாந்த வாழ்வில் இக் கோட்பாடு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

உடைக்கப்பட்டு வருகின்றதாயினும் சமூக வாழ்வின் முக்கிய நடவடிக்கைகளில் இது இன்னமும் உயிர்வாழ்வது அவதானிக்கப்படுகின்றது. குறிப்பாக திருமண உறவுகளை தீர்மானிக்கும் சந்தர்ப்பங்களில் இச் சமுதாய சாபக் கேடுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. மேலும், பொருளாதாரம், முதலீடு என்பன பற்றிய குறுகிய பார்வை சார்ந்து எமது நாளாந்த பொருளாதார நடவடிக்கைகளில் குறைபாடுகளும் பழைமைவாதமும் தென்படுவது கவனிக்கத்தக்கது.

ஆயினும், பிரதானமாக எதிர்காலத்தைப் பாதிக்கும் முக்கிய விடயம் எமது இளந் தலைமுறை எதிர்கொள்ளும் கலாச்சார முரண்பாட்டுத் தாக்கங்களும் அதன்பால் எழும் சீரழிவுக்கான அறிகுறிகளுமாகும்.

கலாச்சார முரண்பாடு என்பது, வீட்டிலும் வெளியிலும் இளந்தலைமுறை எதிர்கொள்ளும் நேரெதிரான பண்பாட்டு முறைகள் ஆகும். இம் முரண்பாட்டைப் புரிந்து கொண்டு பிள்ளைகளை வழிநடாத்தும் புத்திசாதுரியம் புலம்பெயர்ந்த மூத்த தலைமுறையினரிடம் குறிப்பிடத்தக்க அளவு காணப்படவில்லை. இதனால், இம் முரண்பாட்டுக்குள் தவிக்கும் இளந் தலைமுறை தமது எதிர்காலத்தை சூழல் சார்ந்த விருப்பு வெறுப்புகளின் பால்பட்டு தீர்மானிக்க முயல்கையில் அங்கு சீரழிவுக்கான பாதை திறக்கப் படுகின்றது. எம் இளந்தலைமுறை தமது விருப்பு வெறுப்புக்களைத் தீர்மானிப்பது அல்லது தீர்மானிக்க எத்தனிப்பது கோட்பாடு ரீதியாகவும் விஞ்ஞான பூர்வமாகவும் சரியானதாயினும் முரண்பட்ட சூழ்நிலையில் முரண்பாடுகளின்



**முரண்பாட்டுக்குள் தவிக்கும் இளந்தலைமுறை தமது எதிர்காலத்தை சூழல் சார்ந்த விருப்பு வெறுப்புகளின்பால்பட்டு தீர்மானிக்க முயல்கையில் அங்கு சீரழிவுக்கான பாதை திறக்கப்படுகின்றது.**

அழுத்தங்களின் மத்தியில் இவ்வாறான விடயத்தைக் கையாளும் பக்குவத்தை எம் இளந்தலைமுறை பெற்றிருப்பது சாத்தியமானதல்ல. இங்கே இதற்கான அகப்புற சூழ்நிலையைத் தோற்றுவிப்பது சமூகம் சார்ந்த விடயமாகும்.

இவ்வாறான சிக்கலான தோற்றத்தின் வெளிப்பாடுகளே இன்று எம் கண்முன் இடம்பெறும் வன்முறையோடு கூடிய ஒரு சிறுபகுதி இளந் தலைமுறை ஆகும். இவ் சிறுபான்மை தலைமுறையிடம் சமுதாயப் பார்வை என்பது அன்னியப்பட்ட விடயமாகியுள்ளது. எந்த ஒரு சமுதாயக் கோட்பாடுகளுக்கும் மதிப்புக் கொடுக்கப்பட வேண்டிய தேவை அதற்கில்லை. அவர்கள் மரபு ரீதியான சமுதாயப் பழக்க வழக்கங்களை அறியாதவர்கள். தமது தாய் மண்ணில் இடம்பெறும் விடுதலைப் போர் பற்றிய அறிவோ அதனூடாக உருவாக வேண்டிய விடுதலைத் தாகமோ அற்றவர்கள். அவர்களது செயற்பாட்டுப் பரப்பு குறுகியதும் விரிவதற்கான இலகுதன்மையற்றதாகும்.

இக்குறைபாடுகள் புலம் பெயர்ந்து வாழும் எம் சமுதாயத்தில் வளர்ச்சியடையும் ஆபத்தை கொண்டுள்ளது. வீட்டுக்கும் வெளிக்கும் உள்ள வேறுபாடுகள், 'முறிவடைந்த' ஒரு தலைமுறை உருவாகும் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. இதற்கான தீர்வைப் பற்றி சிந்திப்பதும் செயற்படுவதும் எம் அனைவர் முன்னும் உள்ள பணியாகும்.

கோட்பாடு ரீதியாக சமூகப் பொறுப்புணர்வை அத்தலைமுறைக்கு வழங்குவது என்பது விஞ்ஞானபூர்வமானது. ஆயினும் நடைமுறை ரீதியில் இச்சமூகப் பொறுப்புணர்வு எவ்வாறு ஊட்டப்படவேண்டும் என்பது ஆய்வுக்குரியவை. புலம்பெயர்ந்து வாழும் சமுதாயம் இந் நடைமுறை சிக்கலைத் தீர்ப்பதற்கு முயலவேண்டும். 'தமிழாலயமும்', 'தமிழ்ச்சோலையும்' இக்கனத்தின் ஒரு பகுதியைச் சுமந்தாலும் தம் நாளாந்த வாழ்வூடாக இளைய தலைமுறை வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

— நாதன்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# அழகான நியாயங்கள்

"மேலும் என்னைப் போன்ற ஒருவனுடன் பேசுவதில் எந்தவித அர்த்தமும் இல்லை என நீ நினைக்கிறாய், அப்படித்தானே? அதனால் தான் என்னிடம் இருந்து தூர விலகிப்போயுள்ளாயா?"

........ ....... ....... ....... .....

"என்னைப் பார்த்தால் புத்தியற்ற காட்டுமிராண்டி போலவோ அல்லது வேறெதுவும் போலவோ வெளிப்படையாகவே தெரிகிறதா?"

........ ....... ....... ....... .....

"எல்லாவற்றிற்கும் மேல் திருமணம் என்பது என்ன? ஓர் பிணைப்புத்தானே. மேலோட்டமாகப் பார்க்கும்போது அதில் எத்தனையோ சிறுசிறு பிளவுகள் இருக்கும்தான். நீ இந்தப் பாரதூரமான நடவடிக்கையை எடுத்ததற்கு, ஏதாவது சரியான காரணம் உன்னிடமிருக்கிறதா? நான் குறிப்பிடுவது நீ எடுத்துள்ள முடிவுபற்றி.."

........ ....... ....... ....... .....

"ஆனால் நான் உன்னை மிகவும் தெளிவாக அறிந்துகொண்டுள்ளேன். உன்னுடைய அபிலாசைகளையும், கருத்துக்களையும், குறிக்கோள்களையும் ஏன் ஒட்டுமொத்தமாக எல்லாவற்றையும் புரிந்துகொண்டவன்."

........ ....... ....... ....... .....

"இங்கே பார்! தயவு செய்து எனது பிழைகளை மன்னித்துவிடு. உன்னால் அது முடியாதா? மன்னித்துவிடு"

........ ....... ....... ....... .....

"சரியாக ஒருமுறை சிந்தித்துப் பார். முனைந்து சிந்தி, நான் இந்த விவாகரத்துக்குச் சம்மதித்தாலும் கூட, இவ்வளவு கால இல்வாழ்க்கைக்குப் பின், அதனால் நீ எதைத்தான் அடையப் போகிறாய்?"

........ ....... ....... ....... .....

"சேர், உங்களுக்கு ஏதாவது கொண்டு வரவா? ஒருவேளை 'கட்லெட்'டை விரும்புவீர்களோ என்னவோ? அத்துடன் இன்னொரு குடுவை கோப்பி?"

"என்ன?"

"சேர் உங்களுக்கு கோப்பியும் அதனுடன் சாப்பிடுவதற்கு வேறு ஏதாவது கொண்டு வரலாம் என எண்ணினேன்."

"நான்தான் ஏற்கனவே சாப்பிட்டு விட்டேனே" எனக் கூறியபடி கீழே பார்வையைச் செலுத்தி மேசையில் இருந்த தட்டை நோக்கினான். அதில், அவன் தீராப்பசியில் இருந்தவன் போல் சாப்பிட்டுவிட்டு மீதம் விட்ட சில தோசைத் துகள்கள் இருந்தன. அவன் தலையை நிமிர்த்தி, "சரி பிங்கர் சிப்ஸும் ஒரு தட்டு மரக்கறிக் கட்லெட்டும் கொண்டு வா" என்றான். "அத்துடன் ஒரு குடுவை சூடான கோப்பியும்"

"மிகவும் நல்லது சேர். ஒரு நொடியில் கொண்டு வருகிறேன்" எனக்கூறியபடி, உபயோகித்த தட்டுக்களை எடுத்துக் கொண்டு செல்லும் பணியாளின் உருவம் மறைவதை சிறிது நேரம் பார்த்தபடி இருந்தான்.

பின்பு தனது பையிலிருந்த சிகரெட் பெட்டியை எடுத்து ஒரு சிகரட்டைப் பற்றவைத்தான். புகையை வெளியே விட்டபடி சிறிதுநேரம் வாழாவிருந்தான். நாற்காலியில் அமர்ந்தபடியே சிறிது முன் வந்து தலையைச் சரித்து மெல்லிய தொனியில் மீண்டும் பேச ஆரம்பித்தான்.

"நீ உனது விருப்பப்படி எதனைச் செய்யவும், வேலைக்குப் போகும் பெண்ணாக இருப்பதற்கும் உனது சம்பளத்தை நீயே வைத்திருப்பதற்கும், நினைத்தபடி உடுப்பதற்கும், உன்னுடைய நண்பர்களுடன் அலட்சியமாக அலைந்து திரிவதற்குமான முழுச் சுதந்திரத்தையும் தந்திருந்தேன்..."

........ ....... ....... ....... .....

"இதற்கு மேல் உனக்கு என்ன தர வேண்டும்" என அவன் சிரித்தபடி கூறினான்.

.........................................

ஆங்கிலம் மூலம்: லக்சுமி கண்ணன்
தமிழில்: சு. மகேந்திரன்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

'ம். அப்படி இருக்கும்போது விவாகரத்திற்கான சிந்தனை ஏன்தான் வர வேண்டும்?" என அவன் மிருதுவாகக் கேட்டான்.

........ ....... ....... ....... .....

"இவை எல்லாம். தேவையற்றவை. நாங்கள் முன்பு போல் தொடர்ந்து இருக்கலாம். நீ என்ன சொல்கிறாய்?"

........ ....... ....... ....... .....

"அமைதியாக திரும்பவும் சிந்தித்துப் பார். அதனால் விஷயங்களை தெளிவாகப் பார்க்க முடியும்"

........ ....... ....... ....... .....

சிகரெட் முனை புகைவிட்டு எரிந்து கொண்டிருந்தது. அதனை உறிஞ்சி இழுத்துத் தனது உதடுகளால் புகையை வெளியே விட்டான். புகைமண்டலம் அவனது முகத்தை முழுமையாக மறைத்தது. புகைக்கு ஊடாக அவன் பார்த்த போது, மற்ற மேசைகளில் இருந்தவர்கள் தன்னை உற்று நோக்குவது தெரிந்தது. புகையின் நடுவே விம்பங்கள் தெளிவற்றுத் தெரிந்தன. அவை மங்கலாகத் தோன்றின.

அவள் அவனை ஒரே பார்வையாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். கண்கள் கலக்கமடைந்திருக்கவில்லை. அவன் அவளை பலமாக அடித்தபோதெல்லாம் கூட, அவளது கண்களிலிருந்து கண்ணீரை வரவழைக்க முடிந்ததில்லை. பேச்சு எதுவுமின்றி அந்தக் கூர்மையான கண்கள், அவனை ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருக்கும். சீ! இவளும் ஒரு பெண்தானா? எப்படி இவள் பெண்மையின் இயல்பான அழுகையால் அரவணைக்கப்படாமல் இருக்கிறாள்? அவள் என்னை இன்னும் சிறிது கோபமூட்டவே இப்படிச் செய்கிறாள் போலும். அவள் அவனைத் திருப்பி அடித்திருந்தால், தாமதமின்றி சரிபாதிப் பிழையை அவள் மேல் போட்டிருக்கலாம். குரூரமாக அவளை அடிக்கும் போதெல்லாம், அவள் வெறுமனே அவனது கைகளைத் தள்ளி விடுவாள். அதில் ஒரு வலுவான பலம் தெரியும். அவளது கண்களில், இவற்றிற்கும் தனக்கும் சம்பந்தமே இல்லை என்று சொல்லும், சிரிப்புடன் கூடிய உணர்வு அடிக்கடி படியும். வெறுக்கத்தக்கவனே போய் விடு என அந்நியமான அக்கண்கள் கூறும். அவனைத் தனது பார்வையிலிருந்து விலகச் சொல்லும் அக்கண்கள், 'நீ என்னைச் சரியாக மட்டிடவில்லை' என்றன. அவன் இதனால் மிகவும் கோபமுற்றான். எப்படி இருப்பினும், பெண்ணான இவள் ஏன் பரிந்து பசி, என்னை ஏற்றுக் கொள்ளுங்கள் எனக் கூறக்கூடாது.

அப்படியான தன்மை எதுவும் அவளிடம் இருக்கவில்லை. அவள் தனது எதிர்காலம் பற்றி ஓர் நேர்த்தியான திட்டம் போட்டுவிட்டாள். சரியான யோசனையுடன் ஒவ்வோர் அம்சத்தையும் திட்டம் போட்டாள்.

தன்னை அணுக முடியாத தூர இடம் ஒன்றிற்கு நழுவினாள். தனது இருப்பிட வசதியை ஓர் விடுதியிலும், இடையில் விட்ட படிப்பை தொடர்வதற்கான ஏற்பாட்டையும் செய்து கொண்டாள். அவளது பெற்றோர் இந்த விவாகரத்திற்கான ஏற்பாட்டுக்கு உடனே ஒப்புக்கொண்டனர். அவளது வழக்கறிஞர், இந்த வழக்கை வெற்றியாக முடிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தார். எப்போதும் அவளைச் சூழ அவளது சகபாடிகளும் ஆதரவான உறவினர்களும் நண்பர்களுமிருந்தனர். அவளது இயல்பான நடத்தையிலிருந்து மாறாமல், மனவலிமையுடன் எல்லாக் கஷ்டங்களையும் எதிர்கொண்டவிதம் அவனது அமைதியைக் கலைத்தது. அவளது ஒவ்வொரு சொல்லும், செயலும், கூர்மையும் புத்திசாலித்தனமும் கொண்ட ஒரு நற்பண்பையே எடுத்துக் காட்டியது. அது அவனது மனவலிமையைக் குலைத்தது. அவளுக்கு இயல்பாகவே வாய்க்கப்பெற்றிருந்த பணிவை, எதற்காகவுமே பலியிடாமலும் அதிலிருந்து விலகாமலும் அவள் செயற்பட்டாள். அது, அவளது எலும்புகளை நொருக்கும்படி அவனது கைகளைத் துறுதுறுக்க வைத்தது.



நாசம் செய்து அவளை அடித்து நொருக்கவும் எண்ணினான். அவளை முடித்துவிடக்கூடத் துடித்தான். அவள் கொணர்ந்த சம்பளத்தை அப்படியே ஊதித்தள்ளினான். அதனை வெறுமனே விரயம் செய்தான். அவள் வீட்டிலிருந்த போதெல்லாம், முடிவின்றி வேலை கொடுத்து அவளது முதுகை ஒடித்தான்.

அவளது பெற்றோருடனும், சிநேகிதர்களுடனும் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டான். அவளுக்குத் தெரியாமல் அவளுக்கு வரும் கடிதங்களைக் கிழித்துப் போட்டான். அவனது மனநிலை மாறும் போதெல்லாம், அவள் செய்யும் எல்லாக் காரியங்களிலும் பிழை பிடிப்பான். அடியும் பேச்சும் விழும். இப்படி எல்லாம் செய்தும் என்ன அகந்தையான சுபாவம். இரண்டாவது முறையாகச் சிந்திக்காமல் தைரியத்துடன் சுறுசுறுப்பாக விவாகரத்திற்கான ஏற்பாடுகளில் முனைப்பாக ஈடுபட்டாளே....

"சேர்"

"ம்"

"சேர் ஒரு தட்டு கட்லெட்டும் பிங்கர் சிப்ஸ்சும் அத்துடன் ஒரு குடுவை கோப்பியும் உள்ளன. எல்லாம் சரியா?"

"ஓ"

கட்லெட்டைக் கத்தியால் வெட்டி, துண்டுகளை முள்ளுக் கரண்டியால் எடுத்துச் சாப்பிடத் தொடங்கினான்.

"நீ என்னை உனது எதிரியாகச் சிந்திக்கிறாயா? எங்களுக்கிடையே எது தான் நடந்தாலும், இப்போது நான் தான் உனது கணவன் நீ ஒரு முறையேனும் இதனை அமைதியாகச் சிந்தித்துப்பார்"

"நீ வளர்ச்சியடைய வேண்டுமென்றே உண்மையான உணர்வு என்னிடம் உள்ளது. உன்னுடைய துறையில் நீ முன்னேற வேண்டும், நல்ல மனிதர்களுடன் உறவுகளை விருத்தி செய்து கொள்ள வேண்டும் என்றும் நினைப்பவன் நான். அத்துடன் உனது முழுத் திறமையை நீ உணர்ந்து செயல்பட வேண்டும் என்றே எண்ணி வந்துள்ளேன். ஆனால் இயற்கையாகவே..."

"உன்னைச் சந்தோசமாக வைத்திருக்கவே விரும்புகிறேன். என்னிடம் இருந்து விலகி ஓடுவதால், எனக்கு ஒரு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சந்தர்ப்பம் தர மறுக்கிறாய்? இப்படியான ஒரு சூழ்நிலையில் நான் என்ன தான் செய்யமுடியும்?"

அவன் பிங்கர் சிப்ஸ்சை, தக்காளி சோசில் தோய்த்து வாயில் போட்டான். குடுவையிலிருந்து ஆவிபறக்கும் கோப்பியை, கோப்பையில் ஊற்றி உறுஞ்சினான்.

"தயவுசெய்து நான் சொல்வதை அவதானமாகக் கேள். இப்போதும்கூட ஒன்றும் நேரம் கடந்துவிடவில்லை. நீ ஒத்துழைத்தால் இச் சூழ்நிலையை மாற்ற முடியும். விவாகரத்திற்காக நீ நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் வழக்கைத் திரும்பிப் பெற்றுக்கொள். நீ என்ன தான் சொல்கிறாய்"

"எல்லாம் சரிதான், எல்லாத் தம்பதிகளுக்குள்ளும் நூற்றுக்கணக்கான முரண்பாடுகள் இருப்பதும், அவர்கள் பிரச்சினைகள் நிமிர்த்தம் சண்டையிடுவதும் சாதாரணமானதே. இவையே அவர்களின் உறவைப் புனிதமானதாக மாற்றுகிறது என்பதுதான் உண்மை. படித்த யுவதியான உன்னால் முன்பு நடந்த பிழைகளை பெருந்தன்மையுடன் மன்னிக்க முடியாதா? 'ஆ' கடைசியில் உனது முகத்தில் புன்னகை தெரிகிறதே. அப்படியாயின் நீ ஒத்துக் கொள்கிறாய்"

"சேர்"

"ஓ"

"வேறு ஏதாவது வேண்டுமா சேர்?"

"ஏய் நீ ஏன் இப்படித் தொந்தரவு பண்ணுகிறாய். நான் இப்போது ஏதாவது கொண்டுவரச் சொன்னேனா? இல்லையே"

"நீங்கள் சொல்லவில்லைத்தான். ஆனால் உங்கள் தட்டு வெறுமனே இருந்தது. அதனால்தான் கேட்டேன்"

"நான் தொடர்ந்து உணவை வரவழைத்துக் கொண்டிருப்பேன் என்று எண்ணிவிட்டாயா? நீ என்னை இந்தச் சிற்றூண்டிச்சாலையிலிருந்து வெளியேற்ற முனைகிறாயா?" என குரலை மாற்றிக் கேட்டான்.

மெல்லிய தொனியில் இதுவரை கதைத்துக் கொண்டிருந்தவன், பக்கத்து மேசையிலிருந்தவர்களின் கண்கள் தன்னைப் பார்க்கின்றன என்ற உணர்வு வரும்வரை, குரலை உயர்த்திக் கொண்டேபோனான்.

"இல்லை சேர். தயவுசெய்து என்னை மன்னியுங்கள், உங்களை வெளியே தள்ளிவிட வேண்டும் என நான் நினைக்கவேயில்லை. அதிக நேரம் நீங்கள் மட்டுமே ஒன்றியாக கதைத்துக் கொண்டிருக்கிறீர்கள்! அதனால் குளிர் பானம் ஒன்று கொண்டுவரலாமா என்று எண்ணினேன், அவ்வளவு தான் சேர்."

அவன் தனது 'பேர்சை' உருவி எடுத்து, கட்டணத்தைச் செலுத்தினான். சிற்றூண்டிச்சாலையிலிருந்து வெளியேறும் அந்த மனிதனை, சிறிது நேரம் பணியாள் பார்த்தபடி நின்றான். பின் பலமாகச் சிரித்தான். மேசையிலிருந்தவர்களும் அவனுடன் இணைந்து இயல்பாகச் சிரித்தனர். சிரிப்பில் கலந்துகொள்ளாதவர்கள், தமது புருவங்களை உயர்த்தி யோசனையில் ஆழ்ந்தனர். வேறு சிலர் தோள்களைக் குலுக்கி, பின் தங்களின் கோப்பைகளில் கவனம் செலுத்தினர்.

குறிப்பு:

..... ...... ...... ...... என்ற வடிவம் பெண் மௌனமாக இருக்கிறாள் என்பதைக் குறிக்கிறது

**லக்சுமி கண்ணன் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதும் தமிழ் நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர். 'பாரிஜாதம்' என்ற இவரது ஆங்கிலச் சிறுகதைத் தொகுப்பிலிருந்து இக்கதை மொழி பெயர்க்கப்பட்டது.**

## புல்லுருவிகள்

சாதி சமயம் பிரித்து சந்திக்கிழுத்து
தத்துவங்கள் பேசி வித்தை பல காட்டி
தமிழீழவுணர்வை கொச்சைப்படுத்துவர்!

கத்திக் கத்திக் கூட்டங்கள் போட்டு
புத்தி மழுங்கும் புகழாரங்கள் சூட்டி
பிச்சைக்கு அங்கே முந்தி நிற்பார்!

ஏட்டுக்கள் எடுத்து கூட்டுக்கள் வைக்கும்
மிக மெத்தப் படித்த புத்தகப் புழுக்கள்
வாழ்க்கைத் தத்துவமறியா அற்பர்களிவர்கள்.

வருணாசிரம அடிமைகள் அதனால்...
சாஸ்திரம் பார்ப்பார் கோத்திரம் வழுவார்
வீம்புக்கு மட்டும் நாத்திகம் சேர்ப்பார்!

எட்டப்பரையும் வஞ்சகத்தில் விஞ்சி நின்று
காக்கை வன்னியனையே காட்டிக் கொடுக்கும்
கூடிக் கெடுக்கும் கூட்டம் இதுதான்!!!

**— ஸ்ரீசங்கர்**
**சுவிஸ்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## "எனது சாம்பல் மேட்டிலிருந்து புதிய அத்தியாயம் எழுத வேண்டும்"

எனக்கு முன்சென்ற அறுநூற்றி ஐம்பது பேரும் எனக்குத் தெரியவே இறந்தார்கள். அவர்கள் எதற்காக மரணித்தார்கள் என்பதை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன். நான் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப் போவதாகத் தலைவரிடம் அனுமதி கோரியபோது, 'திலீபன் நீ முன்னால் போ! நான் பின்னால் வருகிறேன்' எனக்கூறி எனக்கு உற்சாகமூட்டினார். அவ்வளவுதூரம் தெளிவான, தனது உயிரையும் சிறிதும் மதியாத தலைவர்தான் உங்களுக்குக் கிடைத்துள்ளார் நான் தலைவரிலும் குறைவான நேரமே இப்போது இருந்துள்ளேன். இப்போது விளங்குகிறது எனக்கு என் தலைவரின் கொள்கைப் பிடிப்பு.

தாய்மார்களே! பெரும் வீரனின் தலைமையில் நீங்கள் கிளம்புங்கள்! ஓர் மக்கள் புரட்சி வெடிக்கட்டும். நாங்கள் நிச்சயமாக தமிழீழம் காண்போம். நான் அதை வானிலிருந்து எனது அறுநூற்றி ஐம்பது தோழர்களுடன் சேர்ந்து பார்ப்பேன் என மன ரீதியாகத் தற்போது உணர்கிறேன். என் மக்கள் நிச்சயம் தமிழீழம் காண்பார்கள்.

எமது மக்களின் விடிவிற்காக நான் பூரண மனத்திருப்தியுடன் இந்த உண்ணாவிரதத்தில் இறங்கினேன் எனக் கூறி உங்களிடம் இருந்து விடைபெறுகிறேன்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் தமதுயிரிலும் மேலாக இங்குள்ள மக்களை நினைக்கிறார்கள். தெளிவான, உறுதியான இலட்சியத்துடன் இருக்கிறார்கள். எமது இறுதி இலட்சியத்தை தலைவருடன் இணைந்து நீங்கள் அடைய வேண்டும் என்பதே எனது இறுதி ஆசை. வணக்கம்."

*15.09.1987–அன்று தியாகவேங்கை திலீபன் உண்ணாவிரதம் மேற்கொண்ட வேளையில் மேடையின் முன்னால் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தின் முன் ஆற்றிய புகழ்பெற்ற பேச்சிலிருந்து....*

## பொருந்தாத நிலைப்பாடுகள்

இனப்பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினை. உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை என்பதை ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் பிரதான ஐக்கிய தேசியக் கட்சியும் ஏற்றுக் கொள்கின்றன. அத்தோடு இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வாக அரசியல் தீர்வு ஒன்றே காணப்பட முடியும் என்பதை பேச்சளவிலாலும் அவை ஒப்புக்கொள்கின்றன. ஆனால் இவ் இரு கட்சிகளுமே இனப்பிரச்சினைக்குப் பொருத்தப்பாடான தீர்வு ஒன்றை இதுவரை முன்வைக்கவில்லை. ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசியல் தீர்வு என்ற விடயத்தில் ஒரு அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை வெளியிட்டு அதற்கு ஆதரவு தேடும் முயற்சியில் இறங்கியுள்ளது. ஆனால் அது பொருத்தப்பாடு அற்ற நடவடிக்கை என்பது பல தரப்பிலும் உணரப்பட்டதொன்றாகவே இன்று உள்ளது. இதற்கு சந்திரிகா அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியிலான ஓர் தீர்வு மூலம் தான் விரும்பிய அதிகாரப்பரவலாக்கத்தை நிலை நிறுத்திவிடலாம் என கருதுகின்றமை காரணமாகும். இதில் இராணுவ ரீதியில் ஓர் தீர்வை மேற்கொள்ளுதல் முடியாது என்பது ஒருபுறம் இருக்க, அரசியல் ரீதியிலும் சந்திரிகா அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வுத் திட்டம் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய ஓர் அதிகாரப் பரவலாக்கல் திட்டமாகவும் இருப்பதாக இல்லை. இது எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினாலும் கண்டனத்திற்கு உள்ளாக்கியுள்ளது. ஆயினும் சந்திரிகா குமாரதுங்கா தனது அணுகுமுறைகளை மறுபரிசீலனை செய்வதற்குத் தயாராக இல்லை. தமது அதிகாரப்பரவலாக்கல் திட்டத்திற்கு ஆதரவைத்தேடும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளது. இதேவேளை இனப்பிரச்சினை தீர்வுக்கான முக்கியமான அம்சமாகக் கொள்ளும் இராணுவத் தீர்வையும் அரசு முடுக்கியுள்ளது. இவ்வாறாக ஆளும் கட்சியின் நிலை இருக்கையில், அதன் நடவடிக்கைகளைக் கடுமையாக விமர்சிக்கும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இனப்பிரச்சினை குறித்து தெளிவான அல்லது உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டதாக இல்லை. ஒருபுறம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும் எனக்கூறும் அக்கட்சி மறுபுறம் விடுதலைப் புலிகளுடனான போர் தொடர்வதிலும் அக்கறையாகவே உள்ளது. இந்த வகையில் ஐக்கிய தேசியக் கட்சியும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பொருத்தமான வழிமுறையைச் சிந்திப்பதாகத் தெரியவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டின் பிரகாரம் விடுதலைப் புலிகளுடன் போர் நடந்து கொண்டிருக்கையில் அரசாங்கம் பேச்சுக்களை நடாத்துதல் வேண்டும் என்பதாகும். அதாவது போரும் அரசியல் தீர்வும் வெவ்வேறானவை, ஒரே காலத்தில் மேற்கொள்ளப்படக்கூடியவை என்பதாகும். இதனை அண்மைக்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் வலியுறுத்திப் பேசி வந்துள்ளார். ஆனால் ஒருபுறம் போரும் மறுபுறம் பேச்சுவார்த்தையும் ஒரு நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறையாக இருக்கமுடியாது; இருக்கமாட்டாது. ஏனெனில் யுத்தத்தில் ஏற்படும் முன்னேற்றங்கள், பின்னடைவுகள், பேச்சுவார்த்தைகளையோ அன்றித் தீர்வுத்திட்டங்களையோ பாதிக்கக்கூடியவையாகும். இவ்வாறான அணுகுமுறையானது சில வேளை போராட்டங்கள் முனைப்பாக இல்லாத இடங்களுக்கோ அல்லது நாடுகளுக்கோ பொருந்தக்கூடும். இதுதவிர ஒற்றையாட்சியின் கீழ் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும் என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடும் அரசியல் தீர்வின் முன்னேற்றத்திற்கு உதவக்கூடியது அல்ல. இந்த வகையில் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் சரி, ஐக்கிய தேசியக் கட்சியும் சரி இனப்பிரச்சினையை ஒரு தேசியப் பிரச்சினை எனக் கொண்டாலும் கூட அதற்குப் பொருத்தப்பாடான அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டவர்களாகவும் இல்லை. ஆனால் இவ் இருதரப்பும் யுத்தம் நிறுத்தப்பட்டால் தான் அரசியல் தீர்வு ஒன்றைக் காணலாம் என்ற தெளிவான சிந்தனையைக் கொண்டவர்களாக இல்லை. இந்த ரீதியில் பொதுஜன ஐக்கிய முன்னணியிடமோ அன்றி ஐக்கிய தேசியக் கட்சியிடமோ இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பொருத்தமான தீர்வுத்திட்டமோ அன்றி யோசனைகளுமோ இல்லை. ஆகையினால் ஆட்சிகள் மாறினாலும் என்ன, தலைவர்கள் மாறினாலும் என்ன இவ்விரு கட்சிகளின் தற்போதைய நிலைப்பாடுகள் மூலம் இனப்பிரச்சினைக்கு என்றுமே தீர்வுகாண முடியாது என்பது வெளிப்படையானது ஆகும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

விடுதலைப் புலிகளிடமிருந்து

# எமது நாட்டைக் காப்பாற்றவேண்டும்

## -சிங்கள ஆணைக்குழு

முன்னாள் சுப்ரீம் கோர்ட் நீதிபதி எஸ். டபிள்யூ வல்பிட்ட தலைமையில் 56 சிங்கள பௌத்த இனவாத அமைப்புக்கள் சேர்ந்து, 1996ம் ஆண்டு டிசம்பரில் உருவாக்கிய சிங்கள ஆணைக்குழுவானது, 300க்கும் மேற்பட்ட இனவெறி கொட்டும் சாட்சியங்களை பதிவுசெய்த பின்னர் அதனது இறுதி அறிக்கையை மற்றுமொரு சுப்ரீம் கோர்ட் நீதிபதியும் 'மகாபோதி' அமைப்பு என்ற பௌத்த இனவாத அமைப்பின் தலைவருமான திரு. ஆர் வணசுந்தரவிடம் கையளித்தது. இவ் ஆணைக்குழு முன் அளிக்கப்பட்ட சாட்சியங்களின் சிறுபகுதி இங்கே தொகுக்கப்பட்டுள்ளது.

நமது நாட்டின் வடக்குப் பிரதேசத்துக்கு மிகவும் அண்மையில் அமைந்திருக்கும் 'தமிழ்நாடு' மாநிலத்திலிருந்து எமது நாட்டுக்கு அடிக்கடி விடுக்கப்படும் அரசியல் மட்டுமன்றி ஆக்கிரமிப்பு ரீதியிலான உந்துதல்கள் மிகவும் பயங்கரமானவை. இந்தியாவின் முன்னாள் பிரதமரான திருமதி. இந்திரா காந்தி அவர்களது காலத்தில் இலங்கை இராணுவத்துடன் யுத்தம் புரிவதற்காக எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தினருக்கு தமிழ்நாட்டிலேயே யுத்தப் பயிற்சி கொடுக்கப்பட்டது.

### 'காரணகர்த்தாக்கள்'

அதன் பின்னர் புலிகளுடன் எமது இராணுவம் யுத்தம் புரிந்துகொண்டு முன்னணியில் செல்லும்போது வடமராட்சியில் வைத்து எமது இராணுவம் நிறுத்தப்பட்டது. இதற்குப் பிரதான காரணகர்த்தாக்கள் அக்கால தமிழ்நாட்டு முதலமைச்சர் கருணாநிதியும் அக்கால இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுமே ஆவர். இத்துடன் அவர்கள் திருப்தியடையாது, எமது நாட்டின் எல்லைக்குள் புகுந்து வான் வழியாக வடகிழக்கு மக்களுக்கு உணவுப் பொட்டலங்களைப் போட்டனர்.

இவ்வாறு தோன்றிய பதற்றநிலை ராஜீவ் – ஜயவர்த்தனா ஒப்பந்தத்தில் முடிவுற்றது. இந்த ஒப்பந்தம் மூலமாக இந்திய இராணுவத்தினர் நம் நாட்டுக்குள் பிரவேசித்தனர்.

இந்நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்களினதும் தமிழ் நாட்டு மக்களினதும் தேசிய உணர்வுகளை முன்வைத்து இருசாரருக்குமிடையில் மிக நெருங்கிய தொடர்பு பாலமாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. இதனால் தமிழக மக்கள் நம் நாடு குறித்த விடயங்களில் மிகவும் அவதானமாக இருந்து வருகின்றனர்.

### 'தமிழக ஏழைமக்கள்'

இதன்படி பார்க்கும் பொழுது வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு சுய ஆட்சி அதிகாரம் வழங்கப்படுமாயின் தமிழ் நாட்டில் வாழுகின்ற ஏழை எளிய மக்கள் வடகிழக்கு பிரதேசங்களுக்கு படையெடுத்து வந்து அங்கே வாழ முற்படுவர். நிச்சயம் இவ்வாறு நடந்தே தீரும். அதனைத் தடுக்க இலங்கை அரசுக்கு பலம் இருக்காது.

உண்மையில், பொதுஜன ஐக்கிய முன்னணியினருக்கு ஒரு வேளை கடந்த காலத்தில் எமது நாட்டில் இடம்பெற்ற அரசியல் நிகழ்வுகள் தெரியாது இருக்கலாமோ என எண்ணத்தோன்றுகிறது.

*1957*–களில் எழுச்சி பெற்ற மக்கள் எதிர்ப்பலையினால் அன்று உலகம் முழுவதிலும் வரவேற்புப் பெற்றிருந்த ஸ்ரீ ஜவஹர்லால் நேரு அவர்களுக்குச் சமமாக நேரு காலத்திலேயே வாழ்ந்து வந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க அவர்கள், அவராலேயே ஏற்படுத்தப்பட்ட பண்டா–செல்வா ஒப்பந்தத்தினைக் கிழித்தெறிந்தார்.

*1965*–ஆம் ஆண்டளவில் ஆட்சிக்கு வந்த டட்லி சேனநாயக்க அவர்களது அரசில், தமிழ் அரசியல் கட்சியான 'பெடரல் கட்சி'யும் அங்கம் வகித்தது. அக்காலகட்டத்தில் பெடரல் கட்சியினை மகிழ்விக்கவோ அன்றி வடக்குப் பிரச்சினைக்குத் தீர்வு தேடுவதற்கோ டட்லி சேனநாயக்க முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### பதற்ற நிலை

அந்தக் காலத்தில் தற்காலம் போல் பிரபாகரன் போன்றவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பதற்றநிலை கிடையாது. அவ்வாறான ஒரு காலகட்டத்திலேயே நம் அரசியல் தலைவர்களுக்கு இப்பிரச்சினை தொடர்பாக எந்தவொரு தீர்வும் எடுக்கமுடியாதிருந்தது. நிலைமை இவ்வாறு இருக்கும் பொழுது அரசியல் அரங்கில் புதியவர்களான இந்த புத்திஜீவிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

### தீர்வுக்கு வழி?

நம் நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்க்க எந்தவித தீர்வுத் திட்டங்களையும் எடுக்க முன்பாக எல்.ரி.ரி.ஈ. யினரின் பிடியிலிருந்து நம் நாட்டினைக் காப்பாற்றிக் கொள்ள உகந்த சட்டதிட்டங்களை வகுக்க வேண்டும். இவ்வாறு செய்யாது வேறு எந்தத் தீர்வும் சரிவராது என்பது மட்டும் உண்மை.

தமிழ் தீவிரவாதிகளைப் போலல்லாது ஏனைய தமிழ் மக்களிடத்தில் இருக்கும் இன உணர்வு ஒவ்வொரு சிங்களவரிடமும் இருந்து இவ்வாறானதொரு சூழ்நிலையில் இவர்கள் அனைவரும் எழுந்து நின்றால் பிரபாகரன் போன்றவர்களால் இவ்வாறு செயற்பட முடியாது. அது மட்டுமன்றி இப்பிரச்சினையை இலகுவாகத் தீர்க்கவும் வாய்ப்பிருந்திருக்கும்.

ஒரு கோடிக்கும் குறைவான சிங்கள மக்கள் வாழ்வதற்கு இந்த உலகத்திலேயே இருப்பது இச்சிறு நாடு மட்டும்தான். ஆனபடியால் உலகிலேயே இருக்கக்கூடிய மிகச் சிறிய இனமான சிங்கள இனத்தின் எதிர்காலத்தை நாசப்படுத்த இந்த நாட்டுக்குள் குடிவந்துள்ள அந்நிய இனத்தின் மூலமாக ஏற்படவிருக்கும் அபாயங்களை முறியடிப்பதற்கும் அவ்வாறானதொரு நிலைக்கு தம்மைத்தாமே தயார் படுத்திக் கொள்ளவும் சிங்கள மக்களுக்கு வழிவகுத்துக் கொடுப்பது நியாயமே. *1945*–ஆம் ஆண்டில் உருவான இஸ்ரேல் அரசுக்கு அமெரிக்காவின் உதவியுடன் கூடிய அவ்வாறன வரப்பிரசாதம் கிடைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

### அவ்வாறு செய்யலாமா?

ஒரு வாகனத்துக்கு கல்லால் அடிக்கும் சிறியதொரு பிரச்சினையை முன்வைத்து இஸ்ரேல் விமானப்படை லெபனான் நாட்டில் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளின் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றது. இது ஒரு பழக்க தோஷம்போல் ஆகிவிட்டுள்ளது. எனினும் எமது விமானப்படை அவ்வாறு எந்தவொரு செயற்பாட்டினையும் செய்யவில்லை. அவ்வாறு செய்திருப்பின் இன்று இந்த நிலை ஏற்பட்டிருக்காது.

வடக்கு–கிழக்குப் பிரதேசங்களில் வாழ்ந்து வரும் மக்கள் மாத்திரமின்றி முஸ்லீம் மக்களும் இன்று அவ்வப் பகுதிகளிலிருந்து விரட்டப்பட்டுள்ளனர். இரண்டு வாகனங்களில் புனித யாத்திரை சென்ற பௌத்த பிக்குமார் கொல்லப்பட்டனர். இவ்வாறு எல்லாம் நடைபெற்றும் கூட எந்தவொரு பாதிப்பும் இன்றி தமிழ் மக்கள் பிற பகுதிகளில் சிங்கள மக்களுடன் சேர்ந்து சுகமாக வாழ்ந்து வருகின்றனர்.

சிங்கள மொழி அரசகரும மொழியாக இருக்கும் தறுவாயிலும்கூட அரசாங்கத்தில் உயர்மட்ட பதவிகளான அமைச்சுச் செயலாளர் பதவிகளில் தமிழர்கள் இருந்து வருகின்றனர். இந்நிலையில் அவர்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது என்றால் நாளை ஒருவேளை அரசகரும மொழியினையே மாற்றி அல்லது அதற்கு நிகரானதொரு வழியினை அமைத்துவிடுவது அவர்களுக்கு சிரமமாக இருக்காது.

இந்த இடத்தில் நாம் ஒன்றை மிக முக்கியமாக மனதில் கொள்ளல் வேண்டும்.

அதாவது, எல்.ரி.ரி.ஈ. இயக்கமானது ஒரு சிறிய குழு அல்ல. இவ்வியக்கத்தின் உள்ளேயும் வெளியேயும் எத்தனையோ பிரபாகரன்கள் இருக்கலாம் என்பதே.

### திருப்தி வருமா?

பிரபாகரன் கேட்கும் தமிழ் ஈழத்திற்கு விரோதமான தமிழர்கள் எத்தனையோ பேர் இருப்பார்கள்? ஒருவரையேனும் தேடிக்கொள்ள முடியுமா? ஆக இவ்வாறானதொரு தமிழ் இனம் தமிழ் ஈழம் தவிர்ந்த வேறு ஏதேனும் அரசியல் தீர்வுத் திட்டத்தின் மூலம் திருப்தியடைவார்களா? அது நிரந்தரமான திருப்தியாகுமா?

இவர்கள் தமிழீழம் பெற்றுக்கொண்டாலும் கூட அதனுடன் திருப்தியடையப் போவதில்லை என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். அத்துடன் இவர்களுக்கு தமிழ் நாட்டில் இருந்தும் உதவிகள், ஒத்தாசைகள் கிடைத்தால் நிலைமை என்னாவது என்பதனை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

இவற்றையெல்லாம் நினைத்துப்பார்க்கையில், கடந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது அரசு பெற்றுள்ள வெற்றியை வீணடிக்காமல் அதைக் காப்பாற்றும் முகமாகவும் அரசின் பொருளாதாரத்தை சீர்குலைக்காது அதிக செலவீனங்களை ஏற்படுத்தவும், சிங்கள மக்களுக்கு நாசத்தை உண்டு பண்ணவும் வழிவகுக்கும் தீர்வுப் பொதிக்கான மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பினை நடத்தாமல் அதை அப்படியே கிழித்தெறிய வேண்டும். அவ்வாறு நிகழுமாயின் அது நாட்டுக்கும் நம் நாட்டு மக்களுக்கும் நன்மை பயப்பதோடு அரசாங்கம் பெற்றுள்ள நற்பெயருக்கும் குந்தகம் விளைவிக்காது. ★

## திலீபன் கிடைப்பானா?

- நா. கமலவதனி

விடுதலை வேள்வியில் விடிவெள்ளியொன்று
விண்ணென உதித்தது ஈழமதில்
விடு-தலை என்ற இராணுவத்தை
விரட்டியடித்த வேங்கையிவன்
ஒருதலைப்பட்ச நடவடிக்கயினை
ஓதிவந்த இந்தியனின்
கெடுதலையுணர்த்திய பெருவீரன்
கேர்ணல் திலீபன் கேளீரே!

தியாகச் செம்மல் திலீபனவன்
திறமை சரித்திரம் படைத்ததுவே
தகாத கொடுஞ்செயல் தலைதூக்க
தவித்து நின்றோம் தமிழர் யாம்
நியாய இலக்குக் கடலொன்றில்
நீந்தி வந்த திலீபனிவன்
அடிமை மக்கள் அமைதிக்காய்
அழித்தான் தன்னை நோன்பாலே!

மெழுகுவர்த்தி தனும்கூட
மீதம் தன்னில் வைத்துவிடும்
அழகு மிகுந்த அரும் வீரன்
அனைத்தும் ஈந்தான் தமிழுக்காய்
அளவில் பெரிய ஊர்வலங்கள்
அன்றியும் மறியல், கூட்டங்கள்
ஒழுங்கு செய்து வென்றவனே
ஒப்பில்லாத் திலீப மாமணியே!

சாவை வென்ற சாத்வீகன்
சாதனை படைத்த பார்த்தீபன்
ஆவிபிரியும் வேளையிலும்
ஆத்மா அழுதது விடிவுக்காய்
தாவி வருவோம் உன்பின்னால்
தணியா சுதந்திர தாகத்துடன்
கேவிக்கேவி அழுதிடினும்
கேர்ணல் திலீபன் கிடைப்பானா?

ஈழநாதம்
(20.09.90)



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# முற்றுகை

ஐம்பத்திநாலு வயதுக் கிழவனுக்கும் இருபத்திநாலு வயது இளைஞனுக்கும் நடுவே என்ன சிநேகிதம் இருக்கப்பபோகிறது. இப்படித் தான் யாராவது நினைக்கக் கூடும். ஆனால் எனக்கும் இருபத்திநாலு வயது மணிவண்ணனுக்கும் இடையே ஆழ்ந்த சிநேகிதம் இருக்கிறது.

கொழும்பில், சன நெரிசலுள்ள காஸ்வேக் வீதியில், ஒரு வீட்டு மேல் மாடியில், முன்பக்க அறையில் இருவரும் இரண்டு வருஷமாக குடியிருப்பதனால்தான் இந்த நட்பு ஏற்பட்டது. என்றாலும் சொல்லிவிட முடியாது. ஒரே அறையில் இருந்தாலும் மூன்றே மாதங்களில் சண்டை பிடிக்கத் தொடங்கிய பல பேரை எனக்குத் தெரியும். சண்டை என்று பிடிக்காவிட்டாலும் அன்பு அனுசரணை இல்லாமல் யந்திரம் போல ஒரே அறையில் இருப்பவர்கள் பற்றியும் தெரியும்.

நினைத்துப் பார்க்கும்போது எனக்கே ஆச்சரியமாகத் தான் இருக்கிறது.

இந்த மெல்லிய உயரமான மென்மையான இயல்புள்ள, தயங்கித் தயங்கிக் கதைக்கின்ற மணிவண்ணனை இத்தனை தூரம் பிடித்துப் போக என்ன காரணம்....

எனக்கே புரியவில்லை.

கொழும்பில் பத்தடிக்குப் பத்தடியில் ஒரு அறை வாடகைக்கு எடுப்பதில் இருக்கின்ற கஷ்டம் எனக்குத் தெரியும். அதுவும் யாழ்ப்பாணத்தில் பிரச்சனைகள் அதிகரிக்கத் தொடங்கிய பின் கொழும்பு, தமிழ்ச் சனத்தாலும் நெரிபடுகிறது.

வீடுகளுக்கும் அறைகளுக்கும் இப்போது நினைத்துப் பார்க்க இயலாத அளவுக்கு வாடகைகள், முற்பணங்கள், கீழே கடையும் மேலே இரண்டு அறைகளுடனான சிறிய மாடி வீடு இது. கீழே கடையை நடத்திக் கொண்டு மேலே தன் மனைவி, இரண்டு குழந்தைகளுடன் ஒரு அறையில் வீட்டுக்காரரர் இருந்து கொண்டு தெருப்பக்க அறையை எனக்கு வாடகைக்கு தந்திருந்தார்கள். நான் நான்கு வருஷங்களாக இதில் இருக்கிறேன்.

இரண்டு வருஷத்துக்கு முன்பு ஒரு வெள்ளிக்கிழமை நான் வேலையால் திரும்பி வந்து முகம் கழுவி தேனீர் போட்டுக் குடித்துவிட்டு ஆறுதலாய் இருந்த நேரம்தான் மணிவண்ணன் இந்த அறைக்குக் குடிவந்தான்.

வாடகை பகிர்ந்து கொள்ளலாம் என்ற நினைவில் அவனை என்னுடன் இருக்கச் சம்மதித்தேன்.



முதல் பார்வையிலேயே அவனை எனக்குப் பிடித்துப் போய்விட்டது. அவனுடைய உடைமைகள் என்று அதிகம் இல்லை. ஒரே ஒரு கருஞ்சிவப்பு நிற சூட்கேஸ் மட்டுமே வைத்திருந்தான்.

வெள்ளவத்தையில் ஒரு புத்தகக் கடையில் வேலை செய்வதாகச் சொன்னான். அவனின் குழந்தைத்தனமான முகத்தையும் மெல்லிய சிரிப்பையும் பார்க்க எனக்கு என் சின்னவனின் ஞாபகம் வந்தது.

அந்த வினாடியில் தான் எங்கள் நட்பு மெல்லத் துளிர் விட்டது. இந்த இரண்டு வருஷத்திலும் ஆழ வேரூன்றியது.

என் மனைவி பிள்ளைகள் முன்பு யாழ்ப்பாணத்தில் இருந்த போதும் இப்போது வன்னியில் இருக்கிற போதும் அவர்களை நினைத்து ஏங்கிக் கொண்டி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ருக்கும் நடுவயதுக்காரன் நான்.

மணிவண்ணன் இருபத்திநாலு வயதுக்குரிய துடிதுடிப்புடனும் சுறுசுறுப்புடனும் இருக்க வேண்டியவன். ஆனால் அவன் அப்படி இல்லாதது ஆச்சரியமான விஷயம். இந்தக்காலத்து இளைஞர்களின் குணாதிசயங்கள் எதுவும் அவனிடம் இல்லை. கொழும்பில் பொழுதுபோக்க எத்தனை இடங்கள், எத்தனை விஷயங்கள் இருக்கின்றன. அவனுக்கு எதிலும் ஆர்வம் இருந்ததில்லை.

குறைந்தபட்சம் காலிமுகக் கடற்கரைக்குக் கூடப்போனதில்லை. அவன் கடையிலிருந்து திரும்பிவர எட்டு, ஒன்பது மணி ஆகிவிடும். வரும்போதே கடையில் சாப்பிட்டு வந்துவிடுவான். குளித்துவிட்டு முன்பக்கம் அரைச்சுவர் வைத்த சிறிய விறாந்தையில் கதிரை போட்டு அமர்ந்துவிடுவான். முகத்தை அந்த அரைச் சுவரில் பதித்துக்கொண்டு தெருவைப் பார்த்துக் கொண்டிருப்பான். மின் விளக்குகளின் ஒளியில் தெருவே பளிச்சிட்டுக் கொண்டிருக்கும்.

காஸ்வேக் வீதி பகல் இரவு என்று எல்லா நேரமும் சத்தம் சந்தடி உள்ள தெரு. நெரிசலாய் நடக்கும் மனிதர்களையும், சர் சர் என்று இரைச்சலுடன் தொடராய் நகர்ந்து போகும் வாகனங்களையும் அலுக்காமல் பார்த்துக் கொண்டிருப்பான்.

முதலாவது மாடியில் இருந்து பார்க்கும் போது ஐந்து லாம்படிச் சந்திவரை தெரு நீளம் பார்வையில் பதியும். பக்கத்து சாப்பாட்டுக் கடையில் கொத்து ரொட்டி அடிக்கும் சத்தம் இடைவிடாமல் கேட்கும். நேர் கீழே தெரு ஓரம் தள்ளு வண்டியில் அப்பிள் பழமும், அன்னாசிப் பழமும் விற்கும் கிழவனது பழங்களின் கலவையான வாசனை மூக்கை நெருடும். அந்த முன்னிரவிலும் சத்தம் சந்தடி அடங்கிவிடாத சூழல்.

உள் அறையில் வீட்டுக்காரரின் தொலைக்காட்சி எந்நேரமும் போட்டபடி இருக்கும். செய்திகளை மட்டுமே மணிவண்ணன் பார்ப்பான். சினிமா பார்ப்பதிலும் அவ்வளவு ஆர்வமில்லை. புத்தகங்கள் மட்டும் தேடித் தேடிப் படிப்பான். அவன் வாசிப்பிலும் தரம் இருக்கும். இருபத்திநாலு வயதில் டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தியின் எழுத்துக்களை வாசிக்கும் ஒருவரையும் என் வாழ்வில் இதுவரை நான் சந்தித்ததில்லை.

என் மூத்தவன் இந்த இருபத்திநாலு வயதில் கமல்ஹாசனையும் ரஜனிகாந்தையும் பற்றியே கதைத்துக் கொண்டிருந்திருக்கிறான். மணிவண்ணன் என் அறைக்கு வந்த ஒரு மாதத்திலேயே அவன் குணங்கள் பற்றி புரிந்து கொள்ள முடிந்தது.

இந்த விறாந்தையில் இருந்து என்னுடன் கதைக்கும் நேரங்களில் தன் சொந்த விஷயங்கள் பற்றி சொல்லியிருக்கிறான். தன் அப்பா எண்பத்தி மூன்று இனக்கலவரத்தில் சிங்களக் காடையர்களினால் கொல்லப்பட்டது பற்றி... அம்மா தன்னையும் தன் இரண்டு அண்ணாமாரையும், தங்கைகளையும் வளர்க்க பட்ட கஷ்டம் பற்றி... தொண்ணூறில் விமானக் குண்டு வீச்சினால் வீடு தரைமட்டமானது பற்றி... உறவினர் வீட்டில் கொக்குவிலில் வாழ்ந்தது பற்றி.... சின்னண்ணா மாவீரனாய் ஆனது பற்றி... என்று ஒரு மனித வரலாற்றுக் காலங்களின் சில பகுதிகளை என்னுடன் பகிர்ந்து கொண்டிருக்கிறான்.

எண்பத்தியெட்டில் அண்ணாவை இந்திய இராணுவம் பிடித்துக்கொண்டு போய் பலாலியில் விட அங்கிருந்து இலங்கை இராணுவம் பூஸாவுக்கு கொண்டுபோய் நாலு வருஷ சிறைவாசம், விதம் விதமான சித்திரவதைகளின் பின் அரைகுறை உயிரில் புத்தி பேதலித்த நிலையில் விடுதலை செய்தது பற்றிச் சொன்னபோது அழுது விட்டான். இவ்வளவுடன் அவனது துயரம் முடியவில்லை. வலிகாம இடப்பெயர்வில் எனது குடும்பம் போலவே அவனது குடும்பமும் கிளிநொச்சிக்கு வர முயற்சித்தது. கிளாலிக் கரையில் நின்ற போது விமானம் குண்டு போட்டதில் அதே இடத்தில், தாயின் கண் முன்னே தங்கை உடல் சிதறிப் பலியானாள். அங்கேயே மண்மூடி அடக்கம் செய்துவிட்டு தாய் அழுதுகொண்டே மற்ற இரு பிள்ளைகளுடனும் கிளிநொச்சி வந்து உறவினருடன் இருக்கிறாள். இதை கடிதம் மூலமே மணிவண்ணன் அறிந்து கொண்டான். நாள் கணக்கில் அழுதுகொண்டே இருந்தவனை நான்தான் ஒருவாறு தேற்றி எழ வைத்தேன்.

ஒரே மனதுக்கு இத்தனை துன்பங்கள், துயரங்கள் நேரக்கூடும் என்று சத்தியமாய் நான் இதுவரை நினைத்துப் பார்த்ததில்லை. அவனுடைய வீடு மூன்று செத்த வீடுகளைத் தாங்கியிருக்கிறது.

இந்தச் சின்ன வயதில் இவ்வளவு கவலைகளைச் சுமந்து கொண்டிருக்கிறானே என்ற நினைவு அவன் மீது இன்னும் அன்பு செலுத்தக் காரணமாகியது. இந்த அளவுக்கு நொந்து போய் இருப்பவனை என் பிள்ளை மாதிரி நேசித்தேன்.

பின்னர் 'சத்ஜய' இராணுவ நடவடிக்கையில் அடுத்த இடப்பெயர்வு. எனது குடும்பம் ஸ்கந்தபுரத்தில் தெரிந்தவர்கள் வீட்டுக் காணியில் கொட்டில் போட்டுக் குடியிருக்க, மணிவண்ணனின் அம்மாவும் அண்ணாவும் தங்கையும் ஓமந்தையில் ஒரு உறவினர் வீட்டில் இருந்தார்கள்.

மணிவண்ணன் தன் செலவுகளைச் சுருக்கிக் கொண்டு அனுப்பும் காசில் தான் அவர்களுடைய சீவியம் நடக்கிறது.

மணிவண்ணனுக்கு வாழ்க்கை பற்றிய நல்ல கனவு இருக்கிறது. வறுமையையே வாழ்க்கையாய்க் கொண்ட தன் குடும்பத்தை நல்ல நிலைக்கு கொண்டு வருவது அவனுடைய தீராத ஆசை. அதற்காகவே வெளிநாடு போகும் உத்தேசத்துடன் கொழும்புக்கு வந்திருந்தான். உறவினர்கள் சந்தர்ப்பம் கிடைக்கும் போது தம்முடன் கூப்பிடுவதாக சொல்லியிருந்தார்கள். அதனால் அதுவரை கொழும்பில் வேலை செய்து கொண்டிருக்கிறான். இந்தப் பிள்ளை எங்காவது போய் உழைத்து நன்றாய் இருக்கவேண்டும் என்று மனதார நான் நினைத்துக்கொள்வேன்.

வன்னிக்குப் போய் வரும் செலவுகளைக் கணக்குப் பார்த்து அவன் தாய் சகோதரர்களைப் போய்ப் பார்க்கவில்லை.

நான் தான் போன மாதம் பொங்கலுடன் வன்னிக்குப் போய்வந்தேன். நான் போகும் போதே ஓமந்தையில் இருக்கும் மணிவண்ணனின் தாய் வீட்டிற்குப் போயிருந்தேன். என்னிடம் அவர்களுக்கு கொடுப்பதற்காக இரண்டாயிரம் ரூபா தந்துவிட்டிருந்தான். அவர்கள் அந்தச் சிறு கொட்டிலில் இருந்த கோலம் இன்றைக்கும் என் நெஞ்சை அழுத்திக் கொண்டுதான் இருக்கிறது.

முப்பது வயதில் வாட்டசாட்டமாய்.... ஆனால் புத்தி பேதலித்த நிலையில் முடங்கிப் போய் மண் சுவரை சரண்டியபடி படுத்திருக்கும் அவன் அண்ணாவைப் பார்க்க மனம் கலங்கிப் போனது. ஒரு காலத்தில் எவ்வளவு ஆரோக்கியமாய் இவன் இருந்திருப்பான். இப்போது இந்தக் கோலத்தில்......

கண்ணெதிரே அந்தப் பிள்ளை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

யைப் பார்த்துப் பார்த்து அந்தத் தாய் மனம் என்ன பாடுபடும் என்று நினைத்ததும் என் கண்கள் கசிந்தன. எப்பேர்ப்பட்ட அவலம் இது.

இவர்களைப் பார்த்ததில் பாரமாகிப் போன மனத்துடன் ஸ்கந்தபுரம் போன எனக்கு என் குடும்பத்தவரின் நிலை இன்னும் மனப்பாரத்தை தந்தது.

ஒரு சிறு கொட்டிலில் அவர்களின் வாழ்க்கை. நல்ல தண்ணீருக்கு ஒரு மைல் போக வேணும். மூச்சுத்திணறும் அளவுக்கு சன நெருக்கம். மீண்டும் மீண்டும் வரும் காய்ச்சல். மருந்துகள் போதிய அளவு இல்லாத நிலை. பல நெருக்கடிக்கு நடுவே அவர்களின் வாழ்க்கை.

அங்கு நீளம் நீளமாய் போடப்பட்ட கொட்டில்களில் நெருக்கமாய் இருந்து பிள்ளைகள் படிப்பதைப் பார்த்த போது மனம் பகீரென்றது. இந்தமாதிரி இடத்தில் இருந்து எப்படிப் படிப்பது? அந்த வினாடியில் தான் என் குடும்பத்தையும் கொழும்புக்கு கூட்டிவரும் யோசனை தோன்றியது.

வயது வந்த பிள்ளைகள் வவுனியா தாண்டி வருவதில் இருக்கிற சிக்கல்கள் பற்றி யோசித்தேன். எல்லாவற்றையும் சமாளித்து இங்கே வந்துவிட்டால் மூத்தவனை வெளிநாட்டுக்கு அனுப்பிவிடலாம். மற்றவர்களைக் கொழும்பில் படிக்க வைக்கலாம். சின்னவன் இம்முறை ஏ.எல் எடுக்கவேணும். இங்கு நல்ல ரியூசனுக்கு ஒழுங்கு செய்யலாம். யாழ்ப்பாணத்தில் அவனுக்கு முன்பு படிப்பித்தவர்கள் இப்போது கொழும்பில் தான் இருக்கிறார்கள். எதுக்குமே வவுனியா தாண்டி வரவேணும். இங்கு எடுக்கும் ஒழுங்குகளைச் செய்துவிட்டு அவர்களைப் புறப்பட்டு வரும்படி கடிதம் எழுத வேணும்.

இதற்கு யாரைப் பிடித்து அலுவல் செய்வது என்று தெரியவில்லை. கந்தோரில் எக்கவுண்டனாய் இருக்கும் குகதாசன் ஏதும் உதவி செய்யக்கூடும். நாளை வெள்ளி அவருடன் கதைத்துப் பார்க்க வேண்டும்.

இந்த நினைவில் ஒழுங்காய் சாப்பிட முடிவதில்லை. என்ன சமைத்தார்களோ என்ன சாப்பிட்டார்களோ என்று யோசனை. இரவுகளில் நித்திரை கொள்ள முடிவதில்லை. வன்னி மீதான படையெடுப்பு என்ற செய்திகள் கேட்டு மனம் கலங்கிக் கொண்டிருக்கிறது.

ஒரு தடவை புரண்டு படுத்தேன். இரவு பதினொரு மணிக்கு மேலாய் இருக்கும் என்று தோன்றியது. தெருவில் இன்னமும் சந்தடி அடங்கவில்லை. தொம், தொம் என்ற பின்னணி அதிர்வுடன் பெரிய சத்தத்தில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தது.

மணிவண்ணன் மேசை விளக்கைப் போட்டுவிட்டு ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். சமீப நாட்களாய் அவனின் வெளிநாடு செல்லும் ஆசை பலவீனமடைந்து வருவது போல் தோன்றியது. நாலைந்து இலட்சம் அவனுக்கு செலவழிக்க யாரும் முன்வரவில்லையோ என்னவோ... இந்த இரண்டு வருஷத்திலும்



நாலைந்து இடத்தால் நாலாயிரம், ஐயாயிரம் என்றுதான் அவனுக்கு நாலு தடவைகள் காசு வந்திருந்தது. அவ்வளவுடன் அந்த உறவுனர்கள் கை விட்டு விட்டார்களோ தெரியவில்லை. ஆனாலும் மணிவண்ணன் ஏதோ நம்பிக்கையுடன் காத்திருப்பதாகத் தான் தோன்றுகிறது.

இப்போது இவன் அந்த வெளிநாட்டு உறவினருக்குத் தான் கடிதம் எழுதுகிறானோ அல்லது தன் அம்மாவுக்குத் தான் எழுதுகிறானோ....... அவன் முகத்திலிருந்து எதையும் கண்டுகொள்ள முடியவில்லை. ஆனாலும் ஏதோ படு தீவிரமாக யோசித்துக் கொண்டு எழுதுகிறான். ஏதோ பத்திரிகைக்கு கவிதை எழுதுகிறானோ.... கவிதை எழுதுகிறவன் முகத்தில் இத்தனை இறுக்கமும் யோசனையும் இருக்குமா.....

சொல்லமுடியாது யோசனையும் கவலையும் உள்ளவன் தான் கவிதை எழுதுவான். இவன் கவிதைகள் எழுதியுமிருக்கிறான்.

"தம்பி..."

"பதினொரு மணிக்கு மேலாகுது. அப்பிடி என்ன எழுதுகிறாய் படுக்காமல்"

"இல்லை அண்ணை, ஜேர்மனியில இருக்கிற எங்கட சொந்தக்கார அண்ணைக்கு எப்பிடியும் என்னைக் கெதியாய் கூப்பிடச் சொல்லி கேட்டு எழுதுகிறன். நான் வந்து உழைச்சு முழுக் காசும் வட்டியோட தாறன். எப்பிடியும் கூப்பிடுங்கோ எண்டு எழுதுறன்" எனக்கு அவனைப் பார்க்க பாவமாய் இருந்தது.

"எழுதி முடிச்சிட்டன் அண்ணை இந்தா வாறன்". எழுதிய காகிதத்தை மடித்தான்.

திடீரென வெளியே தடதடவென்று சத்தம் கேட்டது. கதவு இடிபட்டது. அழைப்பு மணி விடாது ஒலித்தது. வெல வெலத்துப் போய் எழுந்தோம்.

"செக் பண்ண வாறாங்கள் போல கிடக்கு"

வீட்டுக்காரனின் குரல் கிசுகிசுப்பாய்க் கேட்டது.

இப்படி இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை வந்து விசாரித்துவிட்டுப் போவது வழக்கம் தான். ஆனால் இன்றைக்கு ஒரு அவசரம் தெரிந்தது.

வீட்டுக்காரர் ஓடிப்போய் கதவைத் திறந்தார். பொலீசாரும் இராணுவமுமாய் பத்துப் பேர் வரை உள்ளே வந்தார்கள். அவர்களின் முகங்களில் இறுக்கம். பளிச்சிட்ட மின் விளக்கின் ஒளியில் அவர்களது முகங்களைப் பார்க்க ஒரு வித பயம் மனதில் எழுந்தது.

முன்னால் வந்தவன் நேராக மணிவண்ணனிடம் வந்து என்ன ஏது என்று எதுவும் கேட்காது பளாரென்று அறைந்தான். அந்தச் செய்கையில் அவர்களின் ஆத்திரம் அப்பட்டமாய் தெரிந்தது. தடுமாறி விழப்போன மணிவண்ணனை நான் ஓடிப்போய் பிடித்துக் கொண்டேன்.

மணிவண்ணனைப் பார்த்து மிக மோசமான வார்த்தைகளில் திட்டினார்கள். ஒவ்வொரு அறைக்கும் போய்ப் பார்த்தார்கள். மணிவண்ணனை சுவரோரம் தள்ளி நிறுத்தி ஏதோ கேட்டார்கள். கண்கள் தழும்பி நிற்க அவன் பயத்துடன் ஏதோ சொல்வது எனக்குத் தெரிந்தது.

எங்கோ ஒரு தாக்குதலில் இவர்களின் இழப்பு பெரிதாய் இருந்திருக்க வேண்டும். அதன் பிரதிபலிப்புத்தான் இவர்களின் இந்த ஆவேசம் என்பது புரிந்தது.

அறைக்குள் இருந்த எங்கள் உடைமைகளை ஆராய்ந்தார்கள், மணிவண்ணனின் சூட்கேஸை கவிழ்த்துக் கொட்டி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

னார்கள். அவனை விரோதத்துடன் பார்த்து,

"உன்னை விசாரிக்க வேணும் வா" என்றார்கள். புத்தகக் கடையில் வேலை செய்யும் ஒரு அப்பாவி அவன் என்று எவ்வளவோ நான் சொல்லியும் அவர்கள் கேட்டுக் கொள்ளவில்லை. மணிவண்ணனைத் தள்ளிக் கொண்டு போனார்கள்.

கீழே நின்ற வானில் அவனைப் போலவே அந்த தெருவில் இருந்த பல இளைஞர்களையும் ஏற்றினார்கள்.

பின்னால் தாய்மாரின் அழுகை இருளைக் கிழித்துக் கொண்டு அவலமாய்க் கேட்டது. என்ன செய்வது என்று திகைப்பாக இருந்தது. மணிவண்ணன் என்னைப் பயத்துடன் பார்த்தான். அதற்குள் வான் கதவு மூடிக்கொள்ள வான் புறப்பட்டுப் போனது. விடிந்ததும்தான் எதையாவது செய்யலாம். மிகுதி இரவு நித்திரையின்றியே கழிந்து போனது.

மிகவும் அதிகாலையில் பக்கத்துக் கடை பொன்னம்பலத்துடன் அருகே இருந்த பொலிஸ் நிலையத்துக்குப் போனேன். மேலும் சிலர் நின்றிருந்தார்கள். யாரையும் உள்ளே அனுமதிக்கவில்லை. விசாரித்துவிட்டு அனுப்பி வைப்போம் என்றார்கள். ஏழரை மணிவரை நின்று பார்த்து விட்டுத் திரும்பினோம். எப்படியும் விசாரித்து விட்டு குற்றமில்லை எனக் கண்டால் வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள் என்று மனதுக்குள் சமாதானம் சொல்லிக் கொண்டேன்.

அறைக்குள் வந்து குளித்து உடைமாற்றி அலுவலகம் போகப் புறப்பட்டேன். கதவைப் பூட்டிக் கொண்டு கீழே இறங்கினேன். பக்கத்து ஒழுங்கை முகப்பில் ஒரு நடுத்தர வயதுப் பெண் தரையில் அமர்ந்து "நம்ப புள்ளையை புடிச்சுக்கிட்டுப் போயிட்டாங்க பாவிங்க" என்று ஓலமிட்டு அழுது கொண்டிருந்தாள்.

கவலை நெஞ்சை அழுத்தியது. வீதியில் நடந்தேன். தள்ளு வண்டியில் பழங்கள் விற்கும் பியசேன கிழவன் என்னைப் பார்த்து சிநேகிதமாய்ச் சிரித்தான்.

இந்தக் கிழவனுக்கு அரசியல் தெரியாது. இவன் மனதில் இன்னமும் இனவாதம் விதைக்கப்படவில்லை. பாவம் அதனால் தான் இப்படிச் சிரிக்கின்றான் என்று நினைக்கத் தோன்றியது.

காலை எட்டேகால் மணிக்கு வீதி விலத்த முடியாத அளவுக்கு நெரிசலாய்

# கனிமரத்தின் கதை

நல்லவர்க்குப் பயனளிக்கும் கனிமரமாய் நாமிருந்த வேளையிலே.....
நண்பர் எனச் சொல்லி
மெல்ல மெல்ல உறவாடி
மெல்லக் கனி கேட்க
நாமும் கனி தந்தோம்
நல்வர்க்குப் பயனளிக்கும் கனிமரமாய் நாமிருந்த வேளையிலே......

காலச் சக்கரமும் உருண்டோடிச் செல்கையிலே......
கனிமரத்தைக் கேட்காமல்
கனியை நீர் பறிக்க
நண்பர் என நினைத்து
நாமும் பொறுத்திருந்தோம்
காலச் சக்கரமும் உருண்டோடிச் செல்கையிலே......

கிலிகொண்டோமென நினைத்து உள்மனது காட்டிநின்றே.....
கிளை வெட்டி தழை வெட்டி
வேரோடு புரட்டி வெளியெறிந்து
நச்சு மரங்களினை
நாட்ட முனைந்தீர்கள்
கிலிகொண்டோமென நினைத்து உள்மனது காட்டிநின்றே.....

நண்பர் நஞ்சுள்ளம் நாம் கண்டு பொறுமையிழந்திடவே......
உம்மை வெளியகற்றி
கனிமரத்தைக் காத்திடவே
முள்வேலி எல்லையிட நாமும் முடிவு செய்தோம்
நண்பர் நஞ்சுள்ளம் நாம் கண்டு பொறுமையிழந்திடவே......

**- ஆ. பொற்கோ**





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இருந்தது. ஆட்களை உரசும் அளவுக்கு நெருக்கமாய் வாகனங்கள் கடந்து போயின. நான் ஐந்து லாம்படி சந்தி கடந்து இடப்பக்கமாய் பிரதான வீதியில் நடந்தேன்.

எப்படியும் அலுவலகம் போய் கையெழுத்து வைத்துவிட்டோ அல்லது லீவு எடுத்துக் கொண்டோ மணிவண்ணன் பற்றி விசாரிக்கப் போக வேணும். அவங்கள் விடுவாங்கள் என்றும் நம்பி இருக்க முடியாது.

குகதாசனுக்கு தெரிந்தவர்கள் யார் மூலமாவது மணிவண்ணனை எடுத்துத் தரச் சொல்லி கேட்டுப் பார்க்கலாம். அவர் ஏதும் உதவி செய்யக் கூடும். இதே குகதாசன் முன்பு என்றால் ஒருவித மிடுக்குடன் தான் நடந்து கொள்வார், தன்னிலும் பதவி குறைந்தவர்களுடன் அதிகாரத் தோரணையில் தான் கதைப்பார்.

இப்போது அவரிலும் நிறைய மாற்றம். அவரின் உயர் மட்ட பதவிகளில் இருக்கும் சிங்களவர்களுடன் இப்போது இயல்பாக பழக முடியாத நிலையில் தமிழர்களுடன் பதவி வேறுபாடு காட்டாமல் கதைத்துக் கொள்கிறார். இதுவும் ஒரு வகையில் கால மாற்றம்தான்.

பிரதான வீதியின் அத்தனை புடவைக் கடைகளையும் கடந்து மணிக்கூண்டுச் சந்தி வந்து திரும்பி என் அலுவலகம் அடைந்தேன்.

மனதுக்குள் என் வீடு பற்றிய யோசனைகளையும் மீறிக் கொண்டு மணிவண்ணனின் பிரச்சினை......

அலுவலகத்தில் என்னைச் சுற்றிலும் கலகலப்பும் சிரிப்புமாக திரிபவர்களைப் பார்க்க இவர்கள் வேறு ஏதோ உலகத்தில் இருப்பதாகப் பட்டது. சிறிது எரிச்சலாகக் கூட இருந்தது. என்னை மாதிரி கவலை இங்கு எத்தனை பேருக்கு இருக்கிறது? என் அலுவலகத்திலேயே யாருடனும் மனம் விட்டுக் கதைக்க முடியவில்லை. ஒரு அந்நியத்தன்மை இயல்பாய் வந்துவிட்டது.

குகதாசனைத் தேடியபோது இன்று லீவு என்றார்கள். இனி திங்கள் தான் அவரைப் பார்க்கமுடியும்.

எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. லீவு போட்டு விட்டு மறுபடி வீடு வந்தேன். ஏதும் தகவல் தெரியக்கூடுமோ என்ற எதிர்பார்ப்பு...... மணிவண்ணனுக்கு அடித்துக் கிடித்து விடுவார்களோ என்ற தவிப்பு......

வீட்டுக்காரர் சொன்னார் "கடைப் பொன்னம்பலம் திரும்பவும் போயிட்டு வந்தவர். பார்க்க ஒருத்தரையும் விடேலையாம். ஆனா மணிவண்ணனோட சேர்த்து அவற்ற பெடியனையும் வேற கொஞ்சப் பெடியளையும் வானில ஏத்தி கிருலப்பனைக்கு கொண்டு போறாங்களாம். இங்க வந்து சொல்லிப் போட்டுப் போறார்"

ஐந்து லாம்படிச் சந்தியில் பிடித்தவனை கிருலப்பனை வரை ஏன் கொண்டு போனார்கள் என்று புரியவில்லை. கிருலப்பனை போவதானால் இரண்டு பஸ் எடுக்க வேணும். கிருலப்பனைச் சந்தியில் பெரிய சோதனைச் சாவடி. அது கடந்து போக வேணும். அலைச்சல்தான். அந்த அலைச்சலை என் உடம்பு தாங்குமா என்று நான் கவலைப்படவில்லை. உடனே பஸ் எடுத்து வெள்ளவத்தைக்குப் போனேன். வெள்ளவத்தையில் மணிவண்ணன் வேலை செய்த புத்தகக் கடை முதலாளியிடம் அவன் இரண்டு வருஷமாய் அங்கு வேலை செய்வதாய் கடிதம் வாங்கிக் கொண்டு கிருலப்பனைக்குப் போனேன். சந்தியில் சோதனைச் சாவடியில் அடையாள அட்டை காட்டிப் போக வரிசையாய் நிற்க நேரிட்டது.

சுள்ளென்ற வெய்யிலில் வேர்வைப் பிசுபிசுப்புடன் நின்றவர்களின் முகத்தில் அலுப்பும் சினமும் தெரிந்தது. ஏதோ ஒரு வகையில் அந்தக் கால யாழ்ப்பாணத்தை எனக்கு நினைவூட்டியது. இவர்களின் அலுப்பும் சினமும் ஒரு வகையில் சந்தோஷத்தைத் தந்தது. சோதனை முடிந்து வீதியில் சிறிது தூரம் நடந்து அந்தக் கட்டடத்தை நெருங்கினேன்.

வாசலில் விட மறுத்தார்கள். மிகவும் தோரணையுடன் வந்த அதிகாரியிடம் ஆங்கிலத்தில் கதைத்துப் பார்த்தேன்; சிங்களத்தில் கதைத்துப் பார்த்தேன். அவன் இளகுவதாக இல்லை.

"விசாரித்து விட்டு விடுகிறோம். நீ போ.." என்று ஆங்கிலத்தில் உறுமினான்.

ஒரு தடவை மணிவண்ணனைப் பார்க்க அனுமதிக்கும்படி கெஞ்சினேன் முடியாது என்று மறுத்தான். இன்னொரு பச்சை உடைக்காரன் என் தோளைப் பிடித்து வெளியே இலேசாய் தள்ளிவிட்டான்.

என் ஐம்பத்திநாலு வயதுக் காலத்தில் இப்படி ஒரு அவமதிப்பை நான் அனுபவித்ததில்லை.

என்னால் இனி செய்யக்கூடியது எதுவும் இல்லை. மிகுந்த வேதனையுடன் அறைக்குத் திரும்பினேன். இனி மணிவண்ணனின் தலைவிதி. இனி அவன் நிலை என்ன ஆகுமோ? மனதுக்குள் ஒரே கலக்கம்.

சனி, ஞாயிறு முழுவதும் இந்தக் கலக்கத்துடனேயே கழிந்தது.

திங்கள் காலை அலுவலகம் புறப்பட்டு கதவு பூட்டி கீழே இறங்க கடைப் பொன்னம்பலம் எதிரே வந்தார்.

"அண்ணை என்ர பெடியனை ஓடு எண்டு விட்டிட்டாங்களாம். அவன் தான் வந்து சொன்னான் மணிவண்ணனுக்கு ஒரே அடியும் உதையுமாம். இரவு முழுக்க மயக்கத்தில் கிடந்தவனாம். சுவரோட மோதி பின் மண்டை உடைஞ்சிட்டுதாம். ரத்தம் வழியுதெண்டு மருந்து கூட கட்டேல்லையாம். மணிவண்ணன் அழுது கொண்டிருக்கிறானாம். தன்னை எப்பிடியும் வெளியில எடுக்கச் சொல்லி உங்களிட்டச் சொல்லி விடச் சொன்னவனாம்."

கடவுளே.... என்று பதறிப் போனேன்.

"மணிவண்ணனை விசாரிக்க எண்டு வேற எங்காவது கொண்டு போனால் பிறகு எடுக்கிறது கஷ்டம். ஆரையாவது பிடிச்சு அலுவல் பாருங்கோ அண்ணை. ஏதோ என்ர நல்லகாலம் நாலு அடியோட என்ர பிள்ளையை விட்டிட்டார்கள்"

அவனின் தலைவிதி என்று இரண்டு நாளாக அந்தப் பிள்ளையை எப்படி விட்டிட்டு இருந்தேன் என்று என் மீதே கோபம் வந்தது. அடிவயிறு காந்தியது. ஏதாவது செய்ய வேண்டும்; உடனேயே உடனேயே.....

அவசரமாய் படியேறி மறுபடி அறைக்கு வந்து "எக்காரணம் கொண்டும் கொழும்புக்கு வரவேண்டாம், ஸ்கந்தபுரத்திலேயே இருக்கவும்" என்று வீட்டுக்கு கடிதம் எழுதி எடுத்துக் கொண்டு கீழே இறங்கினேன்.

"மணிவண்ணனுக்கு சரியான அடிபாவம்" என்று பொன்னம்பலம் நடைபாதையில் நின்று யாருக்கோ சொல்லிக் கொண்டிருந்தார்.

கடவுளே.... அந்தப் பிள்ளைக்குத் தான் எத்தனை சுமை எத்தனை கவலை.

இப்போது புதிதாய் இந்த அழுத்தம். இதை உடைத்து எப்படியும் என்ன பாடுபட்டும் அந்தப் பிள்ளையை மீட்டு விட வேண்டும்.

அந்தத் தாய்க்கு புத்தி பேதலித்த ஒரு பிள்ளையே இந்த ஜென்மத்துக்குப் போதும். நான் குகதாசனைத் தேடி அவசரமாய் ஓடினேன்.

**தாமரைச்செல்வி**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# புயங்கள் நிமிரும்

– பொன். காந்தன்

நரக இருள்!
பேய்கள் செய்த பிரளயத்தால் இயமமுச்சானது தென்றல்.
வீடா? தெருவா? பள்ளியா? கோவிலா? குளமா?
இடிந்து நொருங்கி சருகேறி காடாகி
பழைய இரகசியங்களின் சொச்சங்கள் போலாகின.
வாசல் தோறும் எஞ்சிய கோலங்களில்
வஞ்சியும், குஞ்சியும் இங்கு வஞ்சனை இன்றி வாழ்ந்ததன்
உரப்புத் தெரியுது.
அவர்கள் கொஞ்சியிருந்த மஞ்சத்தின் மேல்வாய் பிளந்து
வானரங்கள் பாய்ந்ததால் எத்தனை பெரிய கிழிசல்கள்.
வஞ்சியும் குஞ்சியும் எங்கே போனார்கள்?
அண்டங்காக்கா கத்தி, ஊர் நாய் ஊழையிடுகையில்
புரிந்திருப்பார் அவர்கள்
யமக்கடாச் சத்தம் தம் இருப்புக்குள் புகுவதை.
எழுந்த சினத்தில் மண்ணள்ளித் திட்டிவிட்டு
ஊர் பிரியும் வேதனையை
இந்த வீதி தோறும் எழுதிவிட்டு
உள்ளுக்குள் உருக்குலையும் உயிரைக் காப்பதற்கு
பக்கத்தில் உள்ள கானகம் போயுள்ளார்கள்.
வஞ்சிக்கும் குஞ்சிக்கும் தம் முற்றத்தில் குந்தி
கதை பேசி எழாவிடில்
தூக்கம் துளியும் வராதே!
அதனால் வருவார்கள்! விரைவில் வருவார்கள்!!
நெருப்பனும்! நெருப்பியுமாய்!!
இந்த நகர இருள் மேல்
தேயாத நிலவொன்றைச் சிருஷ்டித்தெறிவார்கள்.
தமிழன் புயங்கள் பொருமி நிமிரும்.
அரக்கப் புரங்கள் நோக்கி
தீக்கண்கள் திறக்கும்
கருமிருள் படைக்கும் பிரமாக்களின்
பிடரிகள் பிளந்தெறியப்படும்
கருவிலே திருவுடைய கனவுகள் நிஜமாகும்.
அத்தி முத்துக்களைப் பூக்கும்
பருவகாலப் பறவைகளின்
பாட்டொலி கேட்கும்.
பூபாளத் தேன் பரவும்!
இலைத்துளிர்காலக் குருத்துக்கொரு
குதூகலம் பிறக்கும்.
முற்றங்கள் முகம் கழுவிக் கொள்ளும்.
மஞ்சலும் இஞ்சியும் மணக்கத் தொடங்கும்!
மீண்டும் வஞ்சியும் குஞ்சியும் பிஞ்சுகளை
அணைத்தபடி முற்றத்தில் குந்தயிருக்க
முழு நிலவு ஆனந்திக்கும்.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



அச்சுப்பதிப்பு வாசன் அச்சகம் 0181 - 646 2885

www.tamileelamarchive.com